www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-31 மே '91 6/13 விலை ரூ.2



போலீஸ் அராஜகம்
பஸ் தொழிலாளி போராட்டம்




படிப்பகம்

www.padippakam.com



### தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்:

# புரட்சிகர அமைப்புகளின் போர்க்குணமிக்க பிரச்சாரம்

பத்தாவது முறையாக நம்மை ஏமாற்ற தேர்தல் நடக்கிறது. ரௌடிகளும், வர்த்தக சூதாடிகளும், கள்ளச்சாராய பேர்வழிகளும், லஞ்ச ஊழல் பெருச்சாளிகளும், முதலாளிகளும் அல்லது அவர்களது பினாமிகளும், நடிகர் - நடிகைகளுமே அனைத்துக் கட்சியிலும் வேட்பாளர்களாக ஓட்டுக் கேட்டு ஓடி வருகிறார்கள். நடைமுறைக்கான திட்டமோ அடிப்படையோ எதுவுமில்லாமல் வெற்று வாக்குறுதிகளையும் கவர்ச்சி முழக்கங்களையும் அள்ளி வீசுகிறார்கள். சாதி - மத அடிப்படையிலான ஓட்டு, விளம்பர கம்பெனிகள், கள்ள ஓட்டு, ஓட்டுப்பெட்டிக் கடத்தல், வாக்குச்சாவடியை கைப்பற்றுதல் முதலியவற்றை நம்பியே தேர்தலில் நிற்கிறார்கள்; வெற்றிபெற காத்திருக்கிறார்கள். எனவே, ''இப்போலி ஜனநாயகத் தேர்தலை புறக்கணியுங்கள்; ராஜீவின் பாசிசம் மற்றும் இந்துவெறி பாசிச சக்திகளை முறியடியுங்கள்; புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுங்கள்'' என்று அறைகூவல் விடுத்து மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. போலீசின் அடக்குமுறை, ஓட்டுப் பொறுக்கிகளின் ரௌடித்தனம் - தாக்குதலுக்கு உள்ளாகிய போதிலும் அவற்றை முறியடித்து, உறுதியுடன் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றன.

வேலூர் ம.க. இ.க. சார்பாக 11.5.91 அன்று தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் நடத்த போலீசிடம் அனுமதி கோரப்பட்டது. நீங்கள் கூட்டம் நடத்தினால், சட்டம் ஒழுங்கு கெடும் என்று டி.எஸ்.பி. கூட்டத்திற்கு அனுமதி மறுத்துவிட்டார். அத்துடன் ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து பிரச்சாரம் செய்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இதை அம்பலப்படுத்தி தெருமுனைக் கூட்டம், சுவரொட்டி மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. போலீசையும், ஓட்டுக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி செய்த பிரச்சாரத்தை மக்கள் பெரிதும் வரவேற்றனர்.

திருப்பத்தூரில் 29.4.91 அன்று தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டத்தை புதிய கலாச்சாரம் வாசகர் வட்டம் நடத்தியது. தோழர் சிவானந்தம் தலைமையில் தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றினார். ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டங்களையும் அவற்றின் ரௌடி அரசியலையும் அம்பலப்படுத்தி பேசினார். 200-க்கும் மேற்பட்ட மக்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு தந்தனர்.

சென்னையில் ம.க.இ.க. தோழர்கள் நகரில் சுவரெழுத்து பிரச்சாரம் மேற்கொண்டனர். பொதுமக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்றதால் ஓட்டுக்கட்சிகள் சுவரெழுத்தை அழித்துவிட்டு ஓடிவிடுகின்றனர். பேடிகளின் கண்ணாமூச்சி விளையாட்டை முறியடித்து தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. மேலும் ஆட்டோ - சைக்கிள் ரிக்ஷாக்களில் ஒலிபெருக்கி வைத்து பிரச்சாரம் செய்ய அனுமதி மறுத்துள்ளார் போலீசு கமிஷனர். பிரச்சார உரிமைப் பறிப்பை அம்பலப்படுத்தியும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

## ம.க.இ.க.வினர் மீது சாராய கும்பலின் கொலைவெறித் தாக்குதல்

கள்ளச்சாராய விற்பனைக்கு பெயர் போன வில்லிவாக்கத்தில், சாராயம் குடித்துவிட்டு சாலையோரங்களிலும், ரயிலடியிலும் தொழிலாளர்கள் படுத்து கிடப்பதை சாதாரணமாகப் பார்க்க முடியும். பலர் போதையில் ரயில் விபத்துக்குள்ளாகி இறந்துள்ளனர். போலீசின் முழு ஒத்துழைப்போடு இங்கு கள்ளச்சாராயம் அமோகமாக விற்பனையாகிறது. இத்தொழிலில் பல குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

கள்ளச்சாராயம், நல்லச் சாராயம் விற்பனையை எதிர்த்து ம.க.இ.க. தொடர்ந்து போராடி வருகிறது. இதன் தீமைகளை எடுத்து விளக்கி பிரச்சாரம் செய்து வருகிறது. பிரச்சாரத்தைக் கேட்ட சிலர் சாராய விற்பனையையே நிறுத்தி விட்டனர். இதனால் எரிச்சலடைந்த சாராய வியாபாரி ராஜசேகர், வட்டிக்காரனும் காங்கிரசு பிரமுகருமான முத்துராஜ் இவர்கள் கூட்டாளி நாராயணன் ஆகியோர் ம.க.இ.க. எழுதியிருந்த தேர்தல் புறக்கணிப்பு சுவரெழுத்து மீது சுவரொட்டி ஒட்டினர். அதை கிழித்த ம.க.இ.க. தோழர் பாண்டியனை கீழ்த்தரமாக திட்டியதோடு 30 பேரை சேர்த்துக் கொண்டு வந்து கொலைவெறியோடு தாக்கினர். இதை தட்டி கேட்கப்போன ம.க.இ.க. தோழர் சீராளனையும் அசிங்கமாக திட்டினர்.

ஆனால் தோழர்கள் உறுதியுடன் நின்று பிரச்சினையை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அம்பலப்படுத்தினர். பின்னர் நாராயணன் வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார். மற்ற இருவரையும் பகுதி மக்களே திட்டி கண்டிக்கவே அடங்கிப் போனார்கள்.



# மே நாள்: ஊர்வலம் - சிறையினுள் புரட்சிகர நிகழ்ச்சி

மே தினம் - தொழிலாளர்கள் தினம்! உலகத் தொழிலாளர்களின் அரசியல் ஆர்ப்பாட்ட நாள்! ஆனால் முதலாளித்துவக் கட்சிகளும், போலி கம்யூனிஸ்டுகளும் இந்நாளை தீபாவளி, பொங்கல் போல் கொண்டாடி அதன் போர்க்குணமிக்க உள்ளடக்கத்தை கொச்சைப்படுத்தினார்கள். புரட்சியாளர்களோ அதன் உண்மையான உள்ளடக்கத்தில் அரசியல் யுத்த தந்திர முழக்கத்துடன் பிரச்சாரம் செய்து வர்க்க உணர்வோடு எளிமையாக நடத்தினர். தொழிலாளர்களையும், உழைக்கும் மக்களையும் அரசியல்படுத்த முயற்சித்தனர்.

சென்னையில் மே தின ஊர்வலம் சுமார் 50 பேர் கொண்டு நடத்தப்பட்டது. ஊர்வலம் ஐ.சி.எப் பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திற்கு வந்தடைந்து, ம.க.இ.க கொடியேற்றியபின் மீண்டும் தொடர்ந்தது. ஆனால் பாதியிலேயே போலீசு தடுத்து ஊர்வலத்தை அனுமதிக்க மறுத்ததால். போலீசின் அடக்குமுறையை அம்பலப்படுத்திய தெருமுனைக் கூட்டதோடும் எழுச்சிமிக்க பாடல்களோடும் முடித்துக் கொள்ளப்பட்டது.

கோவையில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் தொடர்பாக மூன்று தோழர்கள் கைதானதாலும், மற்ற தோழர்களை போலீசு கைது செய்ய முயற்சித்துக் கொண்டிருந்ததாலும் ம.க.இ.க மே தின ஊர்வலம் நடத்த முடியாமல் போனது. இருப்பினும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. கைதான தோழர்கள் சிறையில் கைதிகளைக் கூட்டி வைத்து பாடல்கள் பாடி - பேசி மே தினத்தைச் சிறப்பித்தனர். இதைக் கண்ட ஜெயில் வார்டன் பாடுவதற்கு அனுமதியில்லையென தடுத்தார். பேசுவதற்கோ பாடுவதற்கோ அனுமதி மறுக்கும் சிறை விதிமுறைகளை காட்டுங்கள் என்று தோழர்கள் கேட்டதும் வாயடங்கிப் போனார். பின்னர் தோழர்களை சிறையின் வேறு பிரிவுக்கு மாற்றிவிட்டனர்.

திருப்பத்தூரில் புதிய கலாச்சாரம் வாசகர் வட்டத்தினர் மே தின முழக்கங்களை சுவரொட்டி வாயிலாக நகரெங்கும் எடுத்துச் சென்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

13

16-31 மே '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:

செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பது துப்பாக்கிகள்தாம்!

தேர்தல் வன்முறைகள் குறித்த பீதி நாட்டைக் கவ்விக் கொண்டுவிட்டது. இந்த முறை தேர்தல் திருவிழாவில் 'ஜனநாயக தேவி'யின் வரம்பெறுவதற்காக அரசியல் கட்சிகளின் பூசாரிகள் எவ்வளவு நரபலிகள் தரப்போகிறார்களோ! ஏற்கனவே தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்திலேயே நூறுக்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். இந்த வகையிலே முதலிடம் வகிக்கும் பீகாரோடு உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், அரியானா, குஜராத் மற்றும் ஆந்திரா ஆகிய ஆறு மாநிலங்கள் பதட்டமிகுந்த - கண்காணிக்கப்பட வேண்டியவைகளாக தேர்தல் கமிஷன் குறிபோட்டிருக்கிறது. பஞ்சாபிலும் அசாமிலும் பல அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக்கிடையே தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு பணிகள் துவங்கியபோதும் கூடுதலான படைகளின் அவசியம் கருதி அங்கே தனித்தனியே அடுத்தமாதம் தேர்தல்கள் நடக்கவுள்ளன. ஜம்மு - காஷ்மீரில் தேர்தலே சாத்தியமில்லை என முடிவாகிவிட்டது.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட போது நாடு முழுவதும் 300 தொகுதிகளை பதட்டமிகு - கண்காணிக்கப்பட வேண்டியவைகளாக மத்திய அரசும் தேர்தல் கமிசனும் அறிவித்தன. இரண்டே வாரங்களில் மேலும் 148 தொகுதிகளை அவற்றோடு சேர்த்து விட்டன. 'மிகவும் மோசமாகிப் பாதிக்கப்பட்டவை', 'மோசமாகப் பாதிக்கப்பட்டவை' 'பாதிக்கப்பட்டவை' என்று இந்த 448 தொகுதிகளை வகைபிரித்து அதற்கேற்ப மத்திய, மாநிலத் துணை இராணுவத்தை நிறுத்தப் போகிறார்கள்; இங்கெல்லாம் பதட்டம் நிலவுவதாகவும் தீவிரவாதிகள், சாதி - மத சக்திகளின் நடவடிக்கைகளால் இத்தொகுதிகளின் தேர்தல்கள் பாதிக்கப்படும் என்கிறார்கள்.

இவை தவிர இவற்றைவிட முக்கியமாக சட்ட விரோத - கிரிமினல் மஃபியா கும்பல்களை வைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் தேர்தல் அராஜகம் - வன்முறை வெறியாட்டங்கள் முன்னுக்கு வந்துள்ளன. எதிர்த்தரப்பினரைத் தேர்தல் பிரச்சாரம் செய்யவிடாமல் அடித்து விரட்டுவது; அவர்களது அலுவலகங்களை சூறையாடி, வாகனங்களைத் தாக்கிக் கொளுத்துவது; முக்கியப் பிரமுகர்களையும் வேட்பாளர்களையும் கூட கொலை செய்வது — இவை தேர்தலின்போது நடக்கும் அராஜகம் - வன்முறைகள். தேர்தல் நாளன்று வாக்குசாவடிகளைக் கைப்பற்றி கொள்வது; வாக்குச் சீட்டுகளைக் கத்தையாகப் பிடிங்கு முத்திரை குத்திப் பெட்டியில் போடுவது; இது சாத்தியமில்லை என்றால் வாக்குப் பெட்டிகளை பறித்துக் கொண்டு போய்விடுவது. அடுத்த நாள் வாக்கு எண்ணும் இடத்துக்குள்ளேயே புகுந்து சூறையாடுவது. இத்தனைக்கும் ஒத்துழைக்காத அதிகாரிகள், பணிந்து போக எதிர்த்தரப்பினரைச் சுட்டுக் கொல்வது.

தேர்தலுக்குத் தேர்தல் அதிகரித்து வரும் இந்த அராஜகம் வன்முறைகள் இந்த முறை பன்மடங்காய் இருக்கும் என அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று குற்றஞ்சாட்டுகின்றன. இதற்காக முக்கியமான சட்டவிரோத - கிரிமினல் மஃபியத் தலைவர்களையே எல்லாக் கட்சிகளும் தேடிப் பிடித்து பல தொகுதிகளில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளன. இந்தக் கும்பல்களிடம் ஒவ்வொரு தேர்தல் தில்லுமுல்லு, வன்முறை, அராஜக செயலுக்கும் விலைபேசி ஒப்பந்தம் போட்டுள்ளன. வட மாநிலங்களில் திடீரென்று நாட்டுத் துப்பாக்கிகள் தயாரிக்கும் உள்ளூர் பட்டறைகளும் வியாபாரிகளும் பெருத்துவிட்டன.

இந்த வகையிலே பீகார் அரசு முன்னிலை வகிப்பதாகவும், அங்குள்ள ஜனதா தள அரசாங்கத்தை அகற்றிவிட்டு ஆளுநர் ஆட்சியைப் பிரகடனப்படுத்த வேண்டும்; அல்லது அங்கு தேர்தல்களைத் தள்ளிவைக்க வேண்டும் என்று தேசிய முன்னணி 'இடது' சாரி கூட்டணி தவிர பிற கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கோருகின்றன. இதுவரையிலான தேர்தல் கொலைகள், அத்வானி, ராஜீவ், முலயாம் சிங் யாதவ் ஆகிய எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான தாக்குதல், ஆயுதத் தொழில்கள் பெருகி தனியார்படைகள் அதிகமாக கட்டப்படுவது ஆகியன பீகாரில் தேர்தல்கள் நடத்த முடியாத அளவு சட்டம் - ஒழுங்கு கெட்டுப் போனதற்கு சான்றாகக் கூறப்படுகின்றன. ஆனால் உத்திரப்பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களிலும் இதே நிலைமைதான் நிலவுகின்றதென ஜனதா தளத்தின் எதிர்க்குற்றச்சாட்டை யாராலும் மறுக்க முடியவில்லை.

தேர்தல்கள் ஜனநாயக பூர்வமாகவும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதற்காகத்தான் அரசியல் சட்டமும் தேர்தல் கமிசனும் பல நெறிமுறைகளையும், நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன. ஆனால் எந்தவொரு அரசியல் கட்சியும், மத்திய - மாநில அரசுகளும் அவற்றுக்குக் கீழ்படிவதே கிடையாது. தெரிந்த - பகிரங்கமாகவே மீறுகின்றன. அவ்வளவு ஏன்? தேர்தல்களை நடுநிலையோடு நடத்தப் பொறுப்பேற்றுள்ள தலைமைத் தேர்தல் கமிசனர் உட்பட அதன் கீழ்உள்ள அதிகாரிகளும், தேர்தல்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய போலீசு, துணை இராணுவம், ஊர்க்காவல்படை ஆகியனவே வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்து தேர்தல் தில்லுமுல்லுகள் - முறைகேடுகளுக்கு உடந்தையாக இருக்கின்றனர். பீகார் ஜனதா தள அரசின் ஊர்க்காவல்படையே "யாதவ் சேனை"யாக மாறிச் சாதி தேர்தல் சண்டை நடத்துகிறது என்றால் உத்திரப்பிரதேச ஆயுதக் காவல்படையே "ராமன்படை"யாகி இந்து மதவெறிக் கலவரங்கள் - படுகொலைகள் புரிகிறது; அரியானா டி.ஐ.ஜி. உட்பட போலீசுக் கூட்டமே கள்ள ஓட்டுப்போடும் சமூகவிரோதக் கும்பலாக உள்ளது.

இலவச - கவர்ச்சித் திட்டங்கள், "வீடியோ - ஆடியோ" ரதயாத்திரைகள், "மண்டல்", "நிலையான ஆட்சி" "ராமன்கோவில்" ஆகிய இவை அனைத்தை கூட நம்பாது வெற்றியை உத்திரவாதப்படுத்துவதற்காக சமூகவிரோத - சட்டவிரோத - கிரிமினல் மஃபியா கும்பல்களை இறுதி ஆயுதமாகக் கொண்டு தேர்தல் சூதாட்டம் நடத்துகிறார்கள். இது ஜனநாயகம் அல்ல. சாதி மத பலம், ஆள் - ஆயுதபலத்தை வைத்து நடத்தப்படும் போலி ஜனநாயகம். எனவே,

**போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!**
**புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்!**

படிப்பகம்

www.padippakam.com

## சட்டமன்ற-நாடாளுமன்றத் தேர்தல்கள்:



# கருப்புப்பண திருவிழா!

**தேர்தல் வந்துவிட்டால் பெரு முதலாளிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை கோடி கோடியாய் வாரியிறைத்து தமக்குச் சாதகமான கட்சியை அல்லது வேட்பாளரை ஏலத்தில் எடுக்கிறார்கள். அனைவருக்கும் வாக்குரிமை என்ற மூடுதிரையின் பின்னே நடக்கும் இந்த மோசடி ஒவ்வொரு தேர்தலிலும் மேலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.**

தேர்தல் நெருங்கி விட்டது. மக்களை ஏய்ப்பதிலும் புளுகுவதிலும் யார் திறமைசாலி என்பதற்கான போட்டியில் எல்லா ஓட்டு கட்சிகளும் மும்முரமாக இறங்கியுள்ளன. பதவிக்கு வந்த பிறகு ஏய்ப்பதற்கு முன்னோடியாக, தேர்தலின் போதே அவர்கள் இந்த மோசடியைத் தொடங்கி விடுகிறார்கள்.

தேர்தல் கமிஷன் வரையறுத்துள்ள வரம்பை மீறாமல் தேர்தல் செலவுகளைச் செய்வதாக எல்லா வேட்பாளர்களும் வேட்புமனு தாக்கல் செய்யும்போது உறுதியளிக்கின்றனர். ஆனால் எந்த ஒரு பெரிய கட்சியும் அதை மதித்து நடந்ததாக வரலாறில்லை. ஒரு மிகப்பெரிய தொகுதியில் பாராளுமன்றத்துக்குப் போட்டியிடும் ஒரு வேட்பாளார் அதிகபட்சம் ரூ.1,50,000 தான் தனது தேர்தல் பிரச்சாரத்துக்குச் செலவிட வேண்டுமென்று தேர்தல் கமிஷன் வரையறுத்துள்ளது. ஆனால் அதைவிட 15, 20 மடங்கு அதிகமாகவே ஒவ்வொரு வேட்பாளரும் செலவு செய்கின்றனர். தேர்தல் கமிஷன் வரையறுத்துள்ள வரம்பை மீறியதாக நிரூபிக்கப்பட்டால் அவர்களின் தேர்தல் வெற்றி செல்லாது. இதை அறிந்திருந்தபோதிலும் வரம்புக்குட்பட்டு செலவு செய்ததாக கூசாமல் அவர்கள் பொய்க்கணக்கு காட்டி ஏய்க்கின்றனர். ஏனெனில் அவர்கள் வாரியிறைக்கும் அத்தனையும் கருப்புப் பணம்.

ஆட்சியாளர்களின் கள்ளக் குழந்தையான கருப்புப் பணம் இந்திய ஓட்டுக்கட்சி அரசியலின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிவிட்டது. இன்றைய உத்தேச மதிப்பீட்டின்படி தேசிய கட்சிகள் ஒவ்வொன்றும் சராசரி 500 கோடி ரூபாய் வரை இத்தேர்தலில் செலவிட உள்ளன. பிராந்திய கட்சிகள் ஒவ்வொன்றும் சராசரி ஏறத்தாழ 50 - 60 கோடி ரூபாய் வரை செலவிட உள்ளன.

இப்படி கோடிக்கணக்கில் வாரியிறைக்கப்படும் பணம், விவசாயம் - தொழில் போன்ற எந்த ஒரு ஆக்கபூர்வ திட்டத்திற்கும் செலவிடப் படுவதில்லை. தீபாவளி பட்டாசு கொளுத்தி கரியாக்குவதைப்போல, விளம்பரம், போஸ்டர், கொடி, 'வீடியோ' சினிமா, வாகனச் செலவு, குண்டர்களுக்குத் தீனி என்று அழிவு வேலைக்காகவே நாசமாக்கப்படுகிறது.

இன்றைய நிலையில் ஒரு சுவரொட்டி விலை 4 ரூபாய். ஒரு வேட்பாளருக்கு ஒரு லட்சம் சுவரொட்டிகள் தேவை. சாதாரண 'பிளாஸ்டிக்' கொடிகள் கட்டுவதென்றாலே அதற்கு மட்டும் குறைந்தது ரூ 2 லட்சம் செலவிட வேண்டும். உள்ளூர் நாளிதழ்களில் ஒருபக்க அளவுக்கு விளம்பரம் செய்ய 10 முதல் 20 லட்சம் ரூபாய் தேவை. அரை மணி நேரத்திற்கு ஓடும் 'வீடியோ' சினிமா தயாரிக்க 30 லட்சம் ரூபாய் தேவை. இதை பல பிரதிகள் எடுத்து 'வீடியோ' ஊர்திகள் மூலம் தொகுதி முழுவதும் திரையிட குறைந்தது ஒரு வண்டிக்கு 5 லட்சம் ரூபாய் செலவாகும். வேட்பாளர்களின் பிரச்சாரத்துக்காக கார், ஜீப்புகளின் வாடகை மற்றும் பெட்ரோல் செலவுகளுக்காக குறைந்தபட்சம் 5 லட்சம் ரூபாய் தேவை. முக்கிய புள்ளிகள் என்றால் 10 லட்சம் வரை செலவாகும்.

25 அடி உயர கட்-அவுட் தயாரிக்க 30,000 ரூபாய் செலவாகிறது. ஒரு தொகுதிக்கு 5 கட்-அவுட்கள் என்றால் கூட ஒன்றரை லட்சம் தேவை. இதே போல பேனர்கள், சுவரெழுத்து விளம்பரங்கள் செய்ய 5 லட்சம் தேவை. இவை தவிர 'ஸ்டிக்கர்கள்' பொட்டுகள், சாவிக் கொத்துகள், தொப்பிகள், பிரசுரம், பாடல் 'கேசட்' முதலானவற்றுக்கு மேலும் ஒரு 5 லட்சம் செலவிட வேண்டும்.

தேர்தல் வேலை செய்யும் கட்சித் தொண்டர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.25 கூலியாகத் தரப்படுகிறது. ஒரு வேட்பாளருக்கு 500 பேர் ஒருமாத காலத்துக்கு வேலை செய்தால் ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் தேவை. இது தவிர குண்டர்களுக்காக இன்னுமொரு 5 லட்சம் செலவிட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நாடாளுமன்றத்துக்குப் போட்டியிடும் ஒரு வேட்பாளர் இத்தேர்தலில் குறைந்தபட்சம் 50 லட்சம் ரூபாய் வரை செலவிடுகிறார்.

1984 தேர்தலின்போது காங்கிரசுக் கட்சி மத்தியிலிருந்து ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரச்சார செலவுக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியது. சுவரொட்டி, கொடிகள்; விளம்பரச் செலவுக்காக மேலும் ஒரு லட்சம் அளித்தது. இதன்படி மொத்த நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் சேர்த்து ஏறத்தாழ 11 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. இது தவிர முக்கிய பிரமுகர்களின் தேர்தல் வெற்றிக்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 'ரீடிஃப்யூஷன்' விளம்பர நிறுவனத்தின் மூலம் செய்த விளம்பரங்களுக்காக 3 கோடி செலவிடப்பட்டது. கட்சியின் தேர்தல் நிர்வாகப் பணிகள் மற்றும் திட்டமிடுதல் முதலானவற்றுக்காக 2 கோடி ஒதுக்கப்பட்டது. மொத்தத்தில் கடந்த தேர்தலில் 19 கோடி ரூபாய் செலவிட்டதாக உத்தேச மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஆனால், உண்மையில் செலவிட்டது 500 கோடி ரூபாய்.

இப்போதைய தேர்தலில் ஒரு பாராளுமன்ற வேட்பாளருக்கு 10 லட்சம் வரை செலவு செய்ய காங்கிரசு கட்சி தீர்மானித்துள்ளது. இதன்படி மொத்த நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் சேர்த்து 50 கோடி ரூபாய் தேவை. இதுதவிர வீடியோ சினிமா பிரச்சாரத்துக்காக 8 கோடி ரூபாயும்; முக்கிய பிரமுகர்களின் தேர்தல் வெற்றிக்காக 10 கோடி ரூபாயும், நிர்வாகச் செலவு, விமான வாடகை முதலானவற்றுக்காக 5 கோடி ரூபாயும் செலவிட தீர்மானித்துள்ளது.

இது பாரளுமன்ற தேர்தல் செலவுகளுக்கு மட்டும்தான். இப்போது நடைபெற உள்ள தமிழக, மே.வங்க, உ.பி. கேரள மாநில சட்டசபை தேர்தல்களுக்காக மேலும் ஒரு 50 கோடி ரூபாய் செலவிட உள்ளது. மத்தியிலிருந்து ஒதுக்கப்படும் தொகை தவிர ஒவ்வொரு வேட்பாளரும் பல்வேறு வழிகளில் வசூல் வேட்டை நடத்தி செலவிடும் தொகை 75 கோடி ரூபாய்க்கும் மேலிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. ஆக மொத்தம் 200 கோடி ரூபாய் வரை காங்கிரசு கட்சி மட்டும் செலவிட உள்ளதாக கூறிக் கொள்கிறது. ஆனால், உண்மையில் 700 கோடி ரூபாயைத் தாண்டி விடும்.

பரம்பரையாக ஆண்டுவரும் பணக்கார கட்சியான காங்கிரசு இவ்வளவு செலவிடும்போது எதிர்க்கட்சிகளான பாரதீய ஜனதா, ஜனதாதளம், சந்திரசேகரின் ஜனதா கட்சி ஆகியன இதில் பாதியளவுக்கு செலவிட்டால் கூட சராசரி 500 கோடி ரூபாய் இத்தேர்தலில் பாழடிக்கப்பட உள்ளது. இந்தக் கணக்கில் பிராந்தியக் கட்சிகள் செலவிடும் தொகை சேர்க்கப்படவில்லை. அதையும் சேர்த்தால் தலை கிறுகிறுக்கும்.

இந்தக் கணக்குகூட உத்தேச மதிப்பீடுதான். உண்மையில் செலவிடப்படும் தொகை இதைவிட அதிகமாகவே இருக்



படிப்பகம்

www.padippakam.com

கும். ''இன்றைய நிலையில் கிராமப்புற தொகுதிகளுக்கு 5 லட்சம் ரூபாயும், நகர்ப்புற தொகுதிகளுக்கு 25 லட்சம் ரூபாயும் செலவிட்டால்தான் வெற்றி பெற முடியும். போட்டி கடுமையாக உள்ள தொகுதிகளில் ஒரு கோடி ரூபாய் வரை செலவிட வேண்டியிருக்கும்'' என்கிறார் பீகாரைச் சேர்ந்த முன்னாள் காங்கிரசு எம்.பி.

சரி; இவ்வளவு பணமும் இவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? கட்சி ஊழியர்களிடமும் மக்களிடமும் உண்டியல் ஏந்தி நன்கொடை திரட்டினால்கூட அதிகபட்சம் பத்து கோடி ரூபாயைத் தாண்டாது. தரகுப் பெரு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், வர்த்தக சூதாடிகளிடமிருந்துதான் ஓட்டுக்கட்சிகள் 90% நிதியைத் திரட்டுகின்றன. தேர்தல் வந்துவிட்டால் பெருமுதலாளிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை வாரியிறைத்து தமக்கு சாதகமான கட்சியை அல்லது வேட்பாளரை ஏலத்தில் எடுக்கிறார்கள். தமக்கு எதிரான கட்சியை அல்லது வேட்பாளரை தோற்கடிக்கிறார்கள். அனைவருக்கும் வாக்குரிமை என்ற மூடுதிரையின் பின்னே நடக்கும் இந்த மோசடி ஒவ்வொரு தேர்தலின்போதும் மேலும் மேலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

''பெருமுதலாளிகளிடமிருந்து எல்லா கட்சிகளும் தேர்தல் நிதி திரட்டுகின்றன. அதில் தவறேதுமில்லை. உலகெங்கும் நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பு உள்ள நாடுகளில் இந்த நடைமுறை தொடர்கிறது'' என்று 1988ல் ராஜீவ் இதை நியாயப்படுத்தினார். அம்பானி - இந்துஜா கும்பல் ஏலத்தில் எடுத்த சந்திரசேகரின் ஆட்சி, தரகுப் பெருமுதலாளிகள் மட்டுமின்றி, சர்வதேச கிரிமினல் - மாஃபியாக்களிடமிருந்து கூட பகிரங்கமாக ''நன்கொடை'' பெற்றுக் கொண்டு இந்திய அரசியலில் ஒரு புதிய பாரம்பரியத்தை உருவாக்கியது. இவ்வாறு வெளிப்படையாக இல்லாவிட்டாலும், எல்லா பெரிய ஓட்டுக் கட்சிகளும் பெரு முதலாளிகளிடம் கருப்புப் பண நன்கொடை பெறத் தவறுவதில்லை.

காங்கிரசு கட்சிக்கு நன்கொடை அளிக்க திருபாய் அம்பானி, ஆதித்ய பிர்லா, ஆர்.பி.கோயங்கா, விஜய் மல்லைய்யா, இந்துஜாக்கள் என்று நீண்ட வரிசையில் தரகுப் பெருமுதலாளிகள் உள்ளனர். பெரிய கைகளை கட்சித் தலைமை நேரில் சந்தித்து நன்கொடை பெற்றுக்கொள்ளும். இரண்டாம் மட்டத்திலுள்ள முதலாளிகளிடமிருந்து வசூலிப்பதற்காக சதிஷ்சர்மா, ராஜேஷ்பைலட், லலித்சூரி,முரளி தேவ்ரோ முதலான காங்கிரசு தரகுத் தலைவர்கள் உள்ளனர். பம்பாய் தரகுப் பெருமுதலாளிகள் கடத்தல் மஃபியாக்கள் மற்றும் சர்க்கரை ஆலை அதிபர்களிடமிருந்து கருப்புப் பணத்தைக் கறப்பதற்கு மகாராஷ்டிர முதல்வர் உள்ளார். இதுதவிர மாநில அளவில் வசூல் வேட்டை நடத்துவதற்கு ஆங்காங்கே உள்ளூர் தலைவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாவுக்கு நன்கொடை அளிக்க பல பனியா - மார்வாரி முதலாளிகள் உள்ளனர். ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கி




தொழிற்துறைக்கு மேலும் பல சலுகைகள் அளித்து வளர்ப்போம்'' என்று பாரதீய ஜனதா வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. பம்பாய், கல்கத்தாவிலுள்ள பெருமுதலாளிகளிடம் இதை விளக்கி கடந்த மாதத்தில் அத்வானியும், முன்னாள் எம்.பி. விரேன்ஷாவும் நன்கொடை திரட்டினர். டெல்லி, பம்பாய், நாக்பூர் முதலான நகரங்களில் ஒரே நாளில் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு சிறிய வியாபாரிகளிடம் பாரதீய ஜனதா வசூல் வேட்டை நடத்தியுள்ளது. இதுதவிர வெளி நாடுகளில் வாழும் இந்துக்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து நூறு கோடிக்கணக்கில் வசூலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாரதீய ஜனதா ஆட்சி செய்வதால் உள்ளூர் முதலாளிகளிடம் வசூல் வேட்டை நடத்துவதற்கு சாதகமானதாக உள்ளது.

வரி ஏய்ப்பு செய்யும் முதலாளிகளிடம் திடீர் சோதனை நடத்தி கருப்புப் பணத்தைக் கைப்பற்றப் போவதாக சவடால் அடிக்கும் வி.பி.சிங்கின் ஜனதாதளக் கட்சி, தனது தேர்தல் செலவுகளுக்குக் கருப்புப் பண முதலைகளைத் தான் நம்பியுள்ளது. அலகாபாத் இடைத் தேர்தலின்போது வி.பி.சிங் வெற்றிக்காக பலகோடி ரூபாய் வாரியிறைக்கப்பட்டது. அன்று ஆட்சியில் இல்லாத போதே, அவரது கட்சி பலமாக இல்லாத போதே இவ்வளவு பெருந்தொகை புரண்டது என்றால் இப்போது வசூலாகும் தொகையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வடமாநிலங்களில் வசூல் வேட்டை நடத்த சந்தோஷ் பாரத்தியா, சோம்பால், ராஜ்பாபர் ஆகியோர் உள்ளனர். தெற்கே கர்நாடகத்தில் சாராய அதிபர்களிடம் நன்கொடை வாங்க ஹெக்டே இருக்கிறார். ஜாட் நிலப் பிரபுக்களிடம் அஜித்சிங்கும் பிற்பட்ட தாழ்த்தப்பட்டோரில் வசதியானவர்களிடம் ராம் விலாஸ் பஸ்வான், சரத் யாதவ் ஆகியோரும் கோடிக்கணக்கில் நிதி திரட்டுவதில் பேர் பெற்றவர்கள். இதுதவிர எக்ஸ்பிரஸ் கோயாங்காவிடமிருந்தும் கணிசமான நன்கொடை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆட்சியாளர்களின் கள்ளக் குழந்தையான கருப்புப் பணம் இந்திய ஓட்டுக் கட்சி அரசியலின் பிரிக்க முடியாத அங்கமாகி விட்டது. இன்றைய உத்தேச மதிப்பீட்டின்படி தேசிய கட்சிகள் ஒவ்வொன்றும் சராசரி 500 கோடி ரூபாய் வரை இத்தேர்தலில் செலவிட உள்ளன. பிராந்திய கட்சிகள் ஒவ்வொன்றும் சராசரி 50-60 கோடி ரூபாய் வரை செலவிட உள்ளன.**

கிரிமினல் - மாஃபியா கும்பல்களின் கூட்டாளிகளான சந்திரசேகர் கட்சிக்கு 'நன்கொடை'யை பற்றி கவலையில்லை. சர்வதேச ஆயுத பேரத்தரகன் கஷோகியிலிருந்து மோசடிப் பெருமுதலாளி அம்பானி வரை அனைவரும் அதன்கூட்டாளிகள். இதுதவிர ஜாட்நிலப் பிரபுக்களிடமிருந்து தேவிலால் பெருமளவு 'நன்கொடை' திரட்டிவிடுவார்.

ஆளும் வர்க்க 'தேசிய' கட்சிகள் அளவுக்கு இல்லாவிட்டாலும், போலிக் கம்யூனிஸ்டுகளும் இதே பாணியில் வசூல் வேட்டை நடத்திவருகின்றனர். குறிப்பாக வங்கத்தில் ஜோதிபாசுவின் தொழில் அமைதி நிலவும் ஆட்சியை தரகு பெருமுதலாளிகள் வரவேற்கின்றனர். 'மார்க்சிஸ்டு' ஆட்சியில் ஆதாயமடைந்த அம்பானி, ஆர்.பி. கோயங்கா, தர்பாரி சேத் முதலான தரகு பெருமுதலாளிகள் ஏற்கனவே ரகசியமாக நன்கொடை அளித்துள்ளனர். இதுதவிர கல்கத்தா நகராட்சி மூலம் ஆதாயமடைந்த 'கான்டிராக்டர்'களும், முதலாளிக

படிப்பகம்

www.padippakam.com

ளும் 'மார்க்சிஸ்ட்'கட்சிக்கு கோடிக்கணக்கில் நன்கொடை வழங்கியுள்ளனர். கட்சி ஊழியர்கள் மூலம் ஒவ்வொரு வியாபாரியிடமும் ரூ. 500 முதல் ரூ.5000 வரை நன்கொடை ரசீது போட்டு தேர்தலுக்காக தண்டல் வசூலிப்பது என்பது இன்னொரு உத்தி. இப்படி கோடிக்கணக்கில் பணம் புரள்வதால், ஆளும் வர்க்க கட்சிகளுக்குப் போட்டியாக இம்முறை 'மார்க்சிஸ்ட்' கட்சியும் 'வீடியோ' சினிமாமூலம் பிரச்சாரம் செய்யுமளவுக்கு முன்னேறிவிட்டது.

அரசியலை ஆட்டிப்படைக்குமளவுக்கு கருப்புப்பணம் தேர்தல்களில் முக்கிய பங்காற்றும்போது இந்திய அரசியல் சட்டம் அதை அங்கீகரிக்கவே செய்கிறது. தேர்தலில் ஒரு வேட்பாளர் அதிக பட்சம் ஒன்றரை லட்சம் ரூபாய் வரை மட்டுமே செலவு செய்யலாம் என்று தேர்தல் கமிஷனின் விதிகள் கூறுகின்றன. ஆனால், அதற்கே எதிராக எந்தவொரு முதலாளித்துவ நிறுவனமும் தனது லாபத்தில் 5% வரை அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கலாம் என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது.

முதலாளிகள், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைப் பற்றி 1956 சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பின்னர் 1960-ல் ரூ.25,000 வரை நன்கொடை அளிக்கலாம் என்று கம்பெனிகள் சட்டத்தில் புதிய ஷரத்து சேர்க்கப்பட்டது. பின்னர் 1969ல் முதலாளிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கத் தடை விதிக்கப்பட்டது. பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்தபிறகு 1985ல் மீண்டும் முதலாளிகள் தமது லாபத்தில் 5%வரை நன்கொடை தரலாம் என்று அங்கீகரிக்கப்பட்டது. ''வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் நமது ஜனநாயகத்தில் தமக்குரிய பங்கை ஆற்ற சட்டப்பூர்வ உரிமையளிப்பது'' என்று ஆட்சியாளர்களால் இது நியாயப்படுத்தப்பட்டது.

இப்படி நேரடியாகவும் மறைமுகமாகவும் தரகு பெருமுதலாளிகளிடமிருந்து கருப்புப்பண நன்கொடை பெறும் ஓட்டுக் கட்சிகள்தான் கருப்புப் பணத்தை ஒழிக்கப் போவதாகவும், முதலாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்து சோசலிசத்தை நிறுவப் போவதாகவும் கூசாமல் புளுகுகின்றன. கடந்த தேர்தலில் தரகு முதலாளி அம்பானி, காங்கிரசுக் கட்சிக்கு 200 கோடி ரூபாய் நன்கொடை அளித்தார் என்று 'சண்டே'' என்ற காங்கிரசு எடுபிடி பத்திரிக்கையே ஒப்புக் கொண்டது. மற்றொரு தரகுப் பெருமுதலாளி பிர்லா, 60 காங்கிரசு எம்.பிக்களின் தேர்தல் செலவுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று அம்பானியின் ''சண்டே அப்சர்வர்'' எழுதியது. இப்போதைய தேர்தலில் இது மேலும் ஒரு மடங்கு அதிகரிக்கும் என்றே பத்திரிகைகைகள் எழுதுகின்றன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தாயகமான பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை பெருமுதலாளிகள் பலமுறை விலைபேசினர் என்று அந்நாட்டு வரலாறு கூறுகிறது. அந்த திசையை நோக்கி இந்தியாவின் கருப்புப்பண ஜனநாயகம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

● மனோகரன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

# தேர்தல் அறிக்கைகள்: சர்வகட்சி மோசடி!

இலவச - கவர்ச்சித் திட்டங்கள், பொருளாதார - தொழில் - நிதிக்கொள்கைகள், ஒருமைப்பாடு - ஐக்கியம் மீதான அக்கறை ஆகியவற்றில் அனைத்து அரசியல் கட்சிகளினது தேர்தல் அறிக்கைகளும் நிலைப்பாடுகளும் ஏறக்குறைய வேறுபாடின்றி இருப்பதைக் கடந்த இதழில் பார்த்தோம். இதனாலும் இதைவிட முக்கியமாகவும் இந்தக் கட்சிகளும், கூட்டணிகளும் ஒவ்வொன்றும் தனக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய முழக்கங்களை முன்வைத்துள்ளன. காங்கிரசுக்கு நிலையான ஆட்சி; பாரதீய ஜனதாவுக்கு ராமர் கோயில்; தேசிய முன்னணி - 'இடது'சாரி கூட்டணிக்கு மண்டல் அறிக்கை. ஆனால் இவற்றில் கூட ஒவ்வொரு கட்சியும் கூட்டணியும் வேறுபாடுகளைக் குழப்பி ஆதாயம் தேடுவதையே இவர்களது தேர்தல் அறிக்கைகள் காட்டுகின்றன.

**பார்தீய ஜனதாக் கட்சி எழுதும்
புதிய அகராதி: புதுப்புது அர்த்தங்கள்.**

இதுவரை ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதாக் கட்சி, விசுவ இந்து பரிசத், பஜ்ராங் தள், சிவசேனா ஆகியவை நடத்தி வந்த இந்து மதவெறி பயங்கரவாதப் படுகொலைகள், கலவரங்களின் பலன்களை அறுவடை செய்து கொள்ளுவது என்று பாரதீய ஜனதாக் கட்சி முடிவு செய்துள்ளது. எனவேதான் இந்துத்துவம், இந்து ராஷ்டிரம், இராம ராஜ்ஜியம் ஆகிய இந்து மதவெறி பாசிச சித்தாந்ததைப் பகிரங்கமாக முன் வைக்கிறது. இதற்கேற்ப தேசியம், தேசிய ஒருமைப்பாடு, தேசியக் கலாச்சாரம் மற்றும் மதச்சார்பின்மை ஆகியவற்றுக்குப் புதுப்புது அர்த்தங்கள் கற்பித்து புதிய அகராதி எழுதுகிறது.

பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி தவிர பிற அரசியல் கட்சிகள் அனைத்தும் சிறுபான்மை மதத்தினரை, குறிப்பாக முஸ்லீம்க



ளைத் திருப்திப்படுத்தும் வகையில் பல சிறப்பு உரிமைகளும் சலுகைகளும் வழங்கி வருவதுதான் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் காரணம் என்கிறது பா.ஜ.க. பிற கட்சிகளின் சிறுபான்மை வாதம்தான் காஷ்மீர், பஞ்சாப் போன்ற பிரிவினை இயக்கங்கள் தோன்றக் காரணமாக உள்ளன; இப்போது போலீசு துணை இராணுவத்தை மத அடிப்படையில் கட்டுவதாக ஜனதாவும், சிறுபான்மை மதத்தினருக்கு இடஒதுக்கீடு செய்வதாக காங்கிரசும் கூறுகின்றன. இந்தக் கட்சிகள் பின்பற்றும் சிறுபான்மைவாதம் - போலியான மதச்சார்பின்மையைக் குறிக்கிறது; பெரும்பான்மை மதத்தினரான இந்துக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று பா.ஜ.க. ஒப்பாரி வைக்கிறது.

ஆகவே, காஷ்மீருக்குச் சிறப்பு உரிமைகள் வழங்கும் 370-வது பிரிவு அரசியல் சட்டத்தை ரத்து செய்வது; மத அடிப்படையிலான தனி - குடும்பச் சட்டங்களை ரத்து செய்து, பொதுக் குடியுரிமை - குடி மக்கள் சட்டம் கொண்டுவருவது; சிறுபான்மையினரது கமிஷனை கலைத்துவிட்டு பொதுவான மனித உரிமைகள் அமைப்பை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களை பா.ஜ.க. அறிக்கை கொண்டுள்ளது. இவ்வளவு நாளும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரம் செய்து வந்த இந்து மதவெறி அரசு அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு பகுதிதான் இத்திட்டங்கள்.

இந்து மதப்பாரம்பரியப் பண்பாடுதான் இந்திய தேசியப் பண்பாடு என்றும் ராமன் இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் சின்னம் என்றும் பகிரங்கமாகக் கூறுகிறது பா.ஜ.க. இந்து ராஷ்டிரம் என்பது இராம ராஜ்ஜியம்-அதை நிறுவுவதுதான் தனது லட்சியம் என்று பிரகடனப்படுத்தியுள்ளது. ''வாழ்க்கையின் எல்லா அச்சங்களிலிருந்தும் விடுதலை என்பதுதான் எனது சபதம்'' என்றான் ராமன்; ஆகவே பிரிவினை, பயங்கரவாதம், சுரண்டல் பண்பாட்டுத் தனித்துவத்தை இழப்பது ஆகிய பயத்திலிருந்து விடுதலை பெறுவது இந்தியாவுக்கு - இந்துக்களுக்கு அவசியம் என்கிறது பா.ஜ.க.

ஆனால் சிறுபான்மையினரது உரிமைகள் - சலுகைகளைப் ப்றிப்பது மட்டுமல்ல, தேசிய இன விடுதலை உணர்வுகள் - இயக்கங்களை அரசு பயங்கரவாத பாசிச முறையில் ஒடுக்குவதுதான் தீர்வு என பா.ஜ.க. தேர்தல் அறிக்கை பகிரங்கமாகவே கூறுகிறது. உதாரணமாக பஞ்சாப் பிரச்சினைக்கு பா.ஜ.க.வின் தீர்வைப்பாருங்கள்: ''இந்தியா பாக். எல்லையில் தீவிரவாதிகள், கடத்தல்காரர்கள், அபாயகரமான ஆயுதங்கள் நடமாடுவதைத் தடுப்பதற்கு எல்லை



படிப்பகம்

www.padippakam.com

நெடுக ஒரு கிலோ மீட்டர் அகலத்துக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்படும்; கடுமையான கலவரப்பகுதிகளில் இராணுவம் நிறுத்தப்படும்''. காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வைப் பாருங்கள்: ''காஷ்மீரில் நிலைமைகள் திருந்திய பிறகு, பாகிஸ்தானிய சக்திகளை ஒழித்துக்கட்டிய பிறகு சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்படும்''.

இதே போல அசாம் பிரச்சனைக்கான பா.ஜ.க.வின் தீர்வைப் பாருங்கள்.: ''வடகிழக்கில் குறிப்பாக போடோ, உல்ஃபா பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்தியா - வங்கதேச எல்லை நெடுகிலும் மின்சாரம் பாயும் முள்கம்பிச் சுருள் வேலி போடப்படும்''. ஆந்திராவில் நக்சல்பாரிகள் பிரச்சினைக்கான தீர்வாக, ''தெலுங்கானாப் பிரச்சினையின் ஆணிவேரைக் கிண்டிப்பார்த்து, சட்டத்தை மதியாத சக்திகளை ஒடுக்கி, சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்படும்''.

இவையெல்லாம் காட்டுவதென்ன? பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ஜியோனிச - யூதமதவெறி இஸ்ரேலிய அரசு கடைப்பிடிக்கும் பாசிச - இராணுவ ஒடுக்குமுறையைப் போலவே ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பாசிச - இராணுவ ஒடுக்கு முறைதான் பஞ்சாப், காஷ்மீர், அசாம், நக்சல்பாரி இயக்கம் ஆகியவற்றுக்கு பா.ஜ.க. முன்வைக்கும் தீர்வு. இப்படிச் செய்தால் சிறுபான்மையினரது பயங்கரவாத எதிர்த்தாக்குதலும், புரட்சியாளர்களது மக்கள் யுத்த எழுச்சியையும் தான் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிவரும்.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது இந்து மதவெறி பாசிசப் பிரச்சாரத்துக்கும், ஓட்டுப் பொறுக்கவும் மைய முழக்கமாக அயோத்தி - ராமர் கோவில் விவகாரத்தை வைத்துள்ளது. ''ராமனது பிறப்பிடத்தில் ராமனுக்கு கோவில் கட்டுவது நமது கலாச்சாரப் பாரம்பரியத்தையும் தேசிய சுயமரியாதையையும் நிலைநாட்டுவதற்கான சின்னம் என்று பா.ஜ.க. உறுதியாக நம்புகிறது. இது முழுக்க முழுக்க ஒரு தேசியப் பிரச்சினை; இதற்கு ஒரு குறுங்குழு மற்றும் வகுப்புவாத சாயம் பூசும்படி எந்தவொரு சுயநலச் சக்தியையும் அனுமதிக்க மாட்டோம். எனவே, ராமஜன்ம பூமியின் மீது கட்டப்பட்டுள்ள பாபரி (மசூதி) கட்டிடத்தை அதற்குரிய மரியாதையோடு வேறு இடத்தில் அகற்றி வைப்போம்; அது இப்போதிருக்கும் ராமஜன்மபூமியில் ராமன் கோவில் கட்டுவோம்; இதில் பா.ஜ.க. உறுதியாக இருக்கிறது''.

பாபர் மசூதியை இடித்து விட்டு அங்கே ராமன் கோவில் கட்டப்போவதை வேறு வார்த்தைகளில் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கும்பல் பகிரங்கமாக அறிவித்துள்ளது. அயோத்தி மட்டுமல்லாது காசி, மதுரா, ஆகிய நகரங்களில் உள்ள மசூதி இடங்களையும் இந்துக்களிடம் ஒப்படைத்துவிடும்படி முஸ்லீம் தலைவர்களிடம் பேசிச் சாதிப்போம் என்கிறது பா.ஜ.க.

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். இந்துமத வகுப்புவாதத்தை எதிர்ப்பதாகவும் மதச்சார்பின்மைக்காகப் பாடுபடுவதாகவும் பிற பெரிய அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் கூறுகின்றன. ''ராம ஜன்மபூமி - பாபரி மசூதி'' பிரச்சினைக்கு இந்தக் கட்சிகள் எல்லாம் ஒரே தீர்வுதான் கூறுகின்றன. ''இது பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதற்கு முயற்சிக்கப்படும். இல்லையானால் சட்டபூர்வமாக, நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று அதன்படி தீர்க்கப்படும். 1947, ஆகஸ்டு 15ந் தேதிக்கு முன்பு இருந்த அந்தந்த மதவழிபாட்டுத் தலங்கள் அவ்வாறே பாதுகாக்கப்படும், அவற்றின் மீது வேற்று மதத்தவர் உரிமை பாராட்டக்கூடாது என்று சட்டம் கொண்டு வரப்படும்'' என்று தான் காங்கிரசு, தேசிய முன்னணி - 'இடது' சாரி கூட்டணி, சமாஜவாதி ஜனதா கட்சி தேர்தல் அறிக்கைகள் கூறுகின்றன.



பாசிச ராஜீவ்; அரசியல் வாரிசு ராகுல் காந்தியுடன்

அதே சமயம் அயோத்தியிலுள்ள பாபரி மசூதியை இடிக்காமல், அங்கு ராமனுக்கு கோவில் கட்டவேண்டும் என்ற இந்துக்களின் உணர்வை மதிப்பதாக இந்தக் கட்சிகள் எல்லாம் வாக்குறுதியளிக்கின்றன.

உண்மையில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் கிளப்பிவிடும் மதவெறியைக் கண்டு ஒருபுறம் அஞ்சி சமரசம் செய்து கொள்வது; மறுபறம் மதச்சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்பு மற்றும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு பற்றிப் பேசி முஸ்லீம்களின் ஓட்டுக்களை கவர்வது - இது தான் இந்த அரசியல் கட்சிகள் அனைத்தினதும் நிலைப்பாடு.

இல்லையானால் இந்து மதவெறி கும்பல் பாபரி மசூதிக்கு உரிமை பாராட்டிக் கலவரங்கள் - படுகொலைகள் நடத்துவதற்காக ''ராம ஜன்ம பூமி - பாபரி மசூதி'' தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்று ஏன் இந்தக் கட்சிகள் அங்கீகரிக்க வேண்டும்? அதிலும் அது ராம ஜன்ம பூமிதானா? அங்கு ராமன் கோவில் இருந்து இடிக்கப்பட்டதா? அப்படி இருந்தால் 400 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவத்துக்கு இப்போது பரிகாரம் தேட முயல்வது முறைதானா? என்கிற கேள்விகளை எழுப்பி, அவற்றின் மீது இந்தக்கட்சிகள் தமது நிலைப்பாட்டை வைக்கவில்லை. இந்து மத வெறியைக் கண்டஞ்சி நடுநிலையாளர்களாகி இருமதத் தரப்பினரிடையேயான பிரச்சினைக்கு எப்படி தீர்வு காண்பது என்று தான் பேசுகின்றன. அதோடு ''இந்து மத உணர்வை மதிப்பது'' என்கிற நிலைக்கு போகின்றனர்.

கேரள முஸ்லீம் லீக், ஆந்திர முஸ்லீம் மஜ்லீஸ், காஷ்மீர் ஃபரூக்கின் தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது காங்கிரசு; டில்லி ஜும்மா மசூதி இமாம் விதித்த நிபந்தனையை ஏற்று வேட்பாளர்களைத் தெரிவு செய்வது, தேசிய முன்னணி - 'இடது' சாரி கூட்டணிக்கு வாக்களிக்கும்படி மதகுரு உத்திரவு போடச் செய்வதுவரை போகிறது ஜனதா தளம். எஞ்சிய உள்ளூர் முஸ்லீம் தலைவர்களுடனும் - சீக்கிய தீவிரவாதிகளுடனும் பேரம் பேசுகிறது சமாஜவாதி ஜனதா கட்சி. காங்கிரசோ கட்டம் கட்டமாக ராமன் கோவில் கட்டுவதற்கு துணைபோய் இந்து மதவெறி ஓட்டுக்களைக் கவரவும் முயலுகிறது.

இவ்வாறு, பகிரங்கமான மதவெறியைத் தூண்டி பா.ஜ.க.வும் போலித்தனமான மதச்சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்பு பேசி பிறகட்சிகளும் ஓட்டுப் பொறுக்க முயலுகின்றன என்பதையே அவற்றின் தேர்தல் அறிக்கைகளும், நடத்தையும் காட்டுகின்றன.

### தே.மு.வின் பதவி வேட்டைக்கான ஓர் ஆயுதம் மண்டல் அமலாக்கம்

இட ஒதுக்கீடு - மண்டல் அறிக்கை அமலாக்கம், மதச்சார்பின்மை ஆகிய இரண்டும் உத்திரவாதமிக்க ஓட்டு வங்கியை உருவாக்கும்; அவற்றை வைத்துத் தேர்தல்களில் வெற்றி பெற்று விடலாம்; இந்த அடிப்படையில்தான் தேசிய முன்னணி - 'இடது'சாரி கூட்டணியின் தேர்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து மத வகுப்புவாத அமைப்புகளிடம்

படிப்பகம்

www.padippakam.com



சினிமா – 'கிரிக்கெட்' பிரபலங்கள், கிரிமினல்களை நம்பித் தேர்தல் போட்டிகள்.

தேசிய முன்னணி அரசு கடுமையாக நடந்து கொண்டதனால்தான் அயோத்தி பாபரி மசூதி அவற்றின் தாக்குதலில் இருந்து தப்பியது; அத்வானியைக் கைது செய்து அவரது ரதயாத்திரையைத் தடுத்ததால்தான் தனது அரசு கவிழ்க்கப்பட்டது; அயோத்தி பாபர் மசூதியைத் திறந்து விட்டும் அங்கு செங்கல் பூஜை நடத்தி ராமன் கோவில் கட்டுவதற்கு இந்துமத வகுப்புவாதிகளை ஊக்குவித்தது காங்கிரசுதான்; ஆகவே வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணிதான் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பான ஆட்சி தர முடியுமென அதன் தேர்தல் அறிக்கை கூறுகிறது. கூடவே சிறுபான்மை இனக் கமிசனுக்கு அரசியல் சட்டத் தகுதி வழங்குவதாகவும் வக்ஃப் மற்றும் மதக் கட்டளைச் சொத்துக்களுக்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் இருந்து விலக்கு அளிப்பதாகவும் வாக்குறுதியளிக்கிறது.

ஆட்சிக்கு வந்ததும் தாழ்த்தப்பட்டோர் - மலைவாழ் மக்களின் நாடாளுமன்ற இட ஒதுக்கீட்டை மேலும் நீட்டித்தது; நாடாளுமன்றத்தில் அம்பேத்கார் படம் திறந்தது; அம்பேத்கார் நூற்றாண்டு விழா நடத்தி, அவருக்கு ''பாரத் ரத்னா'' விருது வழங்கியது; தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்குப் பல நல்வாழ்வுத் திட்டங்களோடு, அவர்களுக்கான சிறப்புக் கமிசனுக்கு அரசியல் சட்டத் தகுதி வழங்கியது — ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி இப்பிரிவினரின் ஆதரவு கோருகிறது தேசிய முன்னணி. தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் நலனுக்குத் திட்ட ஒதுக்கீட்டில் முன்னுரிமை; இவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத பதவிகளுக்கு உடன் நிரப்ப சட்டம்; இதற்கு எதிரான அதிகாரிகளுக்குத் தண்டனை தருவது — ஆகியவை தே.மு. அறிக்கையைவிடக் கூடுதலான ''இடது''சாரி அணியினரது சேர்க்கை.

இறுதியாக, முக்கியமாக மண்டல் அறிக்கை முழுமையாக அமலாக்கப்படும்; அதாவது மத்திய அரசில் பிற்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு; அதோடு மண்டல் அறிக்கையில் காணப்படும் ''குறைபாடு''களை களைய ஒரு தனிக்கமிட்டி அமைக்கப்படும் என்கிறது தே.மு. அறிக்கை. இதன் பொருள் என்னவென்றால், மண்டல் அறிக்கையின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் ''விடுபட்டு''ப்போன ஜாட் முதலிய வட இந்தியாவில் உள்ள சில பெரிய சாதிகளை புதிதாகச் சேர்த்துக் கொள்ள வகை செய்யப்படும் என்கிறது.

இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியான வகுப்புக்களிலும் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்; மண்டல் அறிக்கையிலோ, வேறு இட ஒதுக்கீட்டிலோ இடம் பெறாத பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு 5 முதல் 10 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து தரப்படும் என்றது தே.மு. - ''இடது''சாரி கூட்டணி.

''சமூக நீதி'', ''சமூக சமத்தும்'' ''மக்களுக்கு அதிகாரம்'' என்று அலங்காரம் செய்வதோடு பின்வரும் சித்தாந்த விளக்கமும் தருகிறது தேசிய முன்னணி- ''ஆட்சி நிர்வாக அமைப்பில் ஒடுக்கப்பட்ட வகுப்புக்கள் தமக்குரிய நியாயமான பங்கைப் பெற்றால்தான் அவர்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் எஜமானர்களாக முடியும்''.

**தேர்தல் களத்தில் குதித்துள்ள அரசியல் கட்சிகள் கூட்டுக்கள் ஒவ்வொன்றும் தனக்கெனத் தன்மையுடைய முழக்கங்களை முன்வைத்துள்ளன. ஆனால், இவற்றில் கூட இவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குழப்பி ஆதாயம் தேடுகின்றன.**

இவ்வாறு தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள், பிற்பட்ட மக்கள் மற்றும் சிறுபான்மை மதத்தினர் மீது தே.மு. - 'இடது' சாரி கூட்டணி அக்கறை காட்டுவதெல்லாம் அவர்களின் 'மதிப்புமிக்க' ஓட்டுக்களைக் குறி வைத்துத்தான் என்பது பகிரங்கமான உண்மை. இதற்குக் காரணம் 1989 நவம்பர் தேர்தல்களுக்காக வட இந்தியாவில் பெரும்பான்மை சாதிகளான ஜாட், ராஜபுத்திரர், யாதவ், குஜ்ஜார் ஆகிய நான்கு சாதித் தலைவர்கள் - அமைப்புகளை முன்னிறுத்தி தேவிலால் - வி.பி.சிங் கும்பல் வகுத்திருந்த தேர்தல் உத்தி அங்கே பெருமளவு வெற்றி தேடித்தந்தது; இவற்றோடு அயோத்தி விவகாரத்தில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலோடு சமரசம் - சதி செய்து இந்து ஓட்டுக்களைக் கவர்ந்து காங்கிரசு வெற்றிபெற முயன்றதானது, முஸ்லீம் மக்களை ஜனதா தளத்திடம் தள்ளிவிட்டது.

இந்தப் படிப்பினையையும், வட இந்தியாவில் சரண்சிங் நடத்திவந்த சாதிக் கூட்டணி அனுபவமும்தான் தே.மு. - ''இடது'' சாரி கூட்டணியின் மேற்படி தேர்தல் உத்திக்குக் காரணம். கடந்த தேர்தல்களில் சாதியக் கூட்டணியை மறைத்து லஞ்ச ஊழல் - பரிசுத்த வேடங்கட்டி ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்தது தே.முன்னணி. இப்போது பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் சிறுபான்மை மதத்தினர் கூட்டணி என்கிற பெயரில் பகிரங்கமாகவே வந்துள்ளது. ஆட்சியைப் பிடிக்க ஊழல் ஒழிப்பை ஒரு ஆயுதமாக பயன்படுத்தியதைப்போலத்தான் ''சமூக நீதி'' ''சமூக சமத்துவம்'', ''மக்களுக்கு அதிகாரம்'' என்பதை இன்னொரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறது தேசிய முன்னணி - ''இடது''சாரி கூட்டணி. இதை எதிர்த்து நிற்கும் காங்கிரசும், பாரதீய ஜனதாவும் மேல்சாதி, இந்து மதவெறி அடிப்படையிலானவையாக இருப்பது இக்கூட்டணிக்கு மிகவும் வசதியாகி விட்டது.

ஆனால், இந்தக் கட்சிகளும் கூட ஓட்டுப் பொறுக்குவதற்காக சிறுபான்மை மதத்தினரின் பாதுகாப்பு மற்றும் மண்டல் அறிக்கை ஆதரவு நீலிக் கண்ணீர் வடிக்கின்றன. சிறுபான்மை மதத்தினருக்கு இட ஒதுக்கீடு செய்து தருவதாக காங்கிரசு கூறுகிறது. அயோத்தி, காசி, மதுரா மசூதிகள் விவகாரத்தையே கூட முஸ்லீம் தலைவர்களுடன் பேசித் தீர்ப்பதாக பா.ஜ.க. கூறுகிறது.

தே.மு. ''இடது''சாரிக் கூட்டணி தவிர பிற பெரிய கட்சிகள் எல்லாமே உண்மையில் மண்டல் அறிக்கைக்கு எதிரானவை. ஆனால், எல்லாமே இதற்கு மாறாக மண்டல் ஆதரவு வாக்குறுதிகள் வழங்கியுள்ளன. கல்வியிலும் சமூகத்திலும் பின்தங்கிய சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டை எதிர்க்காத அதேசமயம் அச்சாதிகளிலேயே ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு செய்து தரப்போவதாக காங்கிரசு தேர்தல் அறிக்கை கூறுகிறது; அதோடு முற்பட்ட சாதிகளில் ஏழைகளுக்கும், சிறுபான்மையினருக்கும் இட ஒதுக்கீடு



படிப்பகம்

www.padippakam.com

கிறிஸ்துவ தன்னார்வக் குழுவின் உதவியு டன் இயங்குகிறது. 1800 பேரைக் கொண்ட இந்த முகாமில் நூலகம், மருத்துவ உதவி மையம், சிறுவர்களுக்கான பாடசாலை ஆகி யன உள்ளன. அகதிகளாக வந்த படித்த இளைஞர்களே பாடங்களை நடத்துகின்ற னர். இதுதவிர சந்திரஹாசனால் தொடங்கப் பட்ட ''ஈழ அகதிகள் மறுவாழ்வுக்கான அமைப்பு'' (OFERR) சில உதவிகளைச் செய்வதோடு வெவ்வேறு முகாம்களில் பிரிந்து கிடக்கும் குடும்பங்களை ஒன்றி ணைக்கவும் உதவி வருகிறது.

மற்றபடி வேறெந்த உதவியும் அரசிட மிருந்தோ, இதர அமைப்புகளிடமிருந்தோ கிடைப்பதில்லை. பிழைப்புக்கான வேலை வாய்ப்பு அகதிகளுக்கு அறவே இல்லை. அனிச்சன் குப்பத்திலுள்ள பெண்கள் தையல் வேலைகளைச் செய்து ஓரளவு வரு வாய் ஈட்டுகின்றனர். மரக்காணம் அருகி லுள்ள தோணிமேடு முகாமிலுள்ள மீனவர் கள் அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்களுடன் சேர்ந்து கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். சில இளைஞர்கள் பல்பொடி தயாரித்து விற் பது, ஐஸ்கிரீம் தயாரிப்பது, முகாமிலேயே பெட்டிக்கடைகள் வைப்பது முதலான தொழில்களில் ஈடுபடுகின்றனர். மற்றபடி பெரும்பாலான மக்களுக்கு வேலை கிடைப் பதில்லை.

எல்லாவற்றையும்விட, சிங்கள இனவெறி ராணுவத்திடமிருந்து தப்பிவந்த ஈழத்தமிழ் பெண்களில் சிலர் இந்திய போலீசால் நான் காண்டுகளுக்கு முன்பு கற்பழிக்கப்பட்டனா கடலூரிலும் தூத்துக்குடியிலும் ஆலைகளில் வேலை தருவதாகச் சொல்லி பல ஈழ அகதி கள் சுரண்டப்பட்டு வீதியிலே வீசியெறியப் பட்டனர். வேலூரில் ஒரு ஈழ இளைஞரின் சிறுநீரகம் ஒரு போலீசுக்காரருக்காகத் திரு டப்பட்டது. அரசின் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்காக பல ஈழ அகதிகள் கட்டாய அறுவை சிகிச்சைக்கு இழுத்துச் செல்லப்படு கின்றனர். நொந்த மாட்டை காக்கை கொத்து வது போல இந்தியாவில் ஈழத் தமிழ் அகதி கள் இப்படி பல வழிகளிலும் துன்புறுத்தப்ப டுகிறார்கள்.

ஈழத் தமிழர்களின் அவல நிலை பற்றி நீலிக் கண்ணீர் வடித்த கருணாநிதி அரசு ஆட்சிக்கு வந்த புதிதில் சில ஆரம்ப சூரத்த னங்களைக் காட்டியதே தவிர, அதன்பிறகு ஈழ அகதிகளைப் பற்றி வாய் திறக்கவே யில்லை. தமிழக மக்களுக்கு ஒழுங்காக ரேஷனில் உணவுப் பொருட்களை வழங்க வக்கற்ற கருணாநிதி அரசு, அகதிகளுக்கு மட்டும் முறையாக வழங்கிவிடுமா என்ன? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, அகதிகளுக்கு வழங்கப்பட்ட தரமான அரிசி பின்னர் புழுத்த அரிசியாகிறது. இப்போது கவர்னர் ஆட்சியில் அதுவும் கூட முறை யாக வழங்கப்படுவதில்லை.

'வந்தாரை வாழவைக்கும் பண்பாடு மிக்க' தமிழகத்தில் இன்று ஈழத் தமிழ் அகதி கள் மூன்றாந்தர குடிமக்களாக வதைகின்ற னர். கடந்த ஆண்டில் அகதிகள் தமிழகத் துக்கு வந்து குவிந்தபோது, நிவாரண முகாம்களுக்குச் சென்று ஆறுதல்கூறி ஆதா யமடைந்த ஓட்டுப்பொறுக்கிகளும், ஈழ ஆதரவு இயக்கப் பிழைப்புவாதிகளும்



மழைக்காலத்தில் எங்கே சமைப்பது? இற்றுவிடும் நிலையிலுள்ள கனகராம்பட்டு பொது சமையற்கூடம்.

அதன்பிறகு அவர்களை ஏறெடுத்தும் பார்க் கவில்லை.

குறிப்பாக சோ,ஜெயலலிதா - வாழப் பாடி - தா.பாண்டியன் கும்பல், புலிகளின் நடவடிக்கைகளைக் காட்டி ஈழ விடுதலை யையே எதிர்த்து, தார்மீக உதவிகள் செய்வ தைக்கூட தேச விரோதச் செயலாக சித்தரிக் கிறது. ஈழ ஆதரவு இயக்கத்தினரை பிரி வினை வாதிகளாகச் சித்தரித்து கடுமையாக எதிர்க்கிறது. பாசிச ராஜீவ் - சந்திர சேகர் கும்பல் இன்னும் ஒருபடி மேலே போய் புலிகளுக்கு கருணாநிதி அரசு உதவுவதாகக் கூறி அதைக் கலைத்ததோடு, போரில் சிக்கி யுள்ள ஈழ மக்களுக்கு எந்த உதவியும் நேரடி யாகவோ மறைமுகமாகவோ கிடைக்காத படி தடுத்து தமிழக கடற்கரைப் பகுதிகளில் காவற்படைகளை நிறுத்தியுள்ளது. இதன் மூலம் ஈழ விடுதலை இயக்கங்களை சுற்றிவ

ளைத்து நசுக்க சிங்கள பேரினவாத அரசுக் இந்தியா உதவியுள்ளது. மேலும் அகதிக பெருமளவில் குவிவதால் ஏற்படும் சுமை யைக் காட்டி இலங்கையிலேயே அகதிக முகாம் அமைக்க ஆலோசித்து வருகிறது இந்திய - ஈழத் துரோகிகளின் உதவியுட தமிழ் அகதிகளை மீண்டும் சிங்கள இ வெறியர்களின் பிடியில் ஒப்படைக்கும் ஏ பாடுதான் இது.

ஈழ விடுதலையை ஆதரிக்கும் எந் ஒரு அமைப்பும் தனி நபர்களும் ஈழ அக கள் இங்கே வதைப்படுவதைக் கண் வாளாவிருக்க முடியாது. ஈழ அகதிகளி நல்வாழ்வு - நிவாரணத்துக்காக மட் மின்றி, இந்திய - இலங்கை ஆதிக்க வெ யர்களின் கூட்டுச் சதிகளுக்கு எதிராகவு போராட வேண்டியது இன்றைய அவ அவசியக் கடமையாக உள்ளது.

மறுபுறம், ஈழ அகதிகளை அரசிய ரீதியில் பயிற்றுவித்து இந்திய - இலங்ை ஆதிக்க வெறியர்களின் சதிகளை அம்பல படுத்த எந்த ஒரு ஈழ விடுதலை போரா கள் அமைப்பும் தயாராக இல்லை. அகதி ளின் அவல நிலை பற்றி கண்ணீர் வடிப்ப லும், அற்ப உதவிக்ளைச் செய்து அவ றைப் பெருமையாகப் பீற்றிக்கொள்வ லுமே அவர்கள் குறியாக உள்ளனர்.

''என்ன இருந்தாலும் இலங்கை எம தாய்நாடு. நாங்கள் பிறந்து வளர்ந்து பல்கி பெருகிய பூமி. காலம் ஒரு நாள் மாறு அப்போது மகிழ்வுடன் எங்கள் தாயகத்து குத் திரும்புவோம்'' என்று நம்பிக்ை யோடு கூறுகின்றனர் இங்குள்ள அகதிகள் ஈழஅகதிகளை அரசியல்படுத்தாமல் இே நிலையில் இருத்தி வைத்திருந்தால் நாளை அவர்களின் நம்பிக்கை பொய்த்துப் போவ தோடு, இந்திய - இலங்கை ஆதிக்க வெ யர்கள் மற்றும் ஈழத் துரோகிகளின் சதி ளுக்கு அவர்கள் இரையாக நேரிடும். அது ஈழ அகதிகளை பழிவாங்குவதுடன் ஈழ விடுதலையையும் கா கொள்வதாகிவிடும்.

● குமா

ஈழத் தமிழ் பெண்களில் சிலர் இந்திய போலீசாரால் நான்காண்டுகளுக்கு முன்பு கற்பழிக்கப் பட்டனர். ஆலைகளில் வேலை தருவதாகச் சொல்லி பல ஈழ அகதிகள் சுரண்டப்பட்டு வீதியிலே வீசியெறியப் பட்டனர். வேலூரில் ஒரு ஈழ இளைஞரின் சிறுநீரகம் ஒரு போலீசுக்காரருக்காகத் திருடப்பட்டது. அரசின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக பல ஈழ அகதிகள் கட்டாய அறுவை சிகிச்சைக்கு இழுத்துச் செல்லப் படுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# சாதிய கூட்டணிக்கு முற்போக்கு சாயம்

*தமிழகத் தேர்தலில் சாதி ரீதியிலான புதிய கூட்டணியாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைமையில் மூன்றாவது அணி உருவாகியுள்ளது. பிழைப்பு வாதிகளும் போலிப் புரட்சியாளர்களும் அதற்கு முற்போக்கு சாயம் பூசி கொள்கை பூர்வ கூட்டணியாக சித்தரிக்கின்றனர்.*

சாதி ரீதியான புதிய கூட்டணியாக பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் 'தோழமை'க் கட்சிகளும் மூன்றாவது அணியாக தமிழகத் தேர்தலில் போட்டியிடுகின்றன. பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியக் குடியரசுக் கட்சி (பிரகாஷ் அம்பேத்கார் பிரிவு), நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கம், அப்துல் சமதுவின் முஸ்லீம் லீக், பழனி பாபாவின் ஜிகாத் கமிட்டி, பண்ருட்டி ராமச்சந்திரன் கோஷ்டி ஆகியன கூட்டுச் சேர்ந்து இப்புதிய அணியை உருவாக்கியுள்ளன. தி.மு.க - போலிக் கம்யூனிஸ்ட்டுகள், அ.தி.மு.க - காங்கிரசு கூட்டணிக்கு எதிரான கொள்கை பூர்வமான லட்சியக் கூட்டணியாக அவர்கள் தங்களைப் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர்.

ஓட்டுக் கட்சிகளிடையே கூட்டணிகள் முறிவதும், புதிய கூட்டணிகள் - பேரங்கள் நடப்பதும், கட்சி மாறுவதும் ஒவ்வொரு தேர்தலிலும் நாம் சந்தித்து வரும் கூத்துக்கள் தான். இருப்பினும் வன்னியர் சங்கமாக இருந்து, சில தாழ்த்தப்பட்ட அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து உருவாகியுள்ள பாட்டாளி மக்கள் கட்சி கடந்த 4, 5 ஆண்டுகளில் பிரபலமாகி, கணிசமான அளவுக்கு சாதி மக்களைத் திரட்டி செல்வாக்கும் பெற்றுள்ளது. தமிழகத்தின் வடமாவட்டங்களில் பல தொகுதிகளின் தேர்தல் முடிவுகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு இக்கட்சி பலம் பெற்றுள்ளது.

குறுகிய காலத்திலேயே இந்த அளவுக்கு அரசியல் செல்வாக்கு பெற்றுவிட்ட இக்கட்சியின் கொள்கை—லட்சியம் என்ன? ''கடந்த 40 ஆண்டுகளாக மத்தியிலும் மாநிலங்களிலும் இருந்த கட்சிகள் தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களின் நலன்களைப் புறக்கணித்துவிட்டன. இந்தக் கட்சிகள் எல்லாம் பார்ப்பன - பனியா மற்றும் மேல்சாதிக் கட்சிகள். இவர்களின் ஆட்சியில் ஒடுக்கப்படும் மக்களுக்கு சமூகநீதி கிடைக்கவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி சமூக உரிமையை நிலைநாட்டும். பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மற்றும் மத - மொழிச் சிறுபான்மையினரை ஐக்கியப்படுத்தி ஆட்சியைப் பிடிப்போம்'' என்று பிரகடனப்படுத்தியுள்ளார் அதன் தலைவர் 'டாக்டர் அய்யா' ராமதாசு.

**பண்ருட்டி ராமச்சந்திரன், ராமதாசு, அப்துல் சமது - சாதிய பிழைப்புவாத கூட்டணியின் தலைவர்கள்.**



## முற்போக்கு முலாம்

சில மாஜி புரட்சியாளர்களும், அவர்களின் போதனை பெற்ற 'புதிய இடது' நபர்களும் பாட்டாளி மக்கள் கட்சியினுள் புகுந்து கொண்டு மார்க்சிய கண்ணோட்டம் தர முயன்றுள்ளனர். அவர்களது முயற்சியினால் மார்க்சிய முலாம் பூசிய பிறகு கொள்கை அறிக்கையும் வெளியிட்டுள்ளனர். ''இழக்கப்போவது சாதிகளை மட்டுமே! அடையப்போவதோ பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரம்!'' ''ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே ஒன்று சேருங்கள்! ஆளும் வர்க்க பாசிச கும்பல்களைத் தூக்கி எறியுங்கள்!'' என்ற முழக்கங்களையும் சேர்த்துள்ளனர். ''காரல் மார்க்சும் - எங்கெல்சும் வெளியிட்ட பொதுவுடமை அறிக்கையைப் போல இன்று பா.ம.கவின் கொள்கை அறிக்கை ஒன்று மட்டுமே மக்கள் முன் உள்ளது'' என்று இக்கட்சியின் ஏடான ''தினப்புரட்சி'' பெருமைப்பட்டுக் கொள்கிறது.

''ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே ஒன்று சேருங்கள்! என்ற முழக்கத்தை தலைமையேற்று நடக்கும் டாக்டர் ராமதாஸ், மார்க்ஸ் - அம்பேத்கார் - பெரியார் வழியில் வரும் தலைவர்!'' என்று முன்னிறுத்துகிறது பாட்டாளி மக்கள் கட்சி. அதாவது இந்தியாவின் தனித்தன்மை வாய்ந்த சாதிய அமைப்பு முறைக்கேற்ப மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்காரிச கொள்கைகளைக் கொண்ட ஒரே கட்சி என்று தன்னைக் கூறிக் கொள்கிறது.

தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோருவது, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது, தமிழ் வழிக் கல்வி, பூரண மதுவிலக்கு, தமிழகத்தின் தன்னாட்சி உரிமைக்காகப் போராடுவது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிலைநாட்டுவது, தாழ்த்தப்பட்ட இனத்தவரை சுழற்சி முறையில் முதல்வராகவும், பிரதமராகவும் நியமிப்பது, காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவது, மதச்சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பது, சுயநிதிக் கல்வி நிறுவனங்களை அரசுடமையாக்குவது, தனியார் வட்டித்தொழிலை ஒழிப்பது, கலப்பு மணத்தை ஊக்குவிப்பது என்று முற்போக்கு சாயத்துடன் அது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

நான்காண்டுகளுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது சாதிவெறித் தாக்குதலை கட்டவிழ்த்துவிட்ட வன்னியர் சங்கம், இப்போது பாட்டாளி மக்கள் கட்சியாக உருமாறியவுடன் தலித் எழில்மலை என்ற தாழ்த்தப்பட்ட இனத்தவரை கட்சியின் பொதுச் செயலாளராகவும், குனங்குடி அனீபா என்ற சிறுபான்மை மதத்தவரை பொருளாளராகவும் நியமித்துள்ளது. ''டாக்டர் அம்பேத்கார் கண்டெடுத்த யானைச் சின்னத்தைத் தான் பா.ம.க தனது தேர்தல் சின்னமாகக் கொண்டுள்ளது. அம்பேத்காரின் நீலநிறக் கொடிக்குப் பெருமை சேர்ப்பது போல் தனது கொடியில் நீல நிறத்தைச் சேர்த்துக் கொண்டுள்ள ஒரே கட்சிதான் பா.ம.க'' என்று தனது சாதிய தோற்றத்தை மறைத்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் கட்சியாக அது காட்டிக் கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

### கொள்கை பூர்வ கூட்டணியா?

ஆனால் ''ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே, ஒன்றுசேருங்கள்!'' என்கிற முழக்கம் புதியதல்ல. பா.ம.கவினரே கூறிக் கொள்வதைப் போல 58 ஆண்டுகளாக உள்ளது தான். உழைப்பாளர் கட்சி, பொதுநலக்கட்சி என்கிற பெயரில் ராமசாமி படையாச்சி, மாணிக்க வேலர் ஆகிய வன்னிய சாதித் தலைவர்களும் பிறகு ஆதித்தனாரும் முன் வைத்து செயல்பட்டவை தான். ராமசாமி படையாட்சியும், மாணிக்கவேலரும் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ராஜாஜி - காங்கிரசுடன் சேர்ந்து மந்திரி பதவிகளைப் பெற்று, கொள்கையை மூட்டை கட்டி வைத்தனர். ஆதித்தனார் எம்.ஜி.ஆரின் தயவைப் பெற்ற பிறகு அவரது முழக்கமும் முடங்கிப் போனது.

இவ்வளவு ஆண்டு காலம் முடங்கிக் கிடந்த முழக்கம் மீண்டும் இப்போது தூக்கிப் பிடிக்கப்படுகிறது. காரணம், இன்றைய அரசியல் சூழ்நிலைதான். ஏற்கனவே உள்ள ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டு பிழைப்பு வாதிகளாகச் சீரழிந்து, பரந்துபட்ட மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன. இதற்கு மாற்றாக மார்க்சிய - லெனினிய புரட்சிகர கட்சியோ தலைமையெடுக்க முடியாமல் சிதறுண்டு பின்தங்கியுள்ளது. போலிக்கம்யூனிஸ்டுகளும் துரோகமிழைத்து முதலாளித்துவ கட்சிகளின் வாலாக சீரழிந்து விட்டனர்.

இந்நிலையில் நாடு முழுவதும் சாதி, மத, இன, பிராந்திய ரீதியிலான சக்திகள் தலைதூக்கி குறுகிய வெறியைத் தூண்டிவிட்டு வளருகின்றன. நாடு தழுவிய ரீதியில் அரசியல் சீரழிவும் பின்னடைவும் தீவிரமாகி வருகிறது. அதன் ஒரு பகுதியாகத் தான் சாதி - மதக் கட்சிகளின் திடீர் வளர்ச்சியே தவிர, புரட்சிகரமானதோ, கொள்கை பூர்வமானதோ எதுவும் இல்லை. வடக்கே வி.பி.சிங்கும், பகுஜன் சமாஜ் கட்சியின் கன்ஷிராமும் செய்வதைத்தான் இங்கே தமிழகத்தில் பா.ம.கவின் ராமதாசு செய்து கொண்டிருக்கிறார்.

### மூன்றாவது அணி உருவானதெப்படி?

பாட்டாளி மக்கள் கட்சி தலைமையிலான இந்த மூன்றாவது அணி உருவானதே சுவாரசியமானது. தேர்தல் அறிவிப்பு வந்ததும் குடியரசுக் கட்சி, தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், இளைய பெருமாளின் மனித உரிமைக் கட்சி, திருநாவுக்கரசு தலைமையிலான அ.தி.மு.க கோஷ்டி, பழனிபாபாவின் ஜிகாத் கமிட்டி ஆகியவற்றைக் கொண்ட மூன்றாவது அணியை அமைக்கப் போவதாக பா.ம.க கூறி வந்தது. ஆனால் குடியரசுக் கட்சி ஜனதா தளத்துடனும், இளைய பெருமாள் கட்சி காங்கிரசு கூட்டணியுடனும், திருநாவுக்கரசு கோஷ்டி தி.மு.கவுடனும் பேரங்கள் நடத்தி வந்தது. இதிலே குடியரசுக் கட்சி தவிர மற்ற இரு கட்சிகளும் பா.ம.க கூட்டணியிலிருந்து விலகிய பிறகு மூன்றாவது அணி புஸ்வாணமாகியது. இவ்விரு கட்சிகளை பலமாக நம்பி கூட்டணி கட்ட முயற்சித்த பா.ம.க அது உடைந்து



பா.ம.க.வின் 'கொள்கை பூர்வ' அரசியல்: நேற்று தி.க.வுடன் சேர்ந்து ஈழ ஆதரவு போராட்டம்; இன்று ஈழத்துரோகி பண்ருட்டியாருடன் தேர்தல் கூட்டணி.

போன எரிச்சலில் கருணாநிதியின் குள்ளநரித்தனம் - சதியால் மூன்றாவது அணி பிளவுபட்டுப் போனதாகச் சாடியது.

பின்னர் வேட்புமனு தாக்கல் செய்யும் நாள் நெருங்கிவிட்ட போது, காங்கிரசு கூட்டணியில் தமக்கு உரிய பங்கு கிடைக்காத வெறுப்பில் இருந்த அப்துல் சமதுவின் முஸ்லீம் லீக், தா.பாண்டியனின் ஐக்கிய பொதுவுடமைக் கட்சி ஆகியவற்றுடன் பா.ம.க பேரங்கள் நடத்தியது. ஆனால் கடைசி நேரத்தில் தா.பாண்டியனின் கட்சி மீண்டும் காங்கிரசு கூட்டணியில் ஒட்டிக் கொண்டது. சமதுவின் முஸ்லீம் லீக் மட்டும் பா.ம.க கூட்டணியில் சேர்ந்தது. உடனே கொள்கை பூர்வ மூன்றாவது அணி உருவாகி விட்டதாக பா.ம.க மீண்டும் அறிவிக்கத் தொடங்கி விட்டது.

### ஈழத்துரோக - சாதிமதவெறி பிழைப்புவாத கூட்டணி

இதிலே வெட்கக்கேடு என்னவென்றால், தமிழீழத்தை அங்கீகரிக்கச் சொல்லும் பா.ம.க, தனது கூட்டணியில் ஈழத்துரோகி பண்ருட்டி ராமச்சந்திரனை சேர்த்துக் கொண்டிருப்பது தான். எம்.ஜி.ஆர் ஆட்சியின் போதே ஈழ விவகாரத்தில் ராஜீவ் கும்பலின் விசுவாச 'புரோக்கராக' ஆலோசகராகச் செயல்பட்டவர் தான் இந்த ''பண்ருட்டியார்'' ஈழப் போராளிகளை தமிழகத்தில் கைது செய்து விலங்கிட்டு சிறையில் அடைக்கவும், அவர்களைப் போட்டோ படமெடுத்து, டி.ஜி.பி.மோகன்தாஸ் மூலம் சிங்கள இனவெறியர்களுக்கு காட்டிக் கொடுத்ததில் முக்கிய பங்காற்றியவர்தான் இந்த பண்ருட்டியார். காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறும் பா.ம.க, இன்றும் கூட காங்கிரசையும் ராஜீவையும் விசுவாசமாக ஆதரிக்கும் பண்ருட்டியாரை கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருப்பது அதை விட வெட்கக்கேடு. பா.ம.க கூட்டணியில் சேர்ந்த பிறகு, அவர் காங்கிரசுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேசியது கிடையாது. இருந்தாலும் அவரையும் வளைத்துப்போட்டு கொள்கைபூர்வ கூ டணி கட்டியுள்ளது பா.ம.க. ஏனென்றா பண்ருட்டி ராமச்சந்திரன் ஒரு வன்னியர்!

இதே போல நேற்றுவரை காங்கிரசி காலை நக்கிக் கொண்டிருந்த அப்துல் சம இப்போது காங்கிரசை எதிர்க்கிறாரா பா.ம.கவின் கொள்கையைத் தான் ஏற்று கொண்டாரா? அல்லது 'பண்ருட்டியா தனது ஈழத் துரோகத்தை ஒப்புக் கொ டாரா? இல்லவே இல்லை. வேறு போக்கி மின்றி இவர்கள் வந்து ஒட்டிக் கொண்ட டன் கொள்கை பூர்வ கூட்டணி உருவா விட்டதென்றால் அது எவ்வளவு பெரிய பி தலாட்டம்!

இக்கூட்டணியில் சேர்ந்துள்ள ஜிகா கமிட்டி, அப்பட்டமாக மதவெறியைக் க கும் அமைப்பு. அதன் தலைவரான பழ பாபா முன்பு கருணாநிதியிடமும் பின்ன எம்.ஜி.ஆரிடமும் கூடிக்குலாவி அதிகார தரகராகச் செயல்பட்ட பிழைப்புவாதி. இ போது அவர் பா.ம.க கூட்டணியில் சேர்ந் தும் சிறுபான்மை இன மக்களின் தலைவரா கௌரவிக்கப்படுகிறார்.

இதேபோல பா.ம.கட்சியில் அங்க வகிக்கும் ஜான்பாண்டியன், தாழ்த்தப்பட்ட மக்களை தம்பின்னே திரட்டி வைத்து கொண்டு பிழைப்பு நடத்தும் சாதிவெறியர் போடி, மீனாட்சிபுரம் சாதிய கலவரங்களு குக் காரணமாக இருந்தவர். இப்போது அவர் பா.ம.கவின் இளைஞரணித் தலை ராகி சட்டமன்ற வேட்பாளராகவும் நிறுத்த பட்டுள்ளார்.

கட்சி மாறிகளை தமது அரசியல் ஆத யத்துக்காக அரவணைத்துக் கொள்வதெ பது ஓட்டுக்கட்சிகளின் அரசியல் கலாச்ச ரம். 'கொள்கை பூர்வ' கட்சியான 'பா.ம. இதற்கு விதிவிலக்கு அல்ல. நேற்றுவ தி.மு.கவிலிருந்த முக்கிய பிரமுகரான நெ விக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி தனக்கு எம் எல்.ஏ சீட் கிடைக்காத ஆத்திரத்தில் பா.ம. வில் வந்து சேர்ந்து கொண்டு விழுப்புரத்தி



படிப்பகம்

www.padippakam.com

போட்டியிடுகிறார். பண்ருட்டி தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏவான நந்தகோபால கிருஷ்ணன் கட்சி மாறி வந்ததும் அவரை பா.ம.க அரவணைத்துக் கொண்டது. பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் சிவதானமணி நேற்றுவரை இளைய பெருமாளின் கட்சியிலிருந்தார். இப்போது அவர் கட்சி மாறியதும் பா.ம.க வேட்பாளராகிவிட்டார். இதே போல வரகூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் பெருமாள், ஏற்கனவே இருமுறை எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதன் காரணமாக, இப்போது அவர் கட்சிமாறி பா.ம.கவில் சேர்ந்ததும் அதன் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த லட்சணத்தில் சந்திரசேகர் கட்சியை தமது கூட்டணியில் சேர்க்கமாட்டோம் என்கிறது பா.ம.க. தமக்கும் சந்திரசேகர் கட்சிக்கும் ஏதோ கொள்கை பூர்வ வேறுபாடு இருப்பதை போல காட்டிக் கொள்கிறது.

**கொச்சையான வசவு கொள்கையாகுமா?**

தி.மு.க, அ.தி.மு.க கூட்டணிகள் தமது கொள்கையை விளக்கிப் பேசுவதை விடுத்து, தனிநபர் விமர்சனம் செய்வதாகவும், கீழ்த்தரமான வசவுகளில் இறங்கிவிட்டதாகவும் பா.ம.க தலைவர் குற்றஞ்சாட்டுகிறார். ஆனால் பா.ம.கவின் கொள்கை பூர்வ நாளேடான ''தினப்புரட்சி'' ஜெயலலிதாவை வசந்தசேனை, குச்சுக்காரி, ஐயங்கார் மாமி, பால்கனிப்பாவை, கூத்தாடி மகள் என்று வசைபாடுகிறது. ''16 வயதினிலே 17 பிள்ளைகள் பெறும் ரகசியத்தை இளம் பெண்கள் தெரிந்து கொண்டால் நாடு தாங்குமா?'' என்று சினிமா பாடலை வைத்து ஜெயலலிதாவை ஆபாசமாக சாடுகிறது. இன்னும் ஒருபடி மேலே போய் ''குறும்பா'' என்ற பெயரில் ''கோமாளியின் கூத்தியாராய் இருந்தாள்; கொடுப்பவர்கள் எவரெனினும் பறந்தாள்; ஏமாளிகள் அரசியலில் இறக்கிவிட எச்சிலை மாமாக்களின் மடியினிலே சிறந்தாள்!'' என்று வக்கிரமான வசவுக்கவிதை எழுதி ஆபாச கேலிச்சித்திரமும் போட்டுள்ளது. இதே போல கருணாநிதியை ''தவில் இனத்தலைவர்'' என்று கொச்சையாக சாதி வெறியுடன் சாடுகிறது.

பா.ம.க தலைவர் ராமதாசு கூட அதே பாணியில் தான் எதிர்க்கட்சிகளைச் சாடுகிறார். கடந்த ஜனவரி 7-ம் தேதியன்று சென்னையில் நடந்த காசி ஆனந்தன் கவிதை நூல் வெளியிட்டு விழாவில் வாழ்த்துரை ஆற்றிய ராமதாசு, ''.... போராட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, போராளிகளை மறந்துவிட்டு சீலை இழைகளை சீர்பிரித்துக் காட்டுவார்கள்!'' என்று தி.மு.க, அ.தி.மு.க தலைவர்களை சாடுகிறார். நக்கீரன் வார ஏட்டில் ''அக்னி அம்புகள்'' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதிவரும் ர்ாமதாசு, 11.5.91 தேதியிட்ட இதழில் நல்லொழுக்கமில்லாத தலைவர்களைப் பற்றி அவர் எழுதிய கட்டுரை முழுக்கவும் இந்துநேசன் பாணியிலானது. புராணங்களில் காணப்படும் ஆபாசங்களை சுவையாகப் பேசி நாத்திகப் பிரச்சாரம் செய்யும் தி.கவினரைப் போலத்தான் ராமதாசும் நல்லொழுக்க உபதேசம் செய்துள்ளார்.



நல்லொழுக்க உபதேசம் செய்யும் ராமதாசுவின் தினப்புரட்சி நாளேட்டில் வெளியான ஆபாச கேலிச்சித்திரம்.

எதிர்க்கட்சியினரை தனிநபர் ரீதியில் ஆபாசமாக வசைபாடும் அதே சமயம் தமது பெயரை அடைமொழிகளுடன் பட்டம் சூட்டிக் கொள்வதென்பது தமிழக ஓட்டுக்கட்சிகளின் மரபாகிவிட்டது. கருணாநிதி, டாக்டர் கலைஞராகவும், ஜெயலலிதா, புரட்சித் தலைவியாகவும், தி.க.வின் வீரமணி தமிழினத் தளபதியாகவும் பட்டம் சூட்டிக் கொண்டதைப் போல ராமதாசும் ''டாக்டர் அய்யா ''இனமானக் காவலர்'' என்றெல்லாம் பட்டம் சூட்டிக் கொண்டுள்ளார். அதை விட காரல் மார்க்ஸ், அம்பேத்கார் பெரியார் படங்களுடன் சேர்த்து தனது மூஞ்சியையும் சேர்த்துப் போட்டுக்கொண்டு அம்மாபெரும் தலைவர்களின் வரிசையில் வந்துள்ள தலைவராக கொஞ்சமும் கூச்சமின்றி சுய இன்பம் தேடுகிறார்.

பிற்பட்ட தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் ஒற்றுமைக்கும் உரிமைக்கும் போராடும் தலைவராக காட்டிக் கொள்ளும் ராமதாசு, தனது வன்னிய சாதி சங்க நடவடிக்கைகளில் பங்கேற்பதைத்தான் பிரதானமாகக் கொண்டுள்ளார். அவரது தினப்புரட்சி நாளேட்டில், ''டாக்டர் அய்யா அவர்களின் ஆசியோடு அவரது தலைமையில் நடைபெறும் வன்னிய சாதி திருமண விளம்பரங்களும், வன்னியர் சங்கத்தின் வாழ்த்துக்களும் தான் அதிகமாக வருகின்றன. அக்னி குண்டம். சின்னம் பொறித்த வன்னியர் சங்க கொடிகள், பனியனுடன் அச்சாதி இளைஞர்கள் தான் பா.ம.க என்ற பெயரில் தேர்தல் வேலை செய்கின்றனர். அக்னி விழா, தீப்பந்த ஊர்வலம், பிரகாஷ் அம்பேத்காருக்கு வரவேற்பு என்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இது வெளிப்படையாகவே நடந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரூர் அருகிலுள்ள நாச்சிகுளம்பட்டியில் ஒரு பெண் குழந்தைக்கு ராமதாசு சூட்டிய பெயர்: வன்னியமலர்.

வன்னியர்கள் ஆண்ட பரம்பரை, பல்லவ பரம்பரை என்று தமது சாதியின் பூர்வீகத்தைப் பற்றி பெருமையடித்துக் கொள்கிறார் ராமதாசு. ஒருபுறம் சத்திரிய குல மன்னர் பரம்பரையினர் என்று தமது சாதியைப் பற்றி பெருமையாகப் பேசும் அதே சமயம் மறுபுறம் இடஒதுக்கீடு விவகாரத்தில் தாங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட சூத்திரர்கள் என்கிறார். இவற்றையெல்லாம் எதிர்த்த பெரியார், காரல் மார்க்ஸ் படங்களைப் போட்டுக் கொண்டு கூச்சமின்றி புரட்சி வியாபாரம் செய்யக் கிளம்பியுள்ளது பா.ம.க.

போதாக்குறைக்கு மார்க்சிய - லெனினிய கட்சித் திட்டத்திலிருந்து சில அம்சங்களை எடுத்து தனது கொள்கை அறிக்கையிலும் சேர்த்துக் கொண்டுள்ளது. மா-லெ புரட்சியாளர்கள் இப்போது நிலவும் அரசு எந்திரத்தை ஒரு புரட்சியின் மூலம் வீழ்த்திவிட்டு மக்கள் புரட்சிக்கமிட்டி, மக்கள் நீதிமன்றம் ஆகியவற்றை நிறுவி மக்கள் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் திட்டத்தை வைத்துள்ளனர். இதையே காப்பியடித்து, இப்போதைய அரசு எர்திரத்தை தூக்கியெறியாமலேயே மா-லெ புரட்சியாளர்கள் மற்றும் பெரியா ரி.ು, அம்பேத்காரிய கொள்கையில் ஈடுபாடுடையவர்களையும் அனைத்து சமூக பிரதிநிதிகளையும் கொண்ட மக்கள் கமிட்டி, மக்கள் நீதி மன்றம் முதலானவற்றை நிறுவி மக்களுக்குத் தொண்டு செய்வோம் என்று பித்தலாட்டம் செய்கிறது பா.ம.க

**சாதிய கூட்டணிக்கு**
**புரட்சி சாயம்**

இப்படி வெளிப்படையாகவே சாதிய - மதவெறி சக்திகளின் பிழைப்புவாதிகளின் கூட்டணியாக இம்மூன்றாவது அணி அம்பலப்பட்டுள்ள போதிலும், புரட்சி பேசும் தமிழ்த் தேசப் பொதுடமைக் கட்சி அதற்கு முற்போக்கு சாயம் பூசி வெட்கமின்றி நியாயப்படுத்துகிறது. நெடுமாறன் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ள மாஜி புரட்சியாளர் புலவர் கலிய பெருமாள் இக்கூட்டணிக்கு புரட்சி முலாம் பூசி ஆதரிக்கிறார். தனித்தமிழ் இயக்கத் தலைவர் பெருஞ்சித்திரனார் இதனை லட்சியக் கூட்டாக புகழ்பாடுகிறார்.

சுருக்கமாகச் சொன்னால், இட ஒதுக்கீடு மூலம் அரசு எந்திரத்தில் பங்கேற்று பிற்பட்ட சாதிகள் சலுகைகளை அனுபவிக்க உருவாக்கப்பட்ட இன்னொரு சாதியக் கூட்டணிதான் இம்மூன்றாவது அணி. எந்த அரசு எந்திரத்தில் இடம் பெற இச்சாதிகள் முயற்சிக்கிறதோ, அதே போலீசும் அதிகார வர்க்கமும் கொண்ட அரசு எந்திரம் தான் அவர்களையும் இதர உழைக்கும் மக்களையும் ஒடுக்குவதற்குப் பயன்படுகிறது. இந்த ஒடுக்குமுறை அரசு எந்திரத்தைத் தூக்கியெறியாமல், சட்டமன்ற - நாடாளுமன்ற ஆட்சிகளை மேலிருந்து கைப்பற்றுவதன் மூலம் சாதிய நோய் பீடித்த இச்சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்களை, அதாவது அரசியல் - பொருளாதார புரட்சியை ஒருக்காலும் சாதிக்க முடியாது. மாறாக, சாதிகளே கூடாது; உழுபவருக்கே நிலம்! உழைப்பவருக்கே அதிகாரம் என்ற முழக்கத்துடன் இன்றைய ஒடுக்குமுறை அரசு எந்திரத்தை தூக்கியெறியும் புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றுதான் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்கும் உரிமைக்கும் வழி வகுக்கும்.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

வதாகவும் கூறுகிறது, மண்டல் அறிக்
ைய பத்தாண்டுகள் கிடப்பில் போட்டி
இக் கட்சி. எல்லாத் தரப்பினரும் ஏற்
வகையிலும் அறிவியல் பூர்வமாகவும்
டல் அறிக்கையை அமுலாக்குவதாக
ஜவாதி ஜனதா கட்சி உறுதி கூறுகிறது.
கிரசைப்போலவே பாரதீய ஜனதாவும்
ஒதுக்கீட்டை ஆதரிக்கிறது.

ஆக, சாதியக் கூட்டை உருவாக்கி
சியைப் பிடிப்பது மண்டல் விவகாரத்
தேசிய முன்னணி - 'இடது'சாரிக் கூட்ட
ின் நோக்கம் என்றால் அதை உடைத்து
பிரிவு பிற்பட்ட மக்களைத் தம் பக்கம்
த்துக் கொள்வதுதான் மற்ற கட்சிகளின்
க்கம் என்பதை இத் தேர்தல் அறிக்கை
காட்டுகின்றன.

### பரம்பரை, பாசிச ஆட்சியின்
### றுபெயர்தான் நிலையான ஆட்சி

1977-79 மற்றும் 1989-90 ஆகிய
ாடு தவணைகளில் 'எதிர்த்தரப்பினர்
கொண்ட கூட்டணி முயற்சிகள் படு
ல்வியடைந்து விட்டன; இதனால் நாட்
அரசியல், பொருளாதாரத்துக்குப்
ந்தீங்கு நேர்ந்துவிட்டது; காங்கிரசுக்
ஒன்றினால்தான் நிலையான ஆட்சி
மக்க முடியும் — இதுதான் பாசிச
் கும்பல் ஓட்டுப் பொறுக்குவதற்கான
மந்திரம். அதன் தேர்தல் அறிக்கை
விளம்பரங்களும் இதற்குத்தான் முக்கி
வம் அளிக்கின்றன.

ஒரு "நிலையான ஆட்சிதான் தேசிய
மைப்பாடு, ஐக்கியம், மதச்சார்பின்மை
வற்றைக் காக்க முடியும்; மதச் சிறு
மையினர், தாழ்த்தப்பட்ட - மலைவாழ்
ரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்
க்க முடியும்; இந்தியாவில் தொழில்
்சிக்கும், உலக நாடுகளிடையே இந்தி
ன் மதிப்பை உயர்த்தி முதலீட்டிற்கு
க்கையூட்டவும் முடியும்; நாட்டின் சட்
ழுங்கை பேணவும் முடியும் — இப்படி
சிக் கொண்டே போகிறது காங்கிரசின்
ல் அறிக்கை.

காங்கிரசின் எதிர்த்தரப்பினரிடையே
ம் பதவிச் சண்டை, பிளவுகள், ஆட்
கவிழ்ப்புகளைக் கண்டு வெறுப்புற்
மக்கள் உணர்வு; மீண்டும் தொங்கு
நாடாளுமன்றம் ஏற்பட்டால் என்ன
மோ என்கிற நடுத்தர, மேல்தட்டு வர்க்
ரின் அச்சம் — இவைதான் காங்கிர
நிலையான ஆட்சி முழக்கத்திற்கு மூலத

ஆனால், காங்கிரசின் நிலையான ஆட்
் போதுமான அளவு எதிர்த்தரப்பி
கலி - கிண்டல் செய்கின்றனர்.

காங்கிரசு ஆட்சியின் கீழ் சராசரியாக
தங்கள்தான் ஒரு முதல் மந்திரி பதவி
டிக்க முடியும். சமீபத்தில் ஆந்திரா,
காவில் தனது சொந்தக் கட்சி மந்திரி
ளையே கவிழ்த்தது; மராட்டிய முதல்
கவிழ்க்க கட்சித் தலைவர் ராஜீவே
ய்கிறார். ராஜீவ் ஆட்சி நடத்திய 5
களில் 29 முறை மந்திரிசபையை
மைத்தார்; சராசரி 4 மாதங்கள்தான்
ந்திரி ஒரு துறையில் நீடிக்க முடிந்தது
தைச் சுட்டிக்காட்டி காங்கிரசின் நிலை



பா.ஜ.க. பகிரங்கமான மதவெறி பாசிச பிரச்சாரம்

யான ஆட்சியை அம்பலப்படுத்துகின்றன எதிர்க்கட்சிகள்.

அதே சமயம் பாரதீய ஜனதாவும், தேசிய முன்னணி - 'இடது'சாரி கூட்டணியும் நிலையான ஆட்சிக்கு புதுப்பொருளும், புது வாக்குறுதிகளும் தருகின்றன.

''அதி உயர்ந்த நேர்மை - நாணயம், தொடர்ச்சியான - உறுதியான சித்தாந்தம், உட்கட்சி ஒழுங்கு - கட்டுப்பாடு மற்றும் நிலையான - முதிர்ச்சியுடைய தலைமை, அர்ப்பணிப்பு மிக்க உருக்குப் போன்ற அணிகள்'' ஆகியவற்றைக் கொண்டது பா.ஜ. கட்சிதான் என்று அது டமாரமடிக்கிறது. ஆகவே பா.ஜ.தான் நிலையான ஆட்சி தரமுடியுமென வாக்குறுதியளிக்கிறது.

ஆனால், காங்கிரசின் நிலையான ஆட்சி என்பது நேரு - இந்திரா - ராஜீவ் - ராகுல் என்கிற பரம்பரை ஆட்சி; உள்ளூர் - மாநில அளவில் செல்வாக்குள்ளவராக எவர் வளர்ந்தாலும் குழிபறிக்கும் சதிகார - ஆட்சிக் கவிழ்ப்பு; அரசு பயங்கரவாதத்தை ஏவி எந்த நியாயமான இயக்கத்தையும் ஒடுக்கும் பாசிச ஆட்சிதான். பா.ஜ.க.வின் நிலையான ஆட்சி என்பது ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி குண்டர்களின் இந்துமத வெறி வகுப்பு வாத பாசிச ஆட்சிதான்!

இவற்றுக்கு மாறானதாக வாதிடும் தேசிய முன்னணி - 'இடது'சாரி கூட்டணி, ''சமூகநீதி, சமூக சமத்துவம், மக்களுக்கு அதிகாரம் இல்லாமல் நிலையான ஆட்சி என்பது பழைய அமைப்பு முறையைப் பாதுகாப்பதுதான். இட ஒதுக்கீடு அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதன் மூலம்தான் நிலையான ஆட்சி அமைக்க முடியும்'' என்கிறது. அதாவது சமூக - அடிப்படை மாற்றம் தேவை; அதில்லாத நிலையான ஆட்சி இப்போது தேவையில்லை என்கிறது.

தே.மு. - 'இடது'சாரி கூட்டணியின் இந்தவாதம் 1971 தேர்தலின்போது ''வறுமையை ஒழிப்போம்'' என்கிற முழக்கத்தை வைத்து இந்திரா மக்களை ஏய்த்து ஓட்டுப் பொறுக்கியதைப் போன்றதுதான். நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் அமைப்பிலும் அரசு எந்திரத்திலும் எவ்வித மாற்றமும் இல்லாமல் இட ஒதுக்கீடு மூலம் சமூக - அடிப்படை மாற்றம் - மக்களுக்கு அதிகாரம், சமூக நீதி, சமூக சமத்துவம் என்பது வெறும் பித்தலாட்டம்தான்.

☆ ☆ ☆

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போகும் நாடு எதிர்கொண்டுள்ள உடனடிப் பிரச்சினைகள் என்ன? தொடர்ந்து தரகு அதிகார முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுக்களின் கொள்ளைக்கு அகலக் கதவு திறந்துவிடப்படுவதால் எங்கும் வறுமையும் வேலையின்மையும் தாண்டவமாடுகின்றன. அரசு பயங்கரவாதம் நிறுவனமயமாகி ராஜீவ் கும்பலின் பாசிசம்,பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி பாசிசம், ஆகியவற்றின் அபாயம் நெருங்கி வருகிறது. இவற்றுக்கான உண்மையான தீர்வுகளை வைக்காது அரசியலைச் சாதிய மயமாக்கி, சாதியச் சண்டைகளைத் தூண்டி உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தும் தேசிய முன்னணி - ''இடது''சாரி கூட்டணியின் போலி ஜனநாயகம், போலி சமூக நீதி, போலி மதச்சார்பின்மை. இக்கட்சிகளிடையே என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும் பஞ்சாப், காஷ்மீர், அசாம், ஆந்திரா, பீகாரில் அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுவதில் ஒற்றுமையே நிலவுகிறது.

இவற்றில் எந்தக் கட்சி, எந்த அணியினது தேர்தல் வெற்றியும் மேற்கண்ட பிரச்சினைகளைத் தீர்த்துவிடாது என்பது தெளிவாகிறது. ஆகவே, ''ராஜீவ் பாசிச - இந்துமதவெறி பாசிச அபாயங்களை முறியடிப்போம்! சாதி வெறியர்களைப் பதவியில் அமர்த்தும் தே.மு. - 'இடது'சாரிகளின் ''சமூக நீதி''யை அம்பலப்படுத்துவோம்! போலி ஜனநாயகத் தேர்தல்களைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்!'' என்கிற புரட்சியாளர்களின் முழக்கமே சரியானது! ● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com




● *கடந்த தேர்தலில் டி.என்.ஓ.சி. பின்பற்றிய செயல் தந்திரம் தானே சரியானது? இப்போது நீங்களும் அப்படிச் செய்வீர்களா? தேர்தலில் பங்கெடுக்காமல் புரட்சிக்கு அணிதிரளும்படி நீங்கள் கூறுவது எப்படிச் சரியாகும். முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் பங்கேற்பதன் அவசியம் குறித்து தோழர் லெனின் சொல்லுவதைப் போல யுத்த தந்திர முறையில் பயன்படுத்தி அதை ஏன் அம்பலப்படுத்தக் கூடாது? (ஒரு குழுவாக இருக்கும்வரை இது சாத்தியமில்லை) உறுதியான அமைப்பைக் கட்டி சில நம்பகமான தோழர்களைக் கொண்டு மக்களை நம் பக்கம் திரட்டுவதற்கு, புரட்சிக்குத் தயாரிப்பதற்கு அதை ஏன் பயன்படுத்தக் கூடாது?*

***— திண்டுக்கல் தி.இராகுல், ஜெனிபர் மற்றும் பெயர் குறிப்பிடாத இருவர் எழுதிய கேள்விகளின் தொகுப்பு.***

● *சென்ற தேர்தலில் நீங்கள் கடைப்பிடித்த தேர்தல் புறக்கணிப்பு அவசியம்தானா? தற்போதைய தேர்தல் குறித்து தங்களின் நிலைப்பாடு என்ன?*

***— எஸ்.சங்கரன், பள்ளிபாளையம்.***

☆ ஒவ்வொரு தேர்தல்களிலும் குறிப்பான நிலைமைக்கு ஏற்ப அரசியல் முழக்கங்களையும், அவற்றோடு யுத்த தந்திர அரசியல் முழக்கங்களையும் முன் வைத்துத் தேர்தல்களைப் புறக்கணிக்கும் இயக்கங்களை நாம் நடத்திவருகிறோம். உதாரணமாக இத்தேர்தலில் பாசிச, மதவெறி பாசிச கும்பல்களை எதிர்த்தும், போலி ஜனநாயக - போலிக் கம்யூனிச - சாதிய சக்திகளை அம்பலப்படுத்தியும் குறிப்பான முழக்கங்கள் வைத்துள்ளோம். இவற்றோடு தேர்தல்களையும் நாடாளுமன்ற சட்டமன்ற அமைப்புகளையும் அவற்றின் தில்லுமுல்லு - லஞ்ச ஊழல்களையும், மோசடி - பித்தலாட்டங்களையும், வஞ்சகம் - போலித்தனங்களையும் அம்பலப்படுத்தி புரட்சிப் பாதைக்கு மக்களை அணிதிரட்டுகிறோம். இதற்கு அதிகரித்த ஆதரவும் பெற்றுவருகிறோம். இவ்வாறு நாம் செய்வது மேற்கொண்டுள்ள நீண்டகால மக்கள் யுத்தப்பாதைக்குப் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கிறது.

இதற்குமாறாக, முதலாளித்துவ நாடாளுமன்றத்தை அம்பலப்படுத்தவும் புரட்சிக்கு மக்களை அணி திரட்டவும் அதில் பங்கேற்பதாகக் கூறும் கட்சிகளும் குழுக்களும் மேலும் மேலும் சந்தர்ப்பவாத சகதிக்குள் மூழ்குவதைப் பார்க்கிறோம். அதை நியாயப்படுத்துவதற்காக புரட்சியின் அரசியல், இராணுவ யுத்த தந்திரங்களுக்குத் தொடர்பற்ற முறையில் லெனினது மேற்கோளைக் கேடாகப் பயன்படுத்துகின்றன. ஆனால் அந்த மேற்கோள்களே அவர்களது முடிவுகளைப் பொய்ப்பித்து விடுகின்றன.

உதாரணமாக கேள்வியாளர் குறிப்பிடும் டி.என்.ஓ.சி. குழு, நாடாளுமன்றப் பங்கேற்பின் அவசியம் குறித்தும், அது அரசியல் ரீதியில் காலாவதியாவது குறித்தும் பின்வருமாறு லெனினது மேற்கோள்களைக் காட்டுகின்றது. ''சிறுபான்மையோர் புறக்கணித்தால் அல்ல, சிறுபான்மையோர் பாராளுமன்ற முறை மீது நம்பிக்கை கொண்டிருந்தால் கூட அந்நாடுகளில் பாராளுமன்றமுறை அரசியல் ரீதியில் கலாவதியாகவில்லை என்பதும், அந்த நாடுகளில் பாராளு
மன்ற நிறுவனங்களை அகற்றிடும் பலத்தைப் பாட்டாளி வர்...
கட்சி பெறும்வரை அவற்றில் இருந்து கம்யூனிஸ்டுகள் வே...
செய்தே ஆக வேண்டும் என்பதும் லெனின் கருத்தாகும் என்...
தெளிவு'' (டி.என்.ஓ.சி. முதலாளித்துவ பாராளுமன்றமும் பொ...
டமைப் புரட்சியாளர்களும், பக்:10)

''கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்ப...
தேர்தல்கள் - முதலாளி வர்க்கத்துக்கு எதிராகத் தங்களுடை...
சோவியத்துக்களுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெ...
துக் கொள்ளும் தேர்தல்கள் - நடத்த முடியாதிருக்கிறவரை, மு...
ளித்துவ வர்க்கம் அரசு அதிகாரத்தை வகித்து மக்களின் பல்...
வர்க்கங்களைத் தேர்தல்களில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொ...
கிறவரை, அந்தத் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் மட்டுமி...
எல்லா உழைப்பாளி மக்களிடையேயும் கிளர்ச்சி செய்யும்...
ருட்டு நாம் பங்கெடுப்பது நமது கடமையாகும்'' (லெனின்; மேற்...
நூல் மேற்கோள் காட்டியவாறு பக்: 11)

''முதலாளித்துவப் பாராளுமன்றத்தை நம்மால் கலைக்க...
யாதவரை அதை எதிர்த்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வே...
செய்ய வேண்டும்'' (மேற்படி பக்: 11) ''முதலாளித்துவ பாராளு...
றங்களையும் இதரவகை பிற்போக்கு நிறுவனங்களையும் அகற்றி...
பலம் உங்களிடம் இல்லாதவரை அவற்றில் நீங்கள் வேலை செ...
ஆக வேண்டும்'' (மேற்படி பக்: 10)

எதுவரை முதலாளித்துவப் பாராளுமன்ற முறை அரசிய...
யில் காலாவதியாவதில்லை. எதுவரை பாட்டாளி வர்க்கக் ...
பங்கேற்று வேலை செய்தே ஆக வேண்டும் என்று லெனின் ...
தனை விதிக்கிறார் என்பதை மீண்டும் தொகுத்துப் பாருங்கள்.
லாளித்துவப் பாராளுமன்றத்தை நம்மால் கலைக்க முடியாதவ...
அதையும் இதரவகைப் பிற்போக்கு நிறுவனங்களையும் அகற்றி...
பலம் நம்மிடம் இல்லாதவரை, கம்யூனிஸ்டுகளாகிய நாம் ...
அதிகாரத்தைக் கைப்பற்றி தங்களுடைய சோவியத்துக்களுக்...
உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் தேர்த...
நடத்த முடியாதிருக்கிறவரை, அரசு அதிகாரத்தை வைத்துள்ள...
லாளித்துவ வர்க்கம் மக்களின் பல்வேறு வர்க்கங்களைத் தேர்...
ளில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளும்வரை, ''...
வுக்கு பெரிய அளவிலான சிறுபான்மை உழைக்கும் மக்கள் ...
பாராளுமன்ற முறை மீது நம்பிக்கை கொண்டிருக்கும் வரை மு...
ளித்துவப் பாராளுமன்றத்தில் பங்கேற்று வேலை செய்தே ...
வேண்டும்'' என்பது லெனினது நிபந்தனைகள்.

இவ்வாறு லெனின் விதிக்கும் நிபந்தனைகள், வரையறு...
நிலைமைகள் கிட்டத்தட்ட நாடுமுழுவதும் ஒரே சமயத்தில் பூ...
யாகி புரட்சிகரச் சூழ்நிலையை உருவாக்க வேண்டியவை எ...
தெளிவாக உள்ளது. இவை ஒரே சமயத்தில் நாடு முழுவதும் ...
யல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நாடுதழுவிய ஆயுதந்...
கிய பேரெழுச்சியை - புரட்சியைத் தொடுப்பதற்கான முன் தே...
கள் - முன் நிபந்தனைகள். இதேபோல முதலாளித்துவப் பா...
மன்றத்தைப் புறக்கணிப்பதற்கு இதே நிபந்தனைகள் - நிலை...
களை நேர்மறையாக லெனின் முன்வைக்கிறார். இவையும் நா...
விய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியை - புரட்சியைத் தொடுப்ப...
தான் அடிப்படையாகக் கொண்டவை. பின்வருமாறு கேடயம் ...
ஓசைக் கும்பல் தொகுத்துக் கொடுத்திருப்பதே அதற்கு ஆதார...

''பாட்டாளி வர்க்கக் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்...
முதலாளி வர்க்கத்தை எதிர்த்து தங்களுடைய சோவியத்துக்...
காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்குகொள்ளும் தேர்...
நடத்த முடிகிறபோது, பெருந்திரளான வெகு ஜனங்கள் சோ...
அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு பாராளுமன்றத்தைக் கலைக்க...
ராய் இருக்கும்போது - அதாவது பாராளுமன்றத்தைக் கலை...
பலத்தை கம்யூனிஸ்டுகள் பெறும்போது (அப்போது பாரா...
றம் அரசியல் ரீதியாகவும் காலாவதியாகிறது) கம்யூனிஸ்டுகள் ...
ளுமன்றங்களையும், தேர்தல்களையும் புறக்கணிக்கிறார்கள்'' (...
படி பக்:25)

ஆகவே, முதலாளித்துவப் பாராளுமன்ற முறை அரசிய...
யில் காலாவதியாகவில்லை, அதில் பங்கேற்று வேலை செய்...
வேண்டும் என்பதற்கான நிபந்தனைகள், நிலைமைகளைக் ...
போதும் சரி; அவற்றைப் புறக்கணிப்பதற்கான நிபந்தனைகள், ...
மைகளைக் கூறும்போதும் சரி - ஒரே சமயத்தில் நாடு முழு...
அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நாடுதழுவிய ஆ...
தாங்கிய பேரெழுச்சிக்கான நிபந்தனைகள், தயாரிப்புகள், த...



படிப்பகம்

www.padippakam.com

என்கிற கண்ணோட்டத்துடனே லெனின் பேசுகிறார். அவரது
த்தில் நாடுதழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப் பாதையைத்
ர வேறெந்த ஒருங்கிணைந்த, புரட்சிகர யுத்த தந்திரமும் முன்
க்கப்படவும் இல்லை. ருசியாவில் கூட அதன் ஆசியப் பகுதிக்
ஐரோப்பியப் பகுதிக்கும் இடையே புரட்சிகர நிலைமைகள்
த்தாழ்வாகவே இருந்தன; என்ற போதும் அரசு அதிகாரத்தைக்
ந்திருந்த ஜாரிச ஐரோப்பிய ருசியாவை மையமாக வைத்தே
னினது யுத்த தந்திரப்பாதை அமைந்தது.

ஆனால் நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப் பாதை
நாட்டிற்குப் பொருந்தாது. ஏனெனில் ஏற்றத்தாழ்வான அரசி
பொருளாதார, சமூக வளர்ச்சியுடைய இந்த அரைக்காலனிய
ரை நிலப்பிரபுத்துவ நாட்டில் புரட்சியின் வளர்ச்சியும் ஏற்றத்
வானதாகவே இருக்கும்; நாடு முழுவதும் ஒரே தன்மையும்
வும் வீச்சும் உடையதாக இராது. நாடுமுழுவதும் புரட்சிகர
லமைகளின் வளர்ச்சி கிட்டத்தட்ட ஒரே தன்மையும் அளவும்
ம் உடையதாக ஏறக்குறைய சமசீரானதாகவும் இருந்தால்தான்
ாளித்துவப் பாராளுமன்றத்தை நாம் கலைக்கவும். அதையும்
பிற்போக்கு நிறுவனங்களையும் அகற்றிடும் பலத்தை நாம்
வதும், கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்
சோவியத்துக்களுக்காக உழைக்கும் மக்கள் மட்டுமே பங்கு
ள்ளும் தேர்தல்களை நடத்தவும், பெருந்திரளான வெகு ஜனங்
இவற்றை எல்லாம் ஏற்கவும் முடியும். இது இந்த நாட்டிற்குப்
ருந்துமா? பீகாரிலும் ஆந்திராவிலும் புரட்சிகர இயக்கம் பெற்
வளர்ச்சியோடு குஜராத், இராஜஸ்தானத்தின் பின்தங்கிய
மைகளை ஒப்பிட்டுப்பாருங்கள். தவிர்க்க முடியாத இந்த ஏற்
ாழ்வான வளர்ச்சி நிலைமையில் நாம் என்ன செய்வது? லெனி
வழிகாட்டுதல்களை அப்படியே பொருத்தலாமா? கூடாது.

அதற்கு மாறாக, புரட்சிகர நிலைமைகளின் வளர்ச்சிக்கேற்ப

> ஐக்கியப்பட்ட கட்சிக் காங்கிரசு
> ர்மானிக்கும்வரை புறக்கணிப்பே சரியான
> பார்த் தந்திரம்'' என்று கேடயம்
> னஓசையினரது ஆவணம் கூறுகிறது.
> னால், அதை அவர்களே மதிப்பதில்லை;
> ன்பற்றுவதில்லை.

யமான கிராமப் புறங்களில் உள்ளூர் ஆயுதந்தாங்கிய எழுச்சி
டத்தி செஞ்சேனையையும், மக்கள் அதிகார அமைப்புகளை
காரில்லா, தளப்பிரதேசங்களையும் நிறுவிப் படிப்படியாக விரி
யச் செய்து முன்னேறி நகர்ப்புறங்களைச் சுற்றி வளைத்து இறு
நாடு தழுவிய அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்கிற நீண்ட
மக்கள் யுத்தப் பாதையை மேற்கொள்வதுதான் சரியாகும்.
த்தான் மக்கள் யுத்தப்பாதையை மேற்கொண்டுள்ள பிலிப்
சு, மலேசியா முதல் பெரு, எல்சால்வடார் முதலான நாடுகள்
தேர்தல் புறக்கணிப்பைக் கடைப்பிடிக்கின்றதைப் பார்க்கின்
. முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் பங்கேற்கவும், புறக்க
வும் நாடு தழுவிய நிபந்தனைகளாக லெனின் வகுத்தளித்
மக்கள் யுத்தப்பாதைக்குப் பொருந்தாதவை என்பதுதான்
நக் காரணம்.

பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தில் மூழ்கிப் போகும் குழுக்கள்
டப்பட்ட அரசியல், இராணுவ யுத்த தந்திர கண்ணோட்டத்துக்
ாடர்பற்ற முறையில்தான் லெனினை மேற்கோள் காட்டுகின்ற
ந்த வகையிலே கடைகோடித் தனமான அப்பட்டமான சந்தர்ப்
ம் புரிவது கேடயம் - மன ஓசை கும்பல். தேர்தல் மற்றும்
ளுமன்றம் பற்றிய விசயத்தில் லெனினியக் கோட்பாட்டைப்
ற்றுவதாகப் பீற்றிக்கொள்ளும் அக்கும்பல் தேர்தலுக்குத் தேர்
வ்விதக் காரணமுமின்றித் தமது நிலைபபாட்டை மாற்றிக்
கிறது. அவர்களது தேர்தல் தந்திரோபாயம் தானே சரியான
கேட்ட கேள்வியாளருக்கு நாம் பதில் எழுதும் முன்பே அவர்
அதைக் கைவிட்டுவிட்டனர்.

முதலாளித்துவ பாராளுமன்றமும் பொதுவுடமைப் புரட்சியா
ம்'' என்றொரு ஆவணத்தைக் கேடயம் - மன ஓசை கும்பல்
அக்டோபரில் வெளியிட்டது. அதிலே, ''இந்தியாவில் பாரா
ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகவில்லை. ஐக்கியப்
பட்ட கட்சிக்காங்கிரசு தீர்மானிக்கும்வரை புறக்கணிப்பே சரியான போர்த்தந்திரம்'' என்று கேடயம் - மன ஓசை கும்பல் எழுதியுள்ளது. ''முதலாளித்துவ பாராளுமன்றங்களில் செயல்படுவதற்கான பற்றுறுதியும் திட நம்பிக்கையும் கொண்ட சிறந்த புரட்சிகர கம்யூனிஸ்டுகளாலான பாராளுமன்றக் கட்சிக் குழுவை தனது கட்டுப்பாட்டின்கீழ் கட்டி இயக்கும் ஸ்தாபன பலம் பெற்றிராத போது, பலம் வாய்ந்த, கட்டுப்பாடான கட்சியைக் கட்டுவதை முன்னிறுத்தி பாராளுமன்றத்தையும் தேர்தலையும் புறக்கணிக்க வேண்டும். நமது இந்தப் பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவும் வேண்டும்'' என்றும் அவர்களது ஆவணம் கூறுகிறது.

1983 அக்டோபரில் இந்த ஆவணத்தை கேடயம் - மனஓசை கும்பல் வெளியிட்ட பிறகு நான்கு முறை தேர்தல்கள் வந்துள்ளன. இவை எதிலாவது ஆவணத்தில் மேற்கண்டவாறு எழுதியிருக்கும் படி அவர்கள் நடந்து கொண்டார்களா? இல்லவே இல்லை. 1984 இல் வந்த பொதுத் தேர்தல்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை கேடயம் மன ஓசையினர் நடத்தினர். ஆனால், அவர்கள் தமது ஆவணத்தில் மேற்சொன்ன காரணத்தை முன்வைக்கவே இல்லை. ''போலிப் பாராளுமன்ற ஜனநாயகத் தேர்தல்கள்'' என்பதாக வைத்த முழக்கத்தின் தவறுக்காக தேர்தல்களுக்குப் பிறகு டிசம்பர் '84 மன ஓசையில் சுயவிமர்சனம் செய்து கொண்டனர்; அப்போதும் மேற்சொன்ன காரணம் பற்றி மூச்சு விடவில்லை.

1989 ஜனவரி சட்டமன்றத் தேர்தல்கள்,நவம்பர் பாரளுமன்றத் தேர்தல்களில் தனது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டது கேடயம் - மன ஓசை கும்பல். அப்போதும் தனது 1983 அக். ஆவணத்தில் முன் வைத்துள்ள நிலைப்பாட்டைக் கண்டு கொள்ளவில்லை. அதன் அடிப்படையில் தேர்தல்களைப் புறக்கணிக்கவும் இல்லை. அதற்கு மாறாக, 'பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் வேட்பாளர் உறுதி மொழிப் படிவத்தில் கையெழுத்திடும் பாசிச எதிர்ப்பு வேட்பாளர்களை இனங்கண்டு, உறுதி செய்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்; மற்றவர்களைப் புறக்கணிக்க வேண்டும்' என்று முடிவு செய்தனர். இதற்கு அவர்கள் சொன்ன காரணம்; ''இத்தேர்தல்களை முற்றாகப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்தால் அது தவறானதாகும். நாடு ஒரு பாசிச அபாயத்தை எதிர்கொண்டிருக்கிறது. மீண்டும் பாசிசக் கூட்டாட்சியை நிறுவத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் பாசிச சக்திகள் தேர்தல் வெற்றிகள் மூலம் மேலும் பலம் பெற்று விடும் வாய்ப்பு இருக்கிறது. இந்த அபாயத்தை முறியடிப்பது ஜனநாயகப் பற்றுள்ள அனைவரின் கடமை ஆகும்-எனவே இத்தேர்தலில் பாசிச எதிர்ப்பு சக்திகளை இனம் கண்டு வாக்களிக்கும்படி கேடயம்-மன ஓசை கும்பல் அறைகூவல் விட்டது. இதுதான் சரியானது என்றும், இதற்கு பெருமளவு மக்கள் ஆதரவளித்ததாகவும் பிறகு பீற்றிக் கொண்டது.

இது உண்மையானால், இதே காரணம் இன்னும் நீடிப்பதால் வரும் தேர்தல்களிலும் இதே தந்திரோபாயத்தைத்தானே கேடயம் - மனஓசைக் கும்பல் இப்போதும் பின்பற்ற வேண்டும்? அல்லது மேற்படி நிலைமையும் காரணமும் மாறிவிட்டதாகக் கூறுகிறதா? இல்லை. அப்படி எதுவுமே கூறாமல், எவ்வித விளக்கமும் தராமல் மீண்டும் நிலைப்பாட்டை இப்போது மாற்றிக்கொண்டது. 'அமைப்பு இன்மை, மற்றும் கட்சி கட்டும் பிரதானப்பணி ஆகிய காரணங்களினால் இத்தேர்தலில் நேரடியாகப் பங்கேற்பதில்லை; பாசிச, மதவெறி பாசிச சக்திகளைத் துரத்தியடியுங்கள், பாராளுமன்றவாத சக்திகளையும் மாயைகளையும் அம்லப்படுத்துங்கள், புரட்சிகர சக்திகளின் கீழ் அணிதிரளுங்கள்'' என்ற முழக்கங்களை வைத்து சாத்தியமான அளவு பிரச்சாரம் செய்வது என்று கேடயம் - மன ஓசை கும்பல் முடிவு செய்துள்ளது. அதோடு ''புறக்கணிப்பு என்பது நமது முழக்கமோ அறை கூவலோ அல்ல; இது சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல் குறித்த ஓர் எதிர்மறையான அணுகுமுறை என்று கருதுகிறோம்'' (16-30 ஏப் '91 கேடயம்) என்கின்றனர். அதாவது தேர்தலில் நேரடியான பங்கேற்பும் கிடையாது. புறக்கணிப்பு முழக்கமோ அறைகூவலோ கிடையாது என்பது அவர்களது இப்போதைய நிலைப்பாடு. ஆனால், இதுவும் அவர்கள் 1983 அக்டோபர் ஆவண நிலைப்பாட்டிற்கு மாறானது, முரணானது. அதன்படி ''ஐக்கியப்பட்ட கட்சிக் காங்கிரசு தீர்மானிக்கும்வரை புறக்கணிப்பே சரியான போர்த்தந்திரம்'' என்று கூறினார்கள் முதலாளித்துவப் பாராளுமன்றம் மற்றும் தேர்தல்கள் குறித்த லெனினிய நிலைப்பாடுகள் என்று எதைத் தமது ஆவணத்தின்மூலம் எழுதி வைத்துள்ளார்களோ அதையே அவர்களே மதிப்பதில்லை; பின்பற்றுவதில்லை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழ அகதிகள்: தொடரும் துயரம்

**தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழ அகதிகள் மூன்றாந்தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். நொந்த மாட்டை காக்கை கொத்துவது போல பல வழிகளிலும் அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள்.**

"இனி நான் நாடு திரும்ப மாட்டேன்; வெளியேறும்படி நிர்பந்தித்தால் நான் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொள்வேன்" - எலும்பும் தோலுமான 24 வயதான மகேஸ்வரி. தனது இரு குழந்தைகளுடன் 1990 ஆகஸ்ட் மாத மத்தியில் மண்டபம் முகாமுக்கு வந்த ஆயிரக் கணக்கான இலங்கை தமிழ் அகதிகளில் அவரும் ஒருவர். மன்னாருக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்.

சிங்கள ராணுவத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவரது உடல் நடுங்குகிறது. "அன்று நள்ளிரவில் திடீரென துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ஆறு ராணுவ லாரிகளில் சிங்கள ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே வந்தனர். குழந்தைகளை தூக்கிக் கொண்டு நாங்கள் காட்டை நோக்கி ஓடினோம். திடீரென வானிலிருந்து ஹெலிகாப்டர்கள் குண்டு வீசின. சிங்கள ராணுவத்தினர் எங்களை துரத்திக்கொண்டே சுட்டனர். எனது இளைய சகோதரன் என் கண் முன்னே துடிதுடித்து இறந்தான். இரு நாட்கள் பட்டினி கிடந்து கள்ளத் தோணியிலே இங்கு வந்து சேர்ந்தேன்" என்று பயபீதியுடன் விசும்பிக்கொண்டே அவர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையில் யார்தான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஈழத்தில் வாழ முடியும்? 1983 ஜூலை இனக்கலவரத்துக்குப் பிறகு 3 லட்சம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர். பாசிச ராஜீவின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு பாதிக்கும் மேற்பட்ட அகதிகள் நாடு திரும்பிவிட்டதாக அரசு கணக்கு காட்டியது. ஆனால், இந்த துரோக ஒப்பந்தம் கழிப்பறைக் காகிதமாகி, 1990ல் சிங்கள அரசு பயங்கரவாதிகள், புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் சிவிலியன்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஏவத் தொடங்கியதும், இந்தியாவுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை 4 மடங்காக அதிகரித்தது. உத்தேச மதிப்பீட்டின்படி ஏறத்தாழ இரண்டரை லட்சம் தமிழ் அகதிகள் இப்போது இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் 1,20,000 பேர் அரசு ஏற்பாடு செய்துள்ள அகதி முகாம்களிலும், மற்றவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலுமாக பல்வேறு இடர்பாடுகளுக்கு நடுவே வாழ்க்கையைத் தள்ளுகின்றனர். தமிழகத்திலுள்ள

243 முகாம்களில் அரசின் நிவாரண உ
காக கையேந்தி நிற்கும் தமிழ் அகதிக
நிலைமை சோகத்திலும் துயரமானதாக
ளது.

சிமெண்ட் தகடுகளைக் கொ
கூரைக் கொட்டகை; குடிநீர், சாக்க
கழிப்பறை வசதிகளற்ற இருப்பிடம்;
துவ வசதிகள் மருந்துக்குக்கூட கிடை
மாதத்திற்கு 150 ரூபாய் நிவாரணத் தெ
மானிய விலையில் வழங்கப்படும் புழு
போன அரிசி — இந்த அற்ப நிவா
தைக் கொண்டுதான் அவர்கள் வாழ
டும்.

சிறிய பெட்டி போன்ற சிமெண்ட்
களைக் கொண்ட வீடு; அதில் பெண்கு
மறைவிட வசதி ஏதும் கிடையாது. கே
காலத்தில் இந்த வீடுகளில் ஒரு நிமிடப்
நிற்க முடியாது. ஆஸ்பஸ்டாஸ் கூ
ளைக் கொண்ட இந்த வீடுகள் கெ
சூளையிலிருப்பதைப் போல அனலை
கும். "பெரியவர்கள் எப்படியாவது
ளிக்கலாம்; ஆனால், கைக்குழந்தை
வைத்துக்கொண்டு நாங்கள் படும்
யைச் சொல்லி மாளாது. எங்கள் குழந்
ளில் பலருக்கு கடந்த ஆண்டில் அ
நோய் தாக்கியது. எந்த மருத்துவ வச
எங்களுக்கு கிடைக்கவில்லை" என்
தென்னாற்காடு மாவட்டம் கனகராம்
கிராமத்திலுள்ள அகதி முகாமில் வசி
ஒரு தாய்.

"எங்களுக்கு முன்னைப் போல
ணத் தொகையும் ரேஷன் பொருட்
உரிய காலத்தில் கிடைப்பதில்லை.
மாதத்துக்கு 5 லிட்டர் மண்ணெண்
தருகிறார்கள். அதைக்கொண்டு
நாங்கள் சமைக்க முடியும்? பல மைல்
அலைந்து விறகு பொறுக்கி வந்து
டியோ சமாளிக்கிறோம். மழைக் க
ளில் எங்கள் பாடு திண்டாட்டம்
என்று வேதனையுடன் கூறுகிறார் அ
குப்பம் கிராமத்திலுள்ள முகாமைச்
தெரசம்மா எனும் மூதாட்டி.

தமிழகத்திலுள்ள அகதி நிவ
முகாம்களிலேயே கனகராம்பட்டி
முகாம்தான் மிக மோசமான நிலையி
ளது. சிதம்பரத்திலிந்து 7 கி.மீ. தொ
லுள்ள இந்த முகாமில் குடிநீர் வசதி
கிடையாது. பெண்களுக்கு மறைவி
குளியலறையோ அங்கு இல்லை. இத
எந்த மருத்துவ வசதியும் அவர்க
செய்துதரப்படவில்லை.

கனராம்பட்டிலுள்ள பொது ச
கூட கொட்டகை இற்றுவிழும் நில
உள்ளது. மழைக்காலத்தில் அவர்கள்
சமைப்பார்கள் என்றே புரியவில்லை.
கள் தினமும் ஆற்றைக் கடந்து 5
தொலைவுக்குச் சென்று விறகு பெ
வந்து சமைக்கிறோம். மழைக்காலத்
கொஞ்சம் விறகை சேமித்து வைக்க
வசதி ஏதுமில்லை. ஆண்டவன் தான்
ளைக் காப்பாற்ற வேண்டும்" எ
வள்ளியம்மை எனும் தாய்.


இதர அகதி முகாம்களும் ஏ
இதே நிலையில்தான் உள்ளன.
வடக்கு பிச்சாவரத்திலுள்ள அகதி
சற்று மேம்பட்ட நிலையில் உள்ள

**அனிச்சன் குப்பத்திலுள்ள அனல் கக்கும் பெட்டி வீடுகள். அடிப்படை வசதி ஏதுமின்றி அவதிப்படும் அகதிகள்.**



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

வகுப்பு வாத எதிர்ப்பு கோஷமிட்டுக் கொண்டே மறுபடியும் வகுப்புவாதிகளுடன் 'தோழமை உறவு' வைத்துக் கொண்டு ஓட்டுப் பொறுக்குகிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். கேரளாவில் அண்மையில் 'மார்க்சிஸ்டு' கட்சிப் பத்திரிக்கை 'தேசாபிமானி'யில் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பாதிரியார் பிரடெரிக்ஸ், கன்னியாஸ்த்திரி சிசிலிஸ் ஆகியோர் அளித்த பேட்டி ஒன்று வெளியானது. மேலும், ''கம்யூனிசம் அபாயகரமானது அல்ல; மதத்திற்கு அச்சம் விளைவிப்பதும் அல்ல'' என்று கேத்தலிக் பிஷப் கூறியதும் வெளி வந்தது. தேர்தல் வெற்றியை தீர்மானிப்பதில் கேரளாவில் கிறிஸ்துவர்களின் ஓட்டு கணிசமான பங்கு வகிப்பதால் நம்பூதிரிபாடும் இதை வரவேற்றுள்ளார்.

''கேரளாவில் 1987க்கு முன் 25 வருட காலமாக சாதிமத அடிப்படையிலான அரசியலே நடந்தது. 1987க்குப் பின் அதாவது 25 வருட இடைவெளிக்குப் பின் சி.பி.எம். தலைமையிலான இடது முன்னணி அமைந்தபிறகே சாதி மத அரசியலுக்கு எதிரான தளம் உருவானது. 1980 - 81ல் நான் முதல்வராக இருந்தபொழுது எங்களணியிலும் முஸ்லிம் லீக்கின் ஒரு குழு பங்கேற்றிருந்தது... நாங்கள் வளைகுடாப் போரில் எடுத்த நிலைப்பாட்டினால் முஸ்லீம்கள் ஆதரவைப் பெற்றோம்... மண்டல் கமிஷன் ஆதரவு நிலைப்பாட்டினாலும் கேரள நிலைமைக்கேற்ப பிற்பட்ட தாழ்த்தப்பட்ட பட்டியலை திருத்தி சலுகைகள் வழங்கினதாலும் மலபார் முஸ்லீம் மற்றும் ஈழ்வா சாதியினரிடையே வரவேற்பை பெற்றோம்...'' என்று 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' பத்திரிக்கையில் எழுதியுள்ளார் ஈ.கே. நாயனார். 25 வருடமாக சாதி - மத அரசியலில் நாங்களும் மூழ்கி (உடந்தையாக) இருந்தோம்; அதற்குப் பின்னும் (87 -க்குப் பின்) எதிரணியிட மிருந்த முஸ்லீம்கள், ஈழவா சாதியினர் ஓட்டைப் பொறுக்கவே செயல்பட்டோம்— என்பதுதானே நாயனாரின் மறைமுகமான ஒப்புதல் வாக்குமூலம்?!



அவள் கைதியாக இருக்கலாம்! அதற்காக, பிரசவ வலியால் துடிக்கும்போதுகூட ஆஸ்பத்திரி கட்டிலோடு பிணைக்கப் பட்டிருக்கும் கை விலங்கை அகற்றாமலேயா பிரசவம் பார்ப்பது? எந்த கொடுங்கோலனும் செய்யத் துணியாத காரியமல்லவா இது. ஆனால், இஸ்ரேலில் யூத வெறியர்கள் ஒரு பாலஸ்தீன பெண்ணுக்கு இக்கொடுமையைச் செய்தார்கள். அப்பெண்ணின் பரிதாப நிலையைக்கண்டு டாக்டர்கள் கூட இரக்கப்படவில்லை; கைவிலங்கை அகற்றும்படி சிறையதிகாரிகளிடம் கோரவில்லை.

இன்டிசர் எல்காக் எனும் இப்பெண் பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடியவர். அதனால்தான் யூதவெறியர்களின் இச்சித்ரவதைக்கு எதிராக உறுதியுடன் இருந்து அருமையான புதல்வியை பெற்றெடுத்தார். தமது தாய் பூமி 'வாட்டன்' நினைவாக அப்பெயரையே மகளுக்கு சூட்டினார். எல்காக்கிற்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி கடந்தவருடம் ஜுன் 3ம் தேதி நடந்தது. அண்மையில்தான் இச் செய்தி அம்பலத்திற்கு வந்தது. அதுவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியால் சிறை நிர்வாகத்தினர் எல்காக்கிடம் மன்னிப்பு கேட்ட செய்தியோடுதான் வந்தது.

மத்திய பிரதேசத்தில் காங்கிரசு கட்சி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டதும் 'சீட்' கிடைக்காதவர்கள் அதிருப்தி அடைந்தனர். இவர்களில் ஒருவரான அர்ஜுன்சிங் கோஷ்டியைச் சேர்ந்த சுரேந்திர சிங் தாக்கூர் என்பவர், போபால் தொகுதியில் போட்டியிட விரும்பி காத்துக்கிடந்தவர். எதிர்க்கோஷ்டியினருக்கு 'சீட்' கிடைத்ததால் ஆத்திரமுற்று தமது கோஷ்டியினரை வெறியூட்டினார். இதன் விளைவுதான் இக்காட்சி! இரு கோஷ்டியினரும்பட்ட பகலில் நடுத்தெருவில் கட்டிப் புரண்டார்கள். ரத்தம் சிந்தும்வரை சண்டை ஓயவில்லை. மாற்றுக் கட்சியினர் அடித்துக் கொள்வது போதாமல் ஒரே கட்சிக்காரர்கள் அடித்துக் கொள்ளும் நிலை உருவாகி விட்டது. இப்பொறுக்கி அரசியல் கலாச்சாரத்திற்கு முன்னோடியாக விளங்குகிறது காங்கிரசு.

பாரதிய ஜனதா, காங்கிரசு முதலான கட்சிகளைப் போலவே போலிக் கம்யூனிஸ்டுகளும் கவர்ச்சி அரசியலில் குதித்து விட்டார்கள். மே.வங்கத்தில் உத்பால் தத், மாதாபி சக்ரோபர்த்தி, அனுப்குமார், பிஜ்பலாப் சட்டர்ஜி முதலான வங்காளப்பட நடிகர் நடிகையர்களை தேர்தல் பிரச்சாரத்திற்கு இறக்கியிருக்கிறார்கள். இதில் உத்பால் தத் காங்கிரசு கட்சித் தலைவர் எஸ்.எஸ்.ரே தொகுதியில் 'மார்க்சிஸ்டு' கட்சி வேட்பாளரை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்துவருகிறார். 'முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு' என்கிறார்களோ?

ரெய்ச்சூர் மாவட்டம் - கோப்பல் பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் (கன்னட நடிகர்) ரசிகர் மன்றத்தினர் ஒரு புதுமையான போராட்டம் நடத்தினர். கோப்பலை தனி மாவட்டமாக்கக் கோரி நடத்திய போராட்டங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு வந்ததால் ஆள்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக கழுதையை வேட்பாளராக மனுதாக்கல் செய்ய ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். 'வேட்பாளர் வருகிறேன் வழிவிடுங்கள்' 'உங்களுக்காக அல்ல எனக்காக ஓட்டுப்போடுங்கள்' 'என்னை தேர்ந்தெடுப்பீர்களா உங்களுக்கு விசுவாசமாக செயல்படுவேன்' போன்ற முழக்க அட்டைகளால் கழுதையை அலங்கரித்தனர். ஆனால், கமிஷனர் அலுவலகத்திற்கு முன்பே அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். 'கழுதை வேட்பாளராக சட்டத்தில் இடமில்லை' என்றார்களாம் அதிகாரிகள். விவரம் தெரியாதவர்கள்! ஓட்டுப் பொறுக்கிகளுக்கு எந்த விதத்தில் சளைத்தது இந்த கழுதை?!





படிப்பகம்

www.padippakam.com



### வேலூர் துப்பாக்கிச்சூடு:

# போலீசின் காட்டுமிராண்டித்தனம்

## பஸ்தொழிலாளர் போராட்டம்

கட்டுப்பாடற்ற வெறிநாய்க் கூட்டமாக போலீசுப்படை வளர்ந்துவிட்டது. அதன் வரைமுறையற்ற அதிகாரத்துக்குக கீழ்ப்படியாத யாரையும் அது விட்டு வைக்காது, பாய்ந்து கடித்துக் குதறும்; அதற்கு எதிரான எரிமலையாக உழைப்பாளி மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்; தருணம் வரும் போது வெடித்துச் சீறத் தவற மாட்டார்கள் - இதைத்தான் மே 6-ந் தேதி வேலூரிலும் 10-ந் தேதி திருச்சியிலும் நடந்த போலீசு அக்கிரமங்களும், அவற்றுக்கு எதிராக பஸ் தொழிலாளர்கள் நடத்திய 'திடீர்' போராட்டங்களும் காட்டுகின்றன.

பொதுவாகவே, பஸ் - லாரிகளிடம் நடத்தும் ''நெடுஞ்சாலைக் கொள்ளை'' போலீசின் முக்கியமான வசூல் வேட்டைகளில் ஒன்று. ஆனால் அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளரிடம் இதற்கு வாய்ப்பில்லை; ஆகவே அவர்களிடம் எப்போதும் வெறுப்போடு நடந்து கொள்வது போலீசின் வழக்கம்.

குறிப்பாக, தனியார் பஸ் முதலாளிகளிடம் மாமூல் வாங்கிக் கொண்டு அரசு போக்குவரத்துக் கழக பஸ்கள் நகர எல்லைக்குள் பயணிகளை ஏற்றிக் கொள்ளாதவாறு விரட்டுவது போலீசின் அன்றாட வேலையாகி விட்டது. இப்படித்தான் மே 6- ந்தேதி வேலூரில் இருந்து திருவண்ணாமலை புறப்பட்ட தளபதி அழகிரி போக்குவரத்துக் கழக பஸ். வழியில் கைகுழந்தையுடன் இருந்த ஒரு பெண்மணியை ஏற்றிக் கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில் பறந்து வந்த போலீசு அதிகாரி மாணிக்கம் ஆபாச, நரகல் நடையில் ஏசி பஸ்ஸை எடுக்கும்படி கூச்சல் போட்டான். போலீசுக்காரன்களுக்குத்தான் சாராயத்தையும் சாக்கடையையும் கலந்து குடித்தவனைப் போல ஏச வருமே! அதைச் சகிக்கமுடியாத ஓட்டுநர் கணேசன் மரியாதையாகப் பேசும்படி கோரினார்.

இதுவே தனது அதிகாரத்துக்கு விட்ட சவாலாகக் கருதிய போலீசு அதிகாரி, வேறு இரண்டு போலீசுக் குண்டர்களைச் சேர்த்துக் கொண்டு ஓட்டுனரையும், நடத்துனர் விக்டரையும் வெளியே இழுத்துப்போட்டு கம்பினால் தாறுமாறாக அடித்து 'ஆட்டோ'வில் இழுத்துப்போட்டுக் கொண்டு வேலூர் நகர தெற்கு போலீசு நிலையத்திற்குப் போய் மேலும் தாக்கினார்கள்.

உடனே சக தொழிலாளர்களை விடுவிக்கவும் நீதி கேட்டும் அரசு பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். பஸ்களை குறுக்கும் நெடுக்கும் நிறுத்தப்பட்ட சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆனால் கும்பலாகத் திரண்டு வந்த போலீசுக்காரன்கள் தொழிலாளர் மீதும் பொதுமக்கள் மீதும் மிருகத்தனமான தாக்குதலில் இறங்கியதோடு தாமே பஸ்களை அப்புறப்படுத்த முயன்றனர். நடத்துனர்களின் பணப் பைகளைப் பிடுங்கி சூறையாடியதோடு, சாலையோரம் இருந்த பொதுமக்கள் மீதும் தடியடி நடத்தி நூற்றுக்கும் மேற்பட்டவர்களை படுகாயப்படுத்தினர். கடும் எதிர்ப்புக் காட்டிய தொழிலாளர்கள் வேலூர் நகரின் பிரதானச் சாலைகளை எல்லாம் பஸ்களை நிறுத்தி தடைகளை ஏற்படுத்தினர்.

மதியம் 12.30 மணிக்கு வேலூர் - கிருஷ்ணா நகரில் உள்ள பணிமனை வளாகத்துக்குள் அமர்ந்து போலீசு அராஜகத்தைக் கண்டித்து தொழிலாளர் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர். வாயிற்காவலர்களைத் தாக்கி, கதவுகளை நொறுக்கி பணிமனைக்குள்ளே புகுந்த போலீஸ் குண்டர்கள் - நிராயுதபாணிகளான தொழிலாளர்கள் மீது தடியடி, துப்பாக்கி சூடு நடத்தினர். பயிற்சித் தொழிலாளி ராஜாராம் ரத்தவெள்ளத்தில் வீழ்ந்து பலியானார்; ஒருவர் தொடையில் குண்டு பாய்ந்தது. இன்னொருவர் கழுத்தைச் சிராய்த்தது. நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர்.

பணிமனையிலிருந்த பஸ்கள், அலுவலகப் பொருட்கள் அனைத்தையும் அடித்து நொறுக்கினர். தொழிலாளர்களிடம் இருந்த கடிகாரம், மோதிரம், பணத்தைக் கொள்ளையிட்டனர். உணவு விடுதிக்குள் புகுந்து, ஒளிந்து கொண்டிருந்த பெண் ஊழியர் உட்பட அனைவரையும் வெளியே இழுத்துப் போட்டுத் தாக்கினர்.

இதேபோல கொனவட்டம் பணிமனை, ரங்காபுரம் தலைமை அலுவலகம், அன்னை சத்யா போக்குவரத்துக் கழக அலுவலகம் ஆகியவற்றுக்குள் புகுந்து போலீசு குண்டர்கள் வெறியாட்டம் போட்டனர். பஸ் நிலையம், பிரதானச் சாலைகள், அடிபட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவமனை ஆகிய பல இடங்களிலும் தொழிலாளர்களை மட்டுமல்ல, கண்ணில் பட்ட பொதுமக்கள் அனைவரையும் அடித்து நொறுக்கினர். அடி பட்டவர்களுக்கு முதலுதவியோ, குடிக்க நீரோ கொடுப்பவர்களைக் கூடத் தாக்கினர்.

சாலையில் போய்க்கொண்டிருந்த நடத்துனர் மூர்த்தியின் காக்கிச் சட்டையைக் கண்டதும் துரத்திப் போய் ஜீப்பை ஏற்றினான் போலீசு சுப்பிரெண்டண்ட். போலீசின் அட்டூழியங்களைக் கண்ட வேலூர் நகரே கடையடைப்பில் ஈடுபட்டது.

''போலீசுகிட்ட துப்பாக்கி இருக்கிறதால தான் இப்படி பண்றான். எங்கிட்ட ஒரு துப்பாக்கிய குடுங்க; போலீசு நாய்களை ஒரு கை பார்த்துட்டு வர்றேன்'' என்றார் ஒரு பெண்மணி ஆத்திரம் பொங்க!


''நீங்கள்ளாம் என்ன ஆம்பளைங்க? வண்டிய எடுத்து 20 பேரையாவது சாய்ச்சிட்டு வர்றதில்ல...'' என்று ஒரு ஓட்டுனரிடம் ஆவேசமாகக் கேட்டார் இன்னொரு பெண்மணி! அவ்வளவு வெறுப்பும், கோபமும் கொள்ளச் செய்து விட்டது வேலூரில் அன்று நடந்த போலீசு அக்கிரமம்.

இத்தனையும் செய்துவிட்டு குண்டடிபட்ட தொழிலாளியின் சவ ஊர்வலத்தைக் கூட அனுமதியாத போலீசுக் குண்டர்கள், மே 8-ந் தேதி தாமே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். போலீசு அதிகாரிகளின் கூட்டம் போட்டு போலீசு மீது தொழிலாளர்கள் திராவகம் வீசியதாகவும், போலீசு வாகனங்களைச் சேதப்படுத்தியதாகவும் கட்டுக்கதை வெளியிட்டனர். வெட்கமின்றி ஆதித்தன் குடும்ப ஏடுகள் அப்பொய்ச் செய்திகளை வெளியிட்டன.

இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நடந்த பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் இரண்டாம் நாளும் தொடர்ந்ததற்குக் காரணம், அவர்களது கோரிக்கையை அரசு ஏற்காதது மட்டுமல்ல; திருப்பத்தூர், திருச்சி போன்ற வேறு சில இடங்களிலும் தொழிலாளர்கள் மீது போலீசார் தாக்கியுள்ளனர். தனியார் பஸ்களை ஓட விட்டு வேலை நிறுத்தத்தை முறியடிக்க போலீசார் முயன்றதை தொழிலாளர்கள் தடுத்ததை சாக்காக கூறினர்.

வேலூர் விபத்தில் பலியான, காயமடைந்த தொழிலாளிகளுக்குச் சொற்பத்

போலீசின் கொலைவெறித் தாக்குதல் - மருத்துவமனையில் பஸ் தொழிலாளர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

தொகை நட்டஈடாகத் தருவது; விசாரணை கமிசன் போடுவது ஆகியவை தவிர தொழிலாளரது கோரிக்கை எதையுமே அரசு ஏற்கவில்லை. மே 6- ந்தேதி சம்பவம் துவங்கியதற்கு காரணமான இரண்டு போலீசுக்காரன்களை இடமாற்றம் செய்ததோடு சரி. தொழிலாளி மீது ஜீப்பை ஏற்றியதற்கும், துப்பாக்கி சூடு நடத்தியதற்கும் காரணமான போலீசு அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் இல்லை. பேச்சு வார்த்தைகள், முடிவுகள் எதுவும் பற்றித் தொழிலாளரிடம் கூறவோ, சம்மதம் பெறவோ கூட தொழிற்சங்கத் தலைமை முயலவில்லை.

இதனால் திமிராகிப்போயுள்ள போலீசுகாரன்கள் வழக்கம் போல தமது அதிகாரத்தைக் காட்டத் துவங்கிவிட்டனர். இதன் காரணமாகத்தான் மே 10 ந்தேதி திருச்சி சம்பவங்கள் நடந்துள்ளன. அன்று தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நரகப் பேருந்தில் 'டிக்கெட்' வாங்க மறுத்து தகராறு செய்த ரிசர்வ் போலீஸ்காரன் நல்லுசாமியை விமான நிலையப் போலீசு நிலையத்தில் ஒப்படைத்தனர் ஓட்டுனரும் நடத்துனரும். வீடு திரும்பிய நல்லுசாமி, ஒரு ரிசர்வ் போலீசு கும்பலைத் திரட்டி கொண்டு போய் அந்த ஓட்டுனர் - நடத்துனரை மடக்கித் தாக்கியதோடு பஸ் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். அருகிலிருந்த பணிமனைக்குள்ளும் புகுந்து தொழிலாளர்களைத் தாக்கினர்.

இதற்கு எதிராக ஒரு நாள் முழுவதும் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட திருச்சியும் சுற்று வட்டாரமும் ஸ்தம்பித்தது. வேறுவழியின்றி இச்சம்பவத்திற்குக் காரணமான போலீசுக்காரன் மீது வழக்குப்போடவும், தாக்குதலில் கலந்து கொண்ட ரிசர்வ் போலீசு அதிகாரி காசிநாதனை தற்காலிக வேலை நீக்கம் செய்யவும், அலட்சியம் காட்டி தாக்குதலை தடுக்கத் தவறிய இரு அதிகாரிகளை இடமாற்றம் செய்யவும் அரசு ஒப்புக் கொண்டது.

நாட்டிலேயே மிகவும் மோசமான சமூக விரோத, சட்ட விரோத கிரிமினல் கும்பல் என போலீசு வெறிநாய்க் கூட்டம் அப்பட்டமாகக் காட்டிக் கொண்டு வருகிறது. கும்பல் கும்பலாகப் போய் பொதுமக்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தித் தனது கேள்விக்கு இடமற்ற அதிகாரத்தை நிலைநாட்டி வருகிறது. அதன் கூட்டாளிகளான ரௌடி - சமூக விரோத - கள்ளச்சாராய கும்பலே கூட சகிக்க முடியாத அளவு வளர்ந்து விட்டதை சமீபத்திய வேறு இரு சம்பவங்கள் காட்டின. ஒன்று காட்டுமன்னார்குடி அருகே புத்தூரில் ஒரு சாராய கும்பலே போலீசு நிலையத்திற்குள் புகுந்து தாக்கி, ஒரு போலீசுக்காரனை வெட்டிக் கொன்றது; மற்றது போலீசு நிலைய கொட்டடி சித்ரவதைகள் - கொலைகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புகளும் விசாரணைக் கமிசனும்.

அப்படி இருக்கும்போது, அமைப்பு ரீதியில் திரண்டுள்ள தொழிலாளர்கள் எவ்வளவு காலம்தான் இந்தப் போலீசு அக்கிரமங்கள் - அதிகாரங்களைச் சகித்துக் கொள்ள முடியும்?

— தகவல்: ம.க.இ.க வேலூர் கிளை.

தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்:

# போலீசு கும்பலின் பீதி! புரட்சியாளர்களின் உறுதி!

''ஓட்டுப்போடு'' என்று பிரச்சாரம் செய்வதைப் போல் ''ஓட்டுப் போடாதே'' என்று பிரச்சாரம் செய்வதற்கும் உரிமை உண்டு. ஆனால், தேர்தலை புறக்கணிக்க கோரும் பிரச்சாரத்தை பரவலாக தடை செய்து கொண்டே இது ஜனநாயக நாடு; அனைத்து கருத்துக்களுக்கும் உரிமை உண்டு என்று கூக்குரலிடுகிறது அரசு. ஓட்டுக்கட்சிகள் சட்டத்திற்கு புறம்பாக அரசு வாகனங்களை பயன்படுத்துவதையும் கருப்புப் பணத்தை வாரியிறைத்து ஆபாச, சாதி - மத வெறி கூச்சல் போடுவதையும் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக அலங்கார வளைவு வைப்பதையும் மௌனமாக அங்கீகரிக்கிறது அரசு. சட்ட அனுமதியோடு புரட்சியாளர்களின் குரல் ஒரு மூலையில் கேட்டால் கூட பாய்ந்து வந்து குரல் வளையை பிடிக்கிறது. ஏனெனில் அது மக்களுக்கான கருத்து!

கோவையில் மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்கள் ஏப்ரல் 23, 24, 25 ஆகிய தேதிகளில் கோவையின் மையமான இடங்களில் தேர்தல் புறக்கணிப்பு முழக்க அட்டைகள், கொடிகளுடன் தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர். மூன்றாம் நாளன்று பி-1 போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசு வந்து பொறுப்பாளர் யார் எனக் கேட்டு தோழர்கள் நசீம் இக்மத், காளி, கதிரவன் ஆகியோரை கைது செய்தது. ம.க.இ.க. அலுவலகத்திற்கு வந்து பிரசுரங்களை அள்ளிச் சென்றது. இவற்றையே ஆதாரமாகக் காட்டி 'மக்களை வன்முறைக்குத் தூண்டினார்கள்' என பொய் வழக்கு போட்டது.

போலீசு நிலையத்தில் 'கியூ' பிரிவு போலீசு, தோழர்களை தனித்தனியாக அழைத்து விசாரணை என்ற பெயரில் மிரட்டியது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவர், ''தேர்தல் முடிந்த பிறகு உங்கள் பிரச்சாரத்தை நடத்த வேண்டியதுதானே'' என தனது முட்டாள்தனத்தை வெளிப்படுத்தினார். போலீசு கமிஷனர் ரமணன் வந்து ''உங்களுக்கு எவ்வளவு துணிவு இருந்தால் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்வீர்கள்'' என காட்டுக்கூச்சல் போட்டுவிட்டுப் பின் அடங்கிப்போனார்.

மறுநாள் போலீசு, தோழர்களின் வீட்டிற்கு வந்து குடும்பத்தாரை மிரட்டி பீதியூட்டியது. குடும்பத்தினரிடம் ''நாளை வந்து ஜாமீனில் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுப் போனது. ஆனால், மறுநாள் ஜாமீனில் எடுப்பதற்குள் பொய் வழக்கு போட்டு சிறைக்கு கொண்டு போய்விட்டது. இதுவன்றி தோழர் நசீம் இக்மத் அரசு ஊழியர் என்பதை அறிந்து பொய்ப் புகார் கொடுத்து காலவரையற்ற வேலை நீக்கம் செய்ய வைத்தது.

இன்றும் கமிஷனர் ரமணன் உத்தரவின் பேரில் பி-5 போலீசு நிலையத்தார், ம.க. இ.க. முன்னணி தோழர் மணி வண்ணனை கண்காணித்து வருகிறார்கள். ம.க.இ.க. அலுவலகத்தில் வந்து நேரடியாக அணுகாமல் அக்கம்பக்கத்தாரையும், வீதிவழியே போகிறவர்களையும் மிரட்டி பீதியூட்டி வருகிறது போலீசு.

தோழர் மணிவண்ணன் வீட்டிற்கும் வந்து வீட்டு உரிமையாளரை மிரட்டியது போலீசு. வீட்டுக்காரர், ''சரி அவரை காலி பண்ண சொல்லி விடுகிறேன்'' என்றதற்கு ''வேண்டாம்; அவர்கள் நல்லவர்கள்தான். தேர்தல் முடியும்வரை இந்த மாதிரி நாங்கள் வருவோம். இதனால உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது'' எனக் கூறியுள்ளது போலீசு.

கைதான மூவருக்கும் முன் ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளது. கோர்ட்டிற்கு தோழர்களை சட்டவிரோதமாக கைவிலங்கிட்டு அழைத்து வந்தது போலீசு. தோழர்கள் கைவிலங்கை அகற்ற கோரினர். போலீசு மறுக்கவே கோஷமெழுப்பினர். அப்போது பாதுகாப்பிற்கு வந்த போலீசு ஒருவன், மரியாதையின்றி பேசியதோடு ''தப்பியோட முயன்றீர்கள் எனச் சுட்டுக் கொன்று விடுவோம்'' எனக் கத்தினான். தோழர்கள் அவனுக்குப் புரியும் மொழியிலேயே தக்க பதிலடி கொடுக்கவே உடன் இருந்த போலீசாரின் சமரச முயற்சிக்குப்பின் அடங்கிப் போனான்.

அடக்குமுறைக்கு அஞ்சியவர்கள் அல்ல புரட்சியாளர்கள்; அதை சவாலாக எடுத்துக் கொள்பவர்கள். மக்கள் அதரவுடன் கோவை நகரெங்கும் போலீசின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர். தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை உறுதியுடன் தொடர்கின்றனர்.

— தகவல்: ம.க.இ.க., கோவை.


மே முதல் மாத இதழாக
வெளி வருகிறது

**புதிய கலாச்சாரம்**

இந்த இதழில்......

★ விளம்பர நிறுவனங்களின் தயவில் ஓட்டுக்கட்சிகள்

★ 'இன்று ஒரு தகவல்' திண்ணைப் பேச்சுக்கு இன்னொரு வடிவம்.

விலை ரூ.2


படிப்பகம்

www.padippakam.com

*நல்ல பிள்ளை வேஷம் போட்டு நாடாளுமன்றப் பதவிகளைப் பிடிப்பதற்கான நாய்ச் சண்டையில் இறங்கியுள்ளன ஓட்டுக் கட்சிகள். ஆனால், தேர்தல்கள் முடிந்து நாடாளு மன்றத்துக்குப் போய் இக்கட்சிகள் எப்படி நடந்து கொள்கின்றன? மக்கள் மீது ஏவிவிடப்படும் அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தி, நிறுவன மயமாக்குவதற்குத் தேவையான கறுப்புச் சட்டங்களை நிறைவேற்றுவதில் கட்சி வேறுபாடின்றி, விதிவிலக்கின்றி கைகோர்த்துக் கொள்கின்றன. 1985-89 எட்டாவது நாடாளு மன்றத்தில் இந்தக் கட்சிகளின் நடத்தை குறித்து, டில்லி மக்கள் ஜனநாயக உரிமை சங்கத்தின் பிரசுரம் அம்பலப்படுத்துகிறது. அதன் இரண்டாவது பகுதி இங்கே தொடர்கிறது.*

# சர்வகட்சி முழக்கம்: ''பயங்கரவாத வன்முறைக்கு ஐக்கியப்படுவோம்!''

## — அரசியல் கட்சிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதும்

பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டன பல கறுப்புச் சட்டங்கள். ஆனால் அவை அனைத்தும் பத்திரிக்கையாளர்கள், கல்வியாளர்கள், குடியுரிமை இயக்கத்தினருக்கு எதிராக ஏவி விடப்பட்டன. அதுமட்டுமல்ல;

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிரான எந்தவொரு அரசியல்வாதிக்கும் எதிராக ஏவிவிடப்பட்டன.

அசாமின் முதல்வர் பிரபுல்ல குமார், போலீசு அமைச்சர் பிரிகு குமார் புகான் ஆகியோரது விவகாரங்களையே எடுத்துக் கொள்ளுங்கள்; இவர்கள் இருவருமே அனைத்து அசாம் மாணவர் சங்கத்துடன் இணைந்த அனைத்து கௌகாத்தி மாணவர் சங்கத்தின் தலைவர்களாக இருந்தவர்கள். ஆனால் பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் அம்மாநிலத்தில் அமுலுக்கு வந்த போது அதற்கு முதல் பலியானவர்களில் ஒருவர் அனைத்து கௌகாத்தி மாணவர் சங்கத்தின் தற்போதைய தலைவர். டெல்லியில் அதன் குருதுவாரா பிரபந்தக் கமிட்டி தேர்தலின் போது அகாலித்தளத்தின் செயலாளர் சர்தார் பீர் பகதூரைத் தடுப்புச் சிறையில் வைக்க இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. அப்போது இந்திரா காங்கிரசின் ஆதரவு பெற்றிருந்த பர்னாலா குழு டெல்லி குருதுவாரா பிரபந்த கமிட்டி தேர்தலில் ஆதரிக்கும்படி 60 வயதான அம் முதியவரை நிர்ப்பந்திப்பதற்காக இவ்வாறு சிறையில் வைக்கப்பட்டார். ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு பஞ்சாபில் அரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்ட உடனே, 1987 மேயில் பர்னாலா அரசாங்கத்தின் மூத்த மந்திரியான பிரேம்சிங் சந்துமாஜ்ரா அதே சட்டத்துக்குப் பலியானார்.



*பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்படி போலீசு வாங்கும் ஒப்புதல் வாக்குமூலம் 'கோர்ட்டில்' செல்லுபடியாகும்; எனவே இதற்காக வெற்றுத் தாள்களில் 'கைதி'களிடம் கையெழுத்து வாங்குவதற்காக போலீசு சித்திரவதை செய்வது வழக்கமாகிவிட்டது.*

ஆந்திராவில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் வங்க வீதி மோகனரங்கராவின் கொலையைத் தொடர்ந்து நடந்த கலவரங்களின் போது, பின்னர் தெலுகு தேச அரசாங்கம் தனது குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொண்டது எனினும், இச்சட்டத்தின் கீழ் இந்திரா காங்கிரசுக் காரர்களே சிறையிலடைக்கப் பட்டனர். பீகாரில் லோக்தளம் பி.ஜே.பி. அரசாங்கம் இதையே ஹிசார் மாவட்ட இ.காங்கிரசுத் தலைவர் ரஞ்சிலாலுக்கு எதிராகப் பயன்படுத்தியது. பின்னர் அவரை விடுதலை செய்த உயர்நீதிமன்றம் போலீசுக்கும் அரசாங்கத்திற்கும் கண்டனம் தெரிவித்தது. ஆனால் அரியானாவில் இச் சட்டத்தைத் தாராளமாகப் பயன்படுத்தியது மாநிலத்தில் இ.காங்கிரசுக்கு ஒரு கவலை தரும் விவகாரமாகிவிட்டது. இச்சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும்படி மத்திய போலீசு மந்திரியிடம் மக்களவையில் முறையிட்டுக் கொண்டார், அரியானா-சோனாபட் தொகுதி எம்.பி. தர்மபால்சிங் மாலிக். மராட்டிய மாநிலம் கச்சரோலி மாவட்ட பரிக்சத்தின் மலைவாழ் ஆதிவாசி உறுப்பினர் திரு.மல்லு கோப்பு போகாமி நக்சலைட்டுகள் தலைமையேற்கும் மலை வாழ் ஆதிவாசிகளுக்கு எதிராக போலீசு வன்முறை விவகாரத்தை எடுத்ததற்காக இச் சட்டத்தின் கீழ் சிறையிடைக்கப் பட்டார். காங்கிரசு ஆட்சியினால் கைது செய்யப் பட்ட போகாமி அப்போதும் இப்போதும் இ.காங்கிரசின் வட்டச் செயலாளர்.

இச்சட்டத்தின், 'நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கை' யில் அரசாங்கம் முன்வைத்த எல்லா மூன்று காரணங்களும் இவ்வாறு பொய்யானது. கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதிகளெனக் குற்றஞ் சாட்டப் பட்டவர்கள் மட்டுமில்லை; பத்திரிக்கையாளர்கள், குடியுரிமை இயக்கத்தவர்கள், கல்வியாளர்கள், மலைவாழ் - ஆதிவாசிகள், தொழிலாளர்கள், காங்கிரசு ஆளும் மாநிலங்களில் எதிர்கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் காங்கிரசு கட்சியினர். குற்றஞ்சாட்டப் பட்டவர்களில் நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களை விட இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் குறைவானர்கள். புதிய சட்ட நிறைவேற்றத்தைக் கூட விட்டுவிடுங்கள்; சிறு வானொலி வெடிகுண்டு வழக்குகளில் குற்றஞ் சாட்டப் பட்டவர்களில் குறைந்தது ஐந்து பேராவது சட்ட வழக்கு மன்றங்கள் என்று நாடகமாடும் இடங்களுக்குக் கூட கொண்டு வரப்பட வில்லை. (போலீசு நிலையங்களிலேயே கொல்லப்பட்டனர். - மொ.ர்).

இருந்தபோதும் அச்சட்டத்திற்குரிய காலக்கெடு முடிந்ததுட் 1987 மே-யில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அது நீட்டிக்கப்பட்டது. (1987 இல் மீண்டும் நீட்டிக் கப்பட்டது. இம்முறை பலகட்சிகள் அம்மசோதாவை எதிர்த்தன. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கையில் ''பஞ்சாப் போன்ற மாநிலங்களில்... பயங்கரவாதிகளை முறியடிக்கவும் சமாளிக்கவும் பொருட்டு இச்சட்டம் நீடிப்பது அவசியமானது மட்டுமல்ல; மேலும் பலப்படுத்தவும் வேண்டும்'' என்று மறுபடியும் அரசாங்கம் அறிவித்தது.



படிப்பகம்

www.padippakam.com

பஞ்சாபில் குற்றஞ்சாட்டப்பட்ட பயங்கரவாதிகள் எப்படியோ விடுதலையாகி விடுகின்றனர் என்ற பரவலானதொரு நம்பிக்கை இருப்பதுதான் இச்சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும் என்கிறவாதம் எழுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் வழக்குகளில் விடுதலையாவது என்ற பிரச்சினையே கிடையாது; ஏனெனில் வழக்கு விசாரணைகளே முடிவதில்லை. நாடாளுமன்றத்தில் தரப்பட்ட 1987 மே வரையிலான புள்ளிவிவரங்களின்படி பஞ்சாபில் பதிவு செய்யப்பட்ட 1487 வழக்குகளில் ஆறில் மட்டுமே தீர்ப்புக் கூறப்பட்டன; அதிலும் மூன்று வழக்குகளில் மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 30, எண்: 70. 24.8.87). இருந்தபோதும் பஞ்சாப் போலீசு அதிகாரிகளால் ஒரு தவறான எண்ணம் உருவாக்கப்பட்டது; உருவாக்கப்படுகிறது.

இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் (சிறப்பு வழக்கு மன்றங்கள்) சட்டம் என்ற பஞ்சாபுக்கான இன்னொரு சட்டம் பற்றிக் கிடைக்கும் தகவல்கள். 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 3896 வழக்குகளில், 3242 வழக்குகள் தண்டிப்பதாகத்தான் முடிந்தன. அதாவது ஏறக்குறைய தண்டிக்கப்பட்ட சதவீதம் 82. (மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 8, எண்:19, 19.8.85).

எவ்வாறாயினும் சரியென இச்சட்டமும் 1985 இல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. முதலாவதைக் கொண்டுவந்த சட்டத்துறை அமைச்சகமோ, இரண்டாவதைக் கொண்டுவந்த உள்துறை அமைச்சகமோ இவ்விரு சட்டங்களின் கீழ் நியமிக்கப்படும் வழக்குமன்றங்களிடையே வித்தியாசம் என்னவென்று தெளிவு படுத்தவேயில்லை; இந்த மன்னிக்க முடியாத அலட்சியத்தை முதலில் கவனிக்க வேண்டும். நியமிக்கப்படும் வழக்கு மன்றத்தின் விசாரணை, நீதி அதிகாரம் மீது எழும் எந்தத் தகராறிலும் உச்ச நீதி மன்றம் முடிவெடுக்க முடியாது; மத்திய அரசாங்கமே இறுதி முடிவெடுக்கும் (சரத்து9, பிரிவு3); அது எந்த முடிவும் எடுக்காமலும் போகலாம். இதன் விளைவாக குற்றமிழைத்த நூற்றுக்கணக்கான வழக்குகள் அவற்றுக்கான விசாரணை, நீதி அதிகாரம் இல்லாத காரணத்துக்காகவே வழக்கு மன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. காலவரைமுறையற்ற வகையில் விசாரணையின்றி வழக்குகள் பூட்டிக்கிடக்கின்றன.

டில்லியில் கரம்ஜித்சிங் வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். 1986 இல் அப்போது நியமிக்கப்பட்ட பி.என்.சதுர்வேதியின் வழக்குமன்றத்துக்கு அவனது வழக்குப் போனது. 1987 இல் புதிய சட்ட வடிவம் வந்த பிறகு புதிதாக நியமிக்கப்பட்ட ஆர். எல்.குக்கின் வழக்குமன்றத்துக்கு அது மாற்றப்பட்டது. ஆனால் 1987 க்கு முன்பு இழைத்த குற்றங்களை இந்த வழக்கு மன்றம் விசாரிக்க முடியாது. எனவே இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக விசாரணையே நடக்கவில்லை. சமீபத்தில் (1989 இல்) வழக்கு மீண்டும் பி.என்.சதுர்வேதியின் வழக்கு மன்றத்துக்கு மாற்றப்பட்டது. 1986 அக்டோபர் 2ந் தேதி, காந்தி சமாதி - ராஜ கட்டிடத்தில் ராஜீவ்காந்தியை சுடமுயன்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், கரம்ஜித் சிங். இந்த நோய்க் கூறான நிலைமைகளில், தமது குற்றங்கள் என்னவென்று தேடிக்கொண்டிருக்கும் குற்றவாளிகளை விட்டுத் தள்ளுங்கள்; நீதிபதிகளே தமது விசாரணை, நீதி அதிகாரம் என்னவென்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தைப் பார்த்தீர்களேயானால் சூரியனுக்குக் கீழுள்ள எதுவும் குற்றங்களாக முடியும். (இங்கே தரப்பட்டுள்ள குறிப்புகள் புதிய சட்ட வடிவத்துக்குரியவை)



*பீகார்: விவசாய -தொழிலாளர் போராட்ட அமைப்பின் தலைவர் டாக்டர் விநயன். விவசாயப் போராட்டங்கள் நடத்தியதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.*

**(1985-89) எட்டாவது நாடாளுமன்றம்**

**நீட்டிக்கப்பட்ட சட்டங்கள்**

அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம் - 1980.

**திருத்தப்பட்ட சட்டங்கள்**

பயங்கரவாதப் பாதிப்புப் பகுதிகள் (சிறப்பு வழக்கு மன்றங்கள்) சட்டம் - 1984.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் - 1980.

**புது சட்டங்கள்**

**59 வது சட்டத்திருத்தம். பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் - 1985. தேசியக் காவற்படை சட்டம் - 1986. சிறப்புப் பாதுகாப்புப் படைச் சட்டம் - 1988.**

**நிறைவேற்றவிருந்த மசோதாக்கள்**

மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவனங்கள் மசோதா. தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்தகராறுகள் (திருத்தப்பட்டது) மசோதா, குற்றவியல் முறைமை நெறி (திருத்தப்பட்டது) 1973 மசோதா (இந் நெறிமுறைமை 54 திருத்தங்கள் கொண்டது. மாநில அரசாங்கம் ஒரு விசாரணை இயக்கத்தை நிறுவுவதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கியது; இது மாநிலப் போலீசுத் தலைமை அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும்).

**1985 க்கு முன்பாகவே நிறைவேற்றப்பட்ட சிறப்பு அதிகாரமுடைய சட்டங்கள்**

அதிகாரபூர்வ ரகசியச் சட்டம் 1923. ஆந்திரப் பிரதேச கலவரங்கள் ஒடுக்கும் சட்டம் - 1948. ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரங்கள் (வடகிழக்கு) சட்டம் - 1958.

ஆயுதப்படைகளின் (பஞ்சாப் மற்றும் சண்டிகர்) சிறப்பு அதிகாரங்கள் சட்டம் - 1983. பஞ்சாப் கலவரப் பகுதிகள் சட்டம் - 1983. சண்டிகார் கலவரப்பகுதிகள் சட்டம் - 1983.

பயங்கரவாதம் மற்றும் கலவர நடவடிக்கைகள் என்பதற்கான வரைவிளக்கம் (சரத்துக்கள் 3, 4). தனியான அல்லது பொதுவான பரந்து விரிந்த செயல்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்குமாறு விரிவானது. நேரடியாகச் சொன்னால் இம்மாதிரியான விரைவிளக்கங்களின் கீழ் யாரொருவரையும் எதற்காகவும் கைது செய்யலாம். அந்த வகையில் எல்லா முறைகேடான அல்லது தவறான அம்சங்களும் இச் சட்டத்துக்குள்ளேயே அடங்கியிருக்கிறது. 'நடிப்பு அல்லது பேச்சு' மட்டுமல்ல, 'வேறு எந்த மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் அல்லது வேறு எந்த மாதிரியான முறை'யிலேயானாலும் கூட மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் மக்கள்திரள் இயக்கங்களின் வளர்ச்சிக்கேற்ப அவற்றையும் பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகளில் அடக்குவதாக இந்த வரைவிளக்கம் உள்ளது (சரத்து 4, பிரிவுகள் 2, 3). இவ்வாறு பாடல்கள், தெரு நாடகங்கள் முதல் 'வீடியோ' சினிமாக்கள் வரையிலான விரிவான நடவடிக்கைகள் அனைத்தையும் இச்சட்டம் கவனித்துக் கொள்ளும்.

ஆந்திராவில் பிரபலமான கவிஞரும் பாடகருமான கத்தார் இச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார். ஒலி - ஒளி நாடாக் (ஆடியோ, வீடியோ காசெட்டுகள்) களையும் முதன் முறையாக இச்சட்டம் சாட்சியங்களாக ஏற்கிறது. (சரத்து:15) மேலும் ஒரு மாஜிஸ்ட்ரேட் (கீழ்நிலை நீதிபதி)டினால் அறிவிக்கப்படும் இடத்தைப் போல எதுவானாலும் தடைசெய்யப்பட்ட பகுதியாக எல்லாவற்றையும் மாற்றிவிடுவதும் இச்சட்டத்

படிப்பகம்

## இரத்தக் காட்டேரிகள்

www.padippakam.com

நமது அரசியல் கட்சிகளின் குறுகிய பார்வை உண்மையில் வியக்கத்தக்கது: அடுத்த சுற்றுத் தேர்தல்களுக்கு அப்பால் அக்கட்சிகளால் பார்க்கவே முடிவதில்லை. 1962 இல் மக்கள் சீனக் குடியரசுடனான எல்லைத் தகராறு நடந்த சூழ்நிலையில் இந்தியப்பாதுகாப்பு சட்டவிதிகள் (DIR) கொண்டுவரப்பட்ட போது எல்லாக் கட்சிகளுமே அதை ஆதரித்தன. அவற்றில் பிளவுபடாத 'கம்யூனிஸ்டு'க் கட்சியும், (அப்போதுதான்) ஐக்கியப்பட்ட சோசலிசக் கட்சியும் உள்ளடங்கியிருந்தன. அதன்பிறகு விரைவிலேயே பம்பாய் நகரசுத்தித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை ஒழுங்குபடுத்திய போது மதுலிமாயும் தாதா நாயக்கும் இந்தியப் பாதுகாப்புச் சட்டவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டனர். பிறகு 1964 டிசம்பரில் அச்சட்டத்துக்கு நூற்றுக்கணக்கான 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்' கட்சி ஊழியர்கள் பலியானார்கள். 1971 இல் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (மிசா - MISA) கொண்டுவரப்பட்ட போது ஏறக்குறைய எல்லாக் கட்சிகளுமே அதை ஆதரித்தன. 1975-77 உள்நாட்டு அவசர நிலையின் போது இச்சட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் பலியாயின. எண்பதுகளில் நிலைமை கொஞ்சம் மாறியது. இப்போது இம்மாதிரியான, சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்போது, சிலவற்றில் வேறுபாடு - பிளவு இருக்கிறது: ஆனால் அச்சட்டத்தை அமுலாக்குவதில் இம்மாதிரியான வேறுபாடு - பிளவு கிடையாது. இப்படித்தான் 1980 தேசியப் பாதுகாப்புச் சட்டம், தொடர்ந்து 1984 மற்றும் 1987 இல் அதற்குத் திருத்தம் கொண்டுவந்த போதும் நடந்தது. பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்ட விவகாரத்திலும் 1985 இல் அது கொண்டு வரப்பட்டபோது சில சரத்துகள் பற்றி சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டனவே தவிர எல்லாக் கட்சிகளுமே அதை ஆதரித்தன. ஆனால் பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1987 இலும் மீண்டும் 1989-இலும் நீட்டிக்கப்பட்ட போது பல கட்சிகளும் அதை எதிர்த்தன. இருந்த போதும் அதை எதிர்த்த அனைத்துக் கட்சிகளுமே அதைப்பயன்படுத்தின. இந்த நிகழ்ச்சிப் போக்கில் இந்திரா காங்கிரசே அது உருவாக்கிய இரத்தக் காட்டேரியான அச்சட்டத்துக்கு பலியாக மாறியது.

தில் உள்ளடங்கியதாகும். 'தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைவதோ, கடந்து செல்வதோ, அதன் அருகே நடமாடுவதோ' கூட குற்றமாகும் (பயங்கரவாத தடுப்புச் சட்டம் 1987, சரத்து 5, 6, 7 மற்றும் 9). ஒரு உள்ளூர் போலீசுக்காரரோ அல்லது ஒரு பிரதம மந்திரியோ என்று அதிகாரத்திலுள்ள யாருக்காவது உங்களைப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்; நாடாளுமன்றச் சுற்றுவட்டாரம் போன்று நிரந்தரமாகத் தடை செய்யப்பட்ட பகுதிகளின் வழியே உங்களில் யாராவது ஒருவர் கடந்து செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பயங்கரவாதி என்பதாக நீங்கள் கைது செய்யப்படலாம்.

கைதான பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கம்போல ஒரு நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு முன்பாக நிறுத்தப்படுவதில்லை; அதற்குமாறாக ஒரு நிர்வாக அதிகாரியான மாஜிஸ்ட்ரேட்டு முன்பாக நிறுத்தப்படுவார். [சரத்து 40 (4) (a)] 'விசாரணை'க் காவலில் வைப்பதற்கான கெடு வழக்கமாக 90 நாட்களுக்கு மேலே இருக்காது; ஆனால் இச்சட்டத்தின் கீழ் அதை ஓராண்டு வரை நீட்டிக்க முடியும். [சரத்து 20 (4) (b)].வழக்கமாக மாவட்ட ஆட்சியாளர் (கலெக்டர்) தான் நிர்வாக அதிகாரியான மாஜிஸ்ட்ரேட்; ஆனால் டில்லி (சென்னை, மதுரை, கோவை) போன்ற நகரங்களில் போலீசுக் கமிஷனர் கூட அந்த அதிகாரம் உள்ளவர். எனவே இந்தச் சட்டத்தின் கீழ் போலீசாரால் நீங்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் முன்பு நிறுத்தப்படுவீர்கள்; அவர்கள் உங்களைத் தமது சொந்தக் காவலில் ஓராண்டுவரை வைத்துக் கொள்வதாக அடுத்தடுத்து உத்திரவு போட்டுக் கொள்ள முடியும். அப்புறம் போலீசுக்குத் தரப்படும் ஒப்புதல் வாக்குமூலம் வழக்கு மன்றத்தில் செல்லுபடியாகும்; (சரத்து 15) அதை எப்படிக் கறப்பது என்கிற முறைக்கும் அவர்களுக்குத் தெரியும்.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு பல இடங்களிலும் வெற்றுத்தாள்களில் கையொப்பம் வாங்குவதற்காக போலீசு சித்திரவதை செய்வதை வழக்கமாகப் பயன்படுத்துகின்றனர். உண்மையாகச் சொல்வதென்றால், ஒப்புதல் வாக்குமூலம் வேறு ஒருவரது பெயரைக் குறிப்பிட்டாலே கூட போதும். குற்றஞ்சாட்டப்பட்ட சகபாடி ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலே கூட அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படுவதால், அவரது வாக்குமூலம் தவறானதென நீங்கள் நிருபித்தாக வேண்டும். [சரத்து 21 (1) (c)]. வாக்குமூலம் கொடுத்தவரோ, அவரைச் சித்திரவதை செய்தவரோ நிருபிக்க வேண்டிய சட்டபூர்வக் கடப்பாடு எதுவும் கிடையாது.

ஆயுதங்கள் சட்டம், வெடிபொருட்கள் சட்டம், வெடி மருந்துகள் சட்டம், எரியும் பொருட்கள் சட்டம், அதிகார ரகசிய சட்டம் போன்ற இந்தியக் குற்றவியல் முறைமைகளின் வேறு பிறவற்றின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள குற்றங்களும் கூட இச்சட்டத்தின் படி பயங்கரவாத மற்றும் கலவரங்கள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் உள்ளடக்க முடியும்; இந்தக் குற்றங்கள் 'பயங்கரவாதம் மற்றும் கலவரம்' ஆகியவற்றுக்கு உதவும் வகையில் செய்யப்பட்டவை என்று அரசாங்கம் தீர்மானித்தாலே போதும். இவ்வாறு விசாரணை முறைமைகள் மாற்றப்பட்டு தண்டனைகளும் கூடுதலாகவும் கடுமையாகவும் மாறி விடுகிறது. குற்றமிழைக்கும் சூழ்நிலை பற்றிய இந்த சரத்துகளின் விளைவு என்னவென்றால் ஒரு சாதாரணச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் அதே குற்றம் பயங்கரவாத மற்றும் கலவரங்கள் (தடுப்பு) சட்டத்தின் கீழ்வரும்போது வேறுமாதிரியாக நடத்தப்படுவார்.

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டும் நியமிக்கப்படும் வழக்குமன்றங்கள் முதலாவது நிலையிலானவை. அடுத்து உச்சநீதி மன்றம். நீதித்துறைத் தவறுகள் நேர்வதைத் தடுப்பதற்கான விரிவான இயங்கு முறைகளுடன் கூடிய படிப்படியான - கிரமமான வழக்கு மன்றங்கள் கிடையாது. பஸ்தார் ஆதிவாசிகளின் வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய மாவட்டம் பஸ்தார்; கேரள மாநிலத்தையும் விட பெரியது. தெற்கு பஸ்தாரின் தொலைதூரத்தில் உள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்காக நியமிக்கப்பட்ட வழக்கு மன்றம் ஜகதால்பூரில் இருக்கிறது. இந்த வழக்கு மன்றத்தின் அடுத்தடுத்த ஒத்திவைப்புகளுக்கு இந்த ஆதிவாசிகள் நடந்தே வந்து போனார்கள் என்று கடந்த கோடையில் மத்தியப் பிரதேசம் மக்கள் குடியுரிமைச் சங்கம் நடத்திய ஒரு ஆய்வு காட்டியது. தூரமோ 150 கிலோ மீட்டர்கள். இதைவிடக் குறைவான சாலை வசதிகள் உடைய லடாக் மற்றும் ஜெய்சால்மர் ஆகிய இந்தியாவின் முதலாவது, இரண்டாவது பெரிய மாவட்டங்கள் கூட இச்சட்டத்தின் கீழ் வருகிறதென வைத்துக் கொள்ளுங்கள். யூனியன் பிராந்தியத் தகுதி கோரிக் கிளர்ச்சி செய்யும் லடாக் புத்தமதத்தினர் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளனர். தொலைதூர இடங்களில் வாழும் இம்மக்கள் அனைவரும் எப்போது மேல் முறையீட்டிற்காக உச்சநீதி மன்றத்துக்கு வரும்படி எதிர்பார்க்கப்படுகின்றனர். [சரத்து 19 (1)].

ஆனால் எல்லா மேல் முறையீடுகளும் உச்ச நீதிமன்றத்துக்குப் போய் விட முடியாது. "வழக்கு விசாரணையின் போது இடையிற்குறுக்கிட்டுப் போடப்படாதவை" என்கிற வகையிலான உத்திரவுகள் பற்றித்தான் உச்ச நீதிமன்ற மேல்முறையீடுக்கு போகமுடியும். (குஜராத்) பரோடாவில் நியமனம் பெற்ற நீதிமன்றம் 1988 மே-யில் தாவூத்மேனன் மற்றும் பிறரது ஜாமீன் மனுவை நிராகரித்து விட்டது. அவர்கள் உச்ச நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்தார்கள்; ஜாமீன் மனுவும் கூட ஒரு இடையிற்குறுக்கிடுப் போடப்படும் உத்திரவு தான் என்று அரசுத் தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட உச்சநீதிமன்றம் மேல் முறையீட்டை நிராகரித்தது. இவ்வாறு கீழ் வழக்கு மன்றத்தின் ஒரு உத்தரவை மறுபரிசீலனை செய்வதற்குரிய தனது அதிகாரத்தையே நாட்டின் அதி உயர்ந்த நீதிமன்றம் தானே கைவிட்டுச் சரணடைந்தது.

பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் ஜாமீன் மனுக்களைப் பொருத்தவரை முதல் வழக்கு மன்றமே கூட இறுதியான வழக்கு மன்றமாகிவிடுகிறது. உச்சநீதிமன்றத்தின் இந்த வக்கிரமான தீர்ப்பின் விளைவாக 17 மாநிலங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட 19000 பேர்களில் எவ்வளவு பேர் நாடு முழுவதும் பரவிக்கிடக்கும் சிறைச்சாலைகளில் துன்பப்படுகிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. அல்லது இந்தக் கைதிகள் தீர்ப்பு நாளுக்காக இன்னும் எவ்வளவு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதையும் நாம் அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை. நமக்குத் தெரிந்ததெல்லாம் இச்சட்டத்துக்கு பலியான வர்களில் பரோடாவைச் சேர்ந்த பதினைந்தே வயதான மனநிலை குன்றிய சிறுவனும் உள்ளடங்கியிருந்தான் என்பதுதான்!

— அடுத்த இதழில் முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

தேனியில் தேர்தல் சின்னம் வரைவதில் தகராறு: அ.தி.மு.க - விவசாய விடுதலை முன்னணி தொண்டர்கள் மோதல்! 3 பேர் கைது! - என்ற தலைப்பில் உண்மையை மறைத்து 26.4.91 அன்றைய மாலைமுரசு மதுரை பதிப்பு செய்தி வெளியிட்டது. இதோ உண்மைச் செய்தி!

25.4.91 அன்று இரவு விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் தேனி பேருந்து நிலையத்தில் ஏற்கனவே இடம் பிடித்துச் சுவற்றில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தை எழுதிக் கொண்டிருந்தனர். அப்போது அ.தி.மு.க தேனி நகர அமைப்பாளர் ராமராஜன் தலைமையில் ஒரு ரௌடிக் கும்பல் வம்புக்கு வந்தது. இது நாங்கள் 'ரிசர்வ்' செய்த இடம் எனக்கூறி தோழர்களை எழுத விடாமல் தடுத்து தாக்கினர். செல்வராசு, செல்வம், அன்னக்கொடி ஆகிய தோழர்கள் அக்கும்பலிடமிருந்து தப்பி போலீசு நிலையத்தில் புகார் கொடுக்க வந்தனர். போலீசு நிலையம் பூட்டிக் கிடக்கவே காத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் ராமராஜன் மற்றும் அவனது பரிவாரங்களுடன் இன்ஸ்பெக்டர் அருமைதுரை, சப்-இன்ஸ்பெக்டர் நாராயணன், குற்றப்பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோ ஆகியோர் ஜீப்பில் வந்திறங்கினர். புகார் கொடுக்க காத்திருந்த தோழர்களை குடிபோதையிலிருந்த போலீசு அதிகாரிகள் கண்மண் தெரியாமல் வெறிகொண்டு தாக்கினர். அவர்களால் அடிக்க முடியாமல் கை சோர்ந்த பின்தான் நிறுத்தினர்.


''வெளியே வாங்கடா உங்களை கவனிக்கிறேன்'' எனக் கத்தினான் ராமராஜன். ஆனால் இன்ஸ்பெக்டர் அருமைதுரை, ''நீங்க போங்க சார்... நாங்க இருக்கோம்ல... இவங்களை பார்த்துக்கிறோம்'' என விசுவாசமாக வாலையாட்டினர். அதன்படியே மூன்று போலீசு அதிகாரிகளும் தோழர்களை விசாரித்துக் கொண்டே தாக்கினர். ஆடைகளை கழற்றி கால்சட்டையுடன் கிரிமினல்களைப் போல லாக்-அப்பில் பூட்டி வைத்து அவமானப்படுத்தினர். பின்னர் ராமராஜனிடம் ஆளை அனுப்பி முன்னதாக கொடுக்கப்பட்டதைப் போன்ற ஒரு புகார் மனுவை தயாரித்து தோழர்கள் மீது பொய் வழக்குகளை போட்டனர். போலீசு நிலையத்தில் நடந்தது இதுதான்!

**இன்ஸ்பெக்டர்:** ஏண்டா... நீ வெளியூர்காரன்தானே? தேனியில உனக்கென்னடா வேலை? உங்க ஊர்ல போய் புறக்கணிப்பு செய்யவேண்டியதுதானே?
**தோழர்:** நெடுஞ்செழியன் இந்த ஊர்ல நிக்கிறாரே, அவர் இந்த ஊரா?
**இன்ஸ்:** அப்ப நீ நில்லுடா...!
**தோழர்:** நாங்க தேர்தலைப் புறக்கணிக்கிறோம் (அதற்குள் சப்-இன்ஸ்பெக்டர் தோழரை அடிக்கிறான்)
**இன்ஸ்:** இவனை (தோழர் செல்வராசுவை) ஆடைகளை களைந்து லாக்கப்பில் போடுங்கய்யா. (சிறிது நேரம் கழித்து வெளியில் கூப்பிடுகிறான்) நீ என்னடா சாதி?
**தோழர்:** சாதி சொல்வது எங்கள் கொள்கையல்ல ( லத்தியால் கன்னத்தில் இடிக்கிறான்)

தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்:

# போலீசின் அடக்குமுறை சித்திரவதை

**இன்ஸ்:** பெரிய... ஈ.வெ.ரா. பெரியார்ன்னு நினைப்போ? (லத்தியை தோழர்கள் பிடறியில் போட்டு இழுக்கிறான்) சொல்லுடா சாதிய! 'கேஸ் பதியணும்.
(தோழர் ''சொல்லமாட்டேன்'' என உறுதியாக இருந்தபிறகு மற்ற தோழர்களை அடித்து சாதியைக் கேட்கிறான். அவர்களும் மறுக்கின்றனர்)
**எஸ்.ஐ.நாராயணன்:** யாரையும் நம்பறதில்லைங்கறீங்க; அப்ப யாரை நம்புறீங்க?
**தோழர்:** உழைக்கும் மக்களை நம்பறோம். (என்றதும் தோழரின் பிடரியில் கையை பின்னி இழுத்துக் கொண்டே ''நீயாடா உழைக்கிறவன்'' எனக்கேட்டு அடிக்கிறான். பிறகு தோழரிடம் கொள்கையைக் கேட்கிறான். தோழர் சொன்னதும்)
**இன்ஸ்:** அடேயப்பா... ஆயுதப்போராட்டம் நடத்துறீங்களா! அப்ப நீங்க நக்சலைட்டா?
**தோழர்:** நக்சல்பாரிகளின் கொள்கையும் இதுதான்! அவர்களை ஆதரிக்கிறோம்.
**எஸ்.ஐ:** டே... தாயோலி! இப்ப உன்னை சுட்டு மல்லாத்துனா என்னடா செய்வ...?
**தோழர்:** இப்போது உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. நீங்கள் எதுவானாலும் செய்யலாம். நாங்கள் எதற்கும் அஞ்சுபவர்கள் அல்ல.
**எஸ்.ஐ:** பெர்னாண்டோ! இது ஒண்ணு போதும்டா... நக்சலைட்டுக்கு உதவி செஞ்சேன்னு 'கேஸ்' போடுறதுக்கு.
**தோழர்:** நாங்கள் நக்சல்பாரிகள் என்பதை இங்கு மட்டுமல்ல. மேடை தோறும் சொல்கிறோம். நீங்கள் 'கேஸ்' போடுவது பற்றி கவலையில்லை.



**எஸ்.ஐ:** எது சொன்னாலும் ஏறுக்குமாறா பேசுற என்னடா? (தாக்குகிறான்)
**இன்ஸ்:** அவனோட பேசிக்கிட்டிருந்தா... பேசிக்கிட்டேதான் இருப்பான் (என்று கூறியபின் தோழர்களை ரைட்டர் ரூமில் உட்கார வைத்துவிட்டு மூவரும் வெளியேறுகின்றனர்)

பின்னர் ஒரு போலீஸ்காரர் தோழர்களிடம் பெற்றோர் பெயரை கேட்கிறார். தோழர்கள் சாதியில்லாமல் பெயரை மட்டும் மொட்டையாகச் சொல்லவே... ''அசந்தாலாவது சாதியைச் சொல்லுவீங்கன்னு பார்த்தேன். உண்மையிலே உங்களைப் போன்றவங்கதான் நாட்டுக்குத் தேவை'' என்றார். அவர் சென்றபிறகு தோழர்களை கால் சட்டையுடன் லாக்-அப்பில் அடைத்தனர்.

மறுநாள் 'கியூ' பிரிவு எஸ்.ஐ.சாகுல் அமீது வந்ததும் தோழர்களுக்கு வேட்டி சட்டையை அணியக் கொடுத்து லாக்கப்பிலிருந்து வெளியே அழைத்த வந்தனர்.
**'கியூ' போலீசு:** உங்க மேல 75-வது பிரிவு கேஸ்தான் போட்டிருக்கு!
**தோழர்:** கேஸ் போட்டதைப் பற்றி பிரச்சனையில்லை. எங்களை நடத்தின விதம் தான் சரியில்லை.
**'கியூ' போலீசு:** நீங்களும் மேடையில ஏறின உடனேயே போலீசை அசிங்கம் அசிங்கமா திட்டுறீங்க. (அருகில் இருந்த போலீசைப் பார்த்து) கம்பத்தில நடந்த கூட்டத்தை படம் எடுத்தப்ப கேமிராவை பிடுங்கி பிலிமை கிழிச்சுப் போட்டானுக. நான் சாதாரண போலீசாய் இருந்தால் தாயோலிகளை அன்னைக்கே சுட்டு மல்லாத்தியிருப்பேன். ப்ரமோஷன் ஆகிற நேரத்தில் கெடுத்துக்க வேணாம்னு இருந்துட்டேன். (தோழர்களை பார்த்து) இனிமே அசிங்கமா எல்லாம் திட்டாதீங்க.
**தோழர்:** அசிங்கமாகவெல்லாம் திட்டமாட்டோம். நாய்ன்னுதான் சொல்லுவோம்.
**கியூ போலீசு:** நாய்ன்னா அவ்வளவு லேசா போச்சா....
**லோக்கல் போலீசு:** ஏண்டா... நாங்க என்ன நாலுகாலுலையா திரியறோம். உங்களை எவனும் அடிச்சா இந்த நாய்தாண்டா வரணும்.
**தோழர்:** இப்ப எங்களுக்கு என்ன செஞ்சீங்க. இதுக்கு என்ன அர்த்தம்.
**கியூ போலீசு:** உங்களுக்கு இதுதான் முதல் முறையா நடந்துருக்கு.
**தோழர்:** ஒவ்வொரு ஸ்டேசன்லேயும் ஒவ்வொருவருக்கும் எத்தனை தடவை 'முதல் முறை' நடந்திருக்கும்?

பின்னர் தோழர்களை விசாரிப்பதை விடுத்து கோர்டிற்கு அழைத்துச் செல்கின்றனர். போலீசு நிலையத்திலிருந்து வெளியே செல்லும்போதும், கோர்ட்டிற்குள் செல்லும் போதும் தோழர்கள் உறுதியுடன் கோசமிட்டுச் சென்றனர். (பெரிய குளம்) கோர்ட்டில் தோழர்களை ஜாமீனில் எடுக்கச் சென்ற பொழுது வி.ஏ.ஓ., ஆர்.ஐ; தாசில்தார் போன்றவர்களிடம் கையெழுத்து வாங்க வேண்டுமென இழுக்கடித்ததால் ஏழு நாட்களுக்குப் பின்னர் தோழர்களை ஜாமீனில் எடுக்க முடிந்தது.

— தகவல்: வி.வி.மு. பிரச்சாரக்குழு, தேனி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 .d.No.TN/MS(S) 344
www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

ஆபாசம், வக்கிரம், அருவெறுப்பு என திராவிட இயக்கத்தின் அரசியல் தரந்தாழ்ந்து சீரழிந்து கொண்டே போகிறது. இதோ இங்கே, ஜெயலலிதா போட்டியிடும் காங்கேயம் தொகுதியில் ஒரு தொண்டர். ஜெயலலிதாவின் வருகையை ஒட்டி பழனிசாமி என்ற இத்தொண்டர் தனது தலைமுடியை இரட்டை இலை சின்னம் போன்று வெட்டிக் கொண்டார். ஓட்டுச் சீட்டில் முத்திரை இடுவது போல குறி வைத்துக் கொண்டார். தொண்டர்களானால் காலிலே விழுந்து கும்பிடுவது; தீக்குளிப்பது; மாரிலே அடித்துக் கொண்டு கதறுவது. தலைவியோ குளுகுளு கார், முழுவதும் பூக்களால், திராட்சை பழத்தால் அலங்கரிக்கப்பட்ட மேடை.

ஜெயலலிதா - எம்.ஜி.ஆரின் பகட்டுத்தனமான, கோமாளி அரசியல்தான் இப்படி மாற்றிவிட்டது என்று கருணாநிதி - வீரமணி கும்பல் கூறுகிறது. தாஏதோ அரசியல் மேதாவிகள் என நடிக்கிறது. அங்கேயும் உடம்பு முழுவதும் உதயசூரியன் படம். அலகு குத்திக் கொள்வதும், காலில் விழுவதும், தீக்குளிப்பதும் குறைவில்லை; போகட்டும். இதைவிட அரசியல் அநாகரிகத்தையும் செய்கிறது கருணாநிதி கட்சி. இதே எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் பிளவுபட்ட பிறகு எம்.ஜி.ஆரை சேடிஸ்ட், பாசிஸ்ட், கோமாளி என்றும் இனதுரோகி என்றும் எவ்வளவோ தாக்கியவர்தான் கருணாநிதி. ஆனால் இதோ ஓட்டுப் பொறுக்குவதற்காக, எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் கைகோர்த்து நடப்பதாக சுவரொட்டி, சுவரெழுத்து; எம்.ஜி.ஆர். கட்சிக்கொடி ஏந்தி ஊர்வலம். இத்தனையும் கருணாநிதி தொகுதியில் அவரது முன்பாகவே, அவரது யோசனைப்படியே நடக்கிறது. கொஞ்சமும் அரசியல் நாணமற்றதென அவர் கருதவில்லையா?



தொண்டர்களை பல்வேறு வகையிலும் இழிவுபடுத்துவதோடு, இப்படி முட்டாள்களாக்கி மகிழும் இந்த ஓட்டுப் பொறுக்கிக் கூட்டத்தை இனிமேலும் விட்டு வைக்கலாமா?

படிப்பகம்